# ரமணிசந்திரன்

# பூங்காற்று



# பூங்காற்று



1

''அண்ணா!''

நந்தினியின் குதூகலக் குரலை இனம் கண்டு மகிழ்ச்சியுடன் திரும்பினான் மனோகரன்.

''நந்தும்மா!'' ஓடி வந்தவன் அவளது பெட்டி, கூடைகளை இறக்கலானான்.

''இவ்வளவுதானாடா? ம்... நேரே நில், பார்க்கலாம். முன்னைவிட, கொஞ்சம் மெலிந்து இருக்கிறாய். நான் கொஞ்சம் தொந்தி போட்டு விட்டேன், இல்லையா? உன் அண்ணியின் சமையல் ஜாலத்தில் நீயும் உப்பிடுவாய், பார் நந்து! உன் மேல், உன் அண்ணிக்கு எவ்வளவு பிரியம் தெரியுமா? உனக்காக அவள் பாயசம், கல்கண்டுச் சோறு, பாதாம் அல்வா என்று நிறையச் செய்து வைத்திருக் கிறாள்.''

திகட்டும் போலத் தெரிகிறதே என்று எண்ணிய மனதிற்கு ஒரு குட்டுப் போட்டுக் கொண்டு, ''ஒரே இனிப்பாக அடுக்குகிறீர்களே, அண்ணா!'' என்று சிரித்தாள் நந்தினி.

''இந்த இனிப்பெல்லாம் ஒரு பிரமாதமா? இதற்கெல்லாம் மேலான இனிப்பும் இருக்கிறது. அதில் அப்படியே அசந்து போவாய் பாரேன்,'' என்று கூறி, சுமை தூக்கும் கூலியை அழைத்தான் அண்ணன்.

கூலியாளிடம் பேரம் பேசிய அண்ணனைச் சிறு வியப்புடன் ஏறிட்டாள் தங்கை.

ரொம்பவும் 'ஃபிகர்' பார்க்கிறவன் மனோகர்.

இடுப்பு பெல்ட் கொஞ்சம் இறுகினாலும் பட்டப் பட்டினி கிடந்து மெலிவான். மீண்டும் பழைய அளவுக்குச் செல்லும்வரை அதே பேச்சாய் இருப்பான்.

இப்போது தன் தொப்பையைப் பற்றிப் பேசிச் சிரிப்பது ஆச்சரியத்தைத் தந்தது அவளுக்கு.

தாடையில் அதிகரித்து இருந்த சதையாலோ என்னவோ, சற்று அசடு போலவும் தோற்றம் அளிக்கிறானே!

''ச்சி'' என்று தன்னையே குட்டிக் கொண்டாள் நந்தினி. (அண்ணனை அசடு போல என்று எண்ணியதற்காகவாம்.)

''என்னம்மா இது?''

''அ... அதுவாண்ணா? வந்து ஒரு சிநேகிதி சொன்ன காரியம் ஒன்றை அடியோடு மறந்து போனேன்!'' என்று சமாளித்தாள் தங்கை.

பக்கென்று சிரித்துவிட்டு, ''அதற்காகச் சின்னப் பிள்ளை போல இந்தப் பட்டுத் தலை வலிக்கக் குட்டிக் கொண்டாயாக்கும். அசட்டுப் பெண், வா போகலாம்,'' என்று முன்னே நடந்தான்.

அசடு நானாகி விட்டேனோ என்று திகைத்தபடியே பின் தொடர்ந்தாள் தங்கை.

செல்லும் வழியில் டாக்சியில், ''அந்த இன்னொரு பிரமிக்க வைக்கும் இனிப்பு என்ன அண்ணா?' என்று துளைத்துப் பார்த்தாள்.

சொல்லாமல், ''ஊகூம் அப்புறம்தான்,'' என்று ஒரேயடியாக மறுத்து விட்டான் அண்ணன்.

அண்ணனின் திருமணம் முடிந்து மூன்று மாதம் முடிந்து விட்டது. ஒரு வேளை...



''ஆங்... கண்டு பிடித்து விட்டேன். கண்டு பிடித்தே விட்டேன். குட்டி மனோகரன் வரப் போகிறான். அது தானே. அதுதானே அண்ணா?'' இருக்கையிலேயே துள்ளினாள் நந்தினி.

முகம் சிவந்த போதும், ''எல்லாம் பிறகு...'' என்று முத்தாய்ப்பு வைத்துவிட்டு, தங்கையிடம் கல்லூரி விஷயங்களைப் பற்றி விசாரலானான் அண்ணன்.

'சரக்கு மலிந்தால் சந்தைக்கு வந்துதானே ஆக வேண்டும்!' என்று நினைத்த நந்தினியும், அந்தப் பேச்சை விட்டுவிட்டு அண்ணனுக்குப் பதில் கூறத் தொடங்கினாள்.

அண்ணி மாலினியிடம் அவ்வளவாக வித்தியாசம் தெரியவில்லை. சற்றே மெலிந்து இருந்தாள் என்றுகூடச் சொல்லலாம்.

''வா நந்தினி, வா,'' என்று வாய் நிறைய வரவேற்றவளிடம், ''என்ன அண்ணி, உடம்பு சரியில்லையா? ஏன் இந்த மெலிவு?'' என்று கரிசனமாய்க் கேட்டபடி அருகில் சென்றாள் நந்தினி.

''அதொன்றும் இல்லை. எனக்கு மிச்சம் மீதி வைக்காமல் உன் அண்ணன் சட்டி பானையெல்லாம் வழித்து விடுவதால் வந்த வினை, அவ்வளவுதான்!'' என்று கணவனைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்தாள் மாலினி.

''பயங்கரமான பச்சைக் கலர் - அதிலும் ஆளை அடிக்கிற மிட்டாய்ப் பச்சைக் கலர்ப் பொய் இது. நந்தும்மா, இவள் சுவை பார்த்து முடித்து விடுகிற மிச்சம்தானே எனக்குக் கிடைப்பதே!'' என்று நகைத்தான் மனோகரன்.

நந்தினியின் முகம் மலர்ந்தது.

திருமணத்தின் போது அவசர அவசரமாகப் பார்க்க அண்ணியின் குணம் எப்படியோ என்று அவளுக்குச் சிறு கலக்கம் இருந்தது.

இப்போது கேலியும், கிண்டலுமாக இருவரும் பேசியதைப் பார்க்கவும் அந்தக் கவலை தீர்ந்தது. அண்ணி புயல் அல்ல, பூங்காற்றுதான் என்று நிம்மதி உண்டாயிற்று.

''இந்தப் பாழும் கண், உங்கள் பேச்சை நம்பிவிட மாட்டேன் என்கிறதே, அண்ணா!'' என்று வருத்தம் போலப் பேசித் தானும் கேலியில் கலந்து கொண்டாள்.

பார்த்துப் பார்த்துப் பரிமாறினாள் மாலினி.

''சேர்ந்தே சாப்பிடலாம்,'' என்ற நாத்தனாரின் கோரிக்கையை மறுத்துவிட்டு, ''இன்னும், இன்னும்...'' என்று படைத்தாள்.

மெய்யாகவே படைத்தாள்.

நந்தினிக்கு மூச்சு முட்டிற்று.

இனிப்பில் விருப்பமற்ற அண்ணன், பாயசத்தை அண்ணி ஊற்ற ஊற்ற உறிஞ்சிக் குடிப்பதை ஆச்சரியத் துடன் வேடிக்கை பார்த்தாள்.

அண்ணனுக்கு ஊற்றி முடித்து விட்டு, அண்ணி தன் பக்கம் திரும்பவும், அவசரமாகத் தட்டில் கையைக் கழுவி விட்டு எழுந்து ஓடினாள்.

''பாருங்களேன், சின்னப் பெண் இவ்வளவு குறைவாகச் சாப்பிட்டால் உடம்பு உலர்ந்து போகாதா? தன் உடம்புக்கு எது தேவை என்று கூடத் தெரியவில்லையே!'' என்று அண்ணி அங்கலாய்ப்பது இவள் காதிலும் விழுந்தது.

''அன்பான அண்ணி!'' என்று மனம் குளிராமல் உள்ளே ஏதோ நெருஞ்சியாக நெருடியது.

''என்ன செய்வது? தாயில்லாப் பெண். இனி எல்லாம் உன் கையில்தான் இருக்கிறது மாலு!'' என்ற அண்ணனின் குரல் அந்த உணர்ச்சியை அதிகப்படுத்தியது.

ஏனெனில் இது மூன்றாவது தடவை.



ரெயில் அழுக்கெல்லாம் போக, கற்றைக் கூந்தலில் 'ஷாம்பூ' தேய்த்துக் குளித்துவிட்டு வந்தபோது, ''காய்ச்சி வைத்த எண்ணெய் குளிரக் குளிர ஊற வைத்துக் குளிக்காமல் சூட்டை இழுக்கிறாள் பாருங்கள். 'ஷாம்பூ' சூடு என்று தெரியாதா?'' என்றது முதலாவது.

''காய்ச்சிய எண்ணெய் வேண்டுமா?'' என்று ஒரு தரம் மாலினி அவளிடம் கேட்டது உண்மைதான்.

ஆனால், தனது அடர்த்தியான நீண்ட முடியில் எண்ணெய் தேய்த்து, அது போகச் சீயக்காய் தேய்த்துக் குளிப்பது என்றால், நந்தினிக்கு எப்போதுமே கஷ்டம்தான்.

''வேண்டாம் அண்ணி!'' என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டுக் குளியல் அறைக்குள் புகுந்துவிட்டாள்.

ஆனால், இது அண்ணன்வரை இப்படிப் போகும் என்று அவள் எண்ணவே இல்லை.

ஆயினும் தன் மேல் உள்ள அன்பினால்தானே என்று அப்போது சமாதானம் செய்து கொண்டாள்.

அடுத்தது சாக்கோபார் வாங்கியபோது.

''தெருவில் வாங்கித் தின்பது - அதுவும் ஐஸ்கிரீம் தின்பது கெடுதல் என்றுகூடத் தெரியாத பச்சைக் குழந்தையாக இருக்கிறாளே!'' என்று கன அக்கறையாக வருத்தப்பட்டாள் அண்ணி.

ஒரு சாக்கோபாரில் - அதுவும் ஒரு பெரிய கம்பெனி சரக்கில் அப்படி என்ன கெடுதல் வந்துவிடும் என்று ஆத்திரமாகக் கேட்கத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் நந்தினி.

நாத்தனாரின் மேல் உள்ள அன்பினால் ஏற்படுகிற அக்கறையால் வருகிற வார்த்தை. இதை எதிர்த்துப் பேசுவது சரியல்ல... என்று எண்ணியவளாக இருந்தாள்.

இப்போது மூன்றாம் முறை.

'நான் என்ன வடிகட்டின முட்டாளா? சின்ன வயதில் இருந்து என்னைப் பார்த்துக் கொள்ளவில்லையா?' என்று பிலுபிலு என்று கொட்ட நினைத்த மனதை அடக்கிக் கொண்டு, எதையும் கவனியாதவள் போல் முன் அறைக்கு நகர்ந்தாள் அவள்.

மாலையில் காபிக்குப் பதிலாக ராகிமால்ட் கலந்து தருகிறேன் என்றபோது நந்தினி முதல் தடவையாக எதிர்த்தாள்.

''ஒரு கப் காபியில் உயிர் போய்விடாது அண்ணி. காபி இல்லாவிட்டால் எனக்குத் தலை வலிக்கும். காபியே கொடுங்கள்,'' என்று சற்று அழுத்தமாகவே அவள் கூறவும், அதற்கு மேல் மாலினியும் மறுக்கவில்லை.

காபியை நந்தினியிடம் கொடுத்துவிட்டுக் கணவனைக் குறிப்பாக அவள் பார்த்ததைக் கவனியாதவள் போல் காட்டிக்கொண்டு, ''உங்கள் கைக்குத் தனி மணம் அண்ணி. காபி வெகு சுவை!'' என்று அண்ணிக்கு ஒரு ஐஸ் வைத்தாள் நந்தினி.

''இங்கே என்றால் சரிதான். நானும் உன் அண்ணனும் விட்டுக் கொடுத்து விடுவோம். வருகிறவனுக்கு இதெல்லாம் பிடிக்காது என்றால் என்ன செய்வாய் நந்தினி?'' என்று கேலி போலக் கேட்டாள் மாலினி.

''பிடிக்க வைப்பேன்!'' என்றாள் நந்தினி மிகுந்த தன்னம்பிக்கையுடன்.

''இருபத்தைந்து வயது முரட்டுக் காளை அப்படி உன் விருப்பம்போல ஆடி விடுவானாக்கும். சரிக்குச் சரியாக, ஏன், உனக்கு மேலாகவே மல்லுக்கட்டித் தனக்குப் பணிய வைப்பான்.''

''அப்படியானால் முரட்டுக்காளைக்குப் பதிலாக ஒரு கிழட்டு மாட்டைக் கட்டிக் கொண்டு பெருமாள் மாடாகி விட்டால் போகிறது!'' என்று கிளுகிளுத்துச் சிரித்தாள் நந்தினி.



ஆனால் திடீரென்று தன் சிரிப்பு தவிர, வேறு சத்தமில்லாது போகவும் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

அண்ணியின் முகத்தில் வெற்றிக் குறி.

அண்ணன் மனோகரன் முகத்தில் வியப்பும் மதிப்பும், ஆச்சரியமுமான கதம்பம்.

அவளுக்குத் தெரியாமல் அண்ணனும் அண்ணியும் பேசிய இரகசியத்தில் காபி வெந்நீரின் சுவையாகி விட்டது.

சட்டென மூண்ட சினத்தில், ''பெரிய பாட்டிக் கிழவி போலப் பேசுகிறீர்களே, அண்ணி. வயதைப் பார்த்தால் என்னை விட நீங்கள்தான் ஒரு மாதம் இளமை. தெரியுமா?'' என்றாள்.

இவள் எதிர்பார்த்தது போலத் திருதிரு என்று முழிக்காமல், ''இதெல்லாம் கற்றுக் கொடுக்க எனக்கு ஓர் அம்மா இருக்கிறார்கள் தெரியுமா? சமையல், தையல், உடம்பைக் கவனிப்பது எப்படி என்று எல்லாம் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள். இதில் உனக்கு என்ன தெரியும் சொல்லேன்!'' என்று இவளையே மடக்கி விட்டாள் மாலினி.

இப்போது நந்தினிதான் முழித்து நின்றாள்.

''இதெல்லாம் எதுவுமே தெரியாமல் வளர்த்து விட்டேனே!'' என்று நெற்றியில் தட்டிக் கொண்டான் மனோகரன்.

''அண்ணா! இன்றுவரை வகுப்பில் முதல் ஆள். இப்போது முதல் வகுப்பில் பாஸ் பண்ணப் போகிறேன். எதுவும் தெரியாது என்று சொல்லாதீர்கள்!'' என்றாள் நந்தினி.

''ஓகோ! லிட்ரேச்சர் பி.ஏ. வகுப்பில் சமையல், தையல் எல்லாம் சொல்லித் தருவார்களா? எனக்குத் தெரியாதே!'' என்று கேலி பேசிச் சிரித்தாள் மாலினி.

பதில் கூறி மடக்க முடியாமல், ''செய்து தருவதற்கு அன்பான அண்ணன் இருக்கும்போது, அதை எல்லாம்

கல்லூரியில் செலவு செய்து படிக்க வேண்டுமா என்ன?'' என்று இனிய குரலில் கூறிச் சமாளித்தாள் நந்தினி.

மேலும் அண்ணிக்காரி எதையாவது கிளப்பி விட்டு விடக் கூடாதே என்ற பயத்தில், ''வெகு இனிப்பான சேதி வைத்திருப்பதாகச் சொன்னீர்களே, அது என்ன அண்ணா?'' என்று பேச்சை மாற்ற முனைந்து கேட்டாள்.

ஆனால், முதல் தடவையாக அண்ணன் பேசத் தயங்கித் தடுமாறவும் அவளுக்கு வியப்பாக இருந்தது.

''என்ன அண்ணா! இனிப்பான சேதி என்றுதானே சொன்னீர்கள். அதுவும் மிகவும் இனிப்பான சேதி. உங்கள் தயக்கத்தைப் பார்த்தால் கசக்கும்போல் அல்லவா தெரிகிறது!'' என்று சிரித்தாள் அவள்.

மென்று விழுங்கிய கணவனை ஓரக் கண்ணால் பார்த்து, ''அதிமதுரம் தெரியுமா, நந்தினி? சுவை கசப்பாகத்தான் தெரியுமாம். ஆனால், சர்க்கரையை விட ஐம்பது மடங்கு அதிக இனிப்பாம். உன் அண்ணனின் சேதி கூட வெளியே கசப்பு போலத் தோன்றினாலும், உண்மையில் அதிக இனிப்புதான்!'' என்றாள் மாலினி.

முகம் மலர, ''அதேதான் நந்தும்மா. அதாவது...'' என்று மனோகரன் தொடங்கிய போது, குறுக்கிட்டு மீண்டும் பேசினாள் மாலினி ''என்ன அவசரம்? இரண்டு மூன்று நாள் பொறுத்துப் பார்த்து, நம் கணிப்பு சரிதானா என்று தெரிந்து கொண்டு அதன் பிறகு நந்தினிக்கு உங்கள் முடிவைச் சொல்லலாமே,'' என்றாள் இனிய குரலில்.

மனைவியின் சொல்லை இம்மியும் மீறாமல் வாயை மூடிக் கொண்ட அண்ணனைப் பிரமிப்புடன் பார்த்தாள் நந்தினி. ஏனோ காற்றே இல்லாதது போல மூச்சு அடைத்தது அவளுக்கு - மின் விசிறி முழு வேகத்தில் ஓடியும்கூட.





2

அது என்ன சேதியாக இருக்கக் கூடும்?

முன்பானால் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று அண்ணனிடம் அடம் பிடித்திருப்பாள் நந்தினி.

''எதற்கும் சின்னப் பிள்ளைபோல!'' என்று சொல்லிக் காட்டும் அண்ணிக்கு மீண்டும் அவல் கொடுக்க விருப்பம் இல்லாமல் அடக்கிக் கொண்டாள்.

வரும்போதே அண்ணனிடம் பிடிவாதம் பிடித்து இருக்க வேண்டும். அண்ணனுக்குத்தான் எதையும் அதிக நேரம் மறைக்க முடியாதே என்று நினைத்தது தப்பாகப் போயிற்று என்றெல்லாம் எண்ணினாள்.

ஒருவேளை திருமணம் என்று ஏதேனும்...

எல்லாப் பத்தொன்பது வயதுப் பெண்களையும் போலவே அவளுக்கும் நாணமும் மகிழ்ச்சியுமாக முகம் சிவந்து போயிற்று.

ஆனால், அதைச் சொல்ல மூன்று நாள் கவனிப்பும் கணிப்பும் எதற்கு?

அவசியமே அற்ற அவகாசம்.

பின்னே இனிப்பான சேதி என்பானேன்?

அல்லது, வேலை ஏதாவது பார்த்து வைத்திருக்கிறார்களா?

ஊகூம். அதுவும் இராது. அதற்கும் இந்த மூன்று நாள் அவகாசம் அவசியம் இல்லைதான்.

அண்ணனின் குடும்பம் பெருகுவதாக இருக்குமோ என்று வரும் வழியில் நினைத்தது என்றால், அதை வெகு சாதாரணமாக இன்னமும் எட்டு மாதத்தில் என்று அண்ணியே சொல்லி முடித்து விட்டாள்.

பிறகு என்ன?

எரிச்சலோடு திரும்பிப் படுத்தாள் நந்தினி.

வரட்டுமே, தானாக வரட்டுமே.

ஒரு மூன்று நாள் பொறுத்துக் கொள்ளும் சக்தியற்ற வளா இந்த நந்தினி?

விட்டுத் தள்ளு.

இப்போது அதைவிடப் பெரிய விஷயம் இருக்கிறது.

இன்று வரையில் இந்த அண்ணன் மனோகரன் மிகவும் பிரியமானவன்.

நந்தினியின் எட்டாவது வயதில் மாண்ட அன்னையின் நினைவுகூட அவளை வாட்டாதபடி கவனித்துக் கொண்டவன்.

தொடர்ந்து மறைந்த தந்தையின் நினைவுகூட நந்தினியை அதிகம் பாதித்தது இல்லை.

சினிமாக்களில் வருவதுபோலத் தலைவாரி, சோறு அள்ளித் தந்து, பாடம் சொல்லிக் கொடுத்து... என்று இல்லைதான்.

ஆனால் இருவருக்கும் இடையே ஆழமான அன்பு இருந்தது.

ஒருவர்மீது மற்றவர் வைத்திருந்த அன்பைஇருவருமே அறிந்தே இருந்தார்கள்.

தட்டுமுட்டுச் சாமான்களின் விலை, அப்பா வைத்துப் போன பணம் என்று எல்லாவற்றையும் பாங்கில் போட்டு வட்டியில் படிக்கும்படி இரு வழியில் உள்ள உறவுப் பெரியவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். தந்தை வேலை செய்த அலுவலகமும் படிப்புக்கு உதவி செய்ததால் பணப் பிரச்சினை எழவில்லை.

ஆஸ்டல் வாசம்தான்.

லீவு நாட்களில் சித்தப்பா வீடு, மாமா வீடு, அத்தை வீடு என்று தங்கினாலும், இருவருமே மற்ற யாரிடமும் மனம் ஒட்டிப் பழகியது இல்லை.

நந்தினியுடைய பெற்றோர் காதல் திருமணம் செய்த வர்கள் - அதுவும் இரு வீட்டாரின் பிரியமும் இல்லாது செய்தவர்கள்.



எனவே பொறுப்பை ஏற்றுச் செய்தபோது யாருக்கும் மிகுந்த ஒட்டுறவு என்பது ஏற்படவில்லை. மேலும், அவரவர் குடும்பத்தையும் சுமந்தாக வேண்டும் இல்லையா?

ஓர் ஏழு ஆண்டுகள்.

விதியே என்று இவர்கள் அங்கே செல்ல, கடனே என்று அவர்களும் சகித்தார்கள்.

தன் பதினைந்தாவது வயதில் மற்ற உறவுப் பெண் களைக் காட்டிலும் நந்தினி அழகியாக மலர்ந்தது உரசலைக் கிளப்பியது.

நல்ல வேளையாக அதே சமயத்தில் தன் படிப்பு முடிந்து மனோகரன் வேலை பார்க்கத் தொடங்கி விடவே, அவனது குடியிருப்பு நந்தினிக்கும் வீடு ஆயிற்று.

லீவு என்று வந்துவிட்டால் தூள் பறக்கும்.

மனம் இருந்தால் சமையல் புத்தகத்தை வைத்துக் கொண்டு எதையாவது கிண்டுவாள்.

கதைப் புத்தகங்கள் இருந்து விட்டால், இருவருக்கும் ஓட்டல் சாப்பாடுதான்.

பேச்சுக் கலையில் பன்னிரண்டு மணிவரை கூட விழித்திருப்பார்கள்.

ஞாயிறானால் சினிமா, கடற்கரை...

சிரிப்பும் விளையாட்டுமாகக் கட்டுப்பாடற்ற குதூகல வாழ்க்கை.

இப்போதோ தோழனும் தந்தையுமாக இருந்த அண்ணன் எங்கோ போய் விட்டது போல நந்தினி உணர்ந்தாள்.

தன்னந்தனியாக இருட்டில் மாட்டிக் கொண்டது போல ஓர் உணர்வு உண்டாகி உறுத்தியது.

இதை ஒப்பவும் முடியாமல், ஒன்றும் இல்லை என்று தள்ளவும் முடியாமல் திகைத்தாள் அவள்.

ஒரு பெண்ணால் - அண்ணியால் அண்ணனின் மனதை வித்தியாசப்படுத்த முடியும் என்று அவள் கொஞ்சமும் எண்ணியிருக்கவில்லை.

ஆனால்...

இப்போதும் அண்ணன் மாறிவிட்டதாக அவளால் எண்ண முடியவில்லை.

''நந்தும்மா!'' என்ற குழைவான அழைப்பிலும் கேலிப் பேச்சிலும் ஒரு வித்தியாசத்தையும் காணவில்லையே.

அவனது அன்பு குறைந்து விட்டதாகச் சொல்லவே முடியாது.

ஆனால், நந்தினியிடம் ஏதேதோ குறைகள் இருப்ப தாகக் கற்பனை செய்து கொண்டு, அதற்குத் தானேதான் காரணம் என்று அவன் வருந்துவது தெரிந்தது.

இத்தனை நாட்கள் கண்ணில் படாத குறைகள் (தன்னிடம் எந்தக் குறையும் இருப்பதாக நந்தினி ஒப்புக் கொள்ளத் தயார் இல்லைதான்) இன்று அண்ணன் கண்ணில் படக் காரணம்?

அண்ணி!

இந்த அண்ணியின் மனதை வசியப்படுத்தினால் எல்லாம் பழைய மாதிரி ஆகிவிடலாம்.

ஆனால் முடியுமா?

ஏன் முடியாது?

சிடுமூஞ்சி என்று பெயர் எடுத்திருந்த ரூம்மேட் ஸ்டெல்லாவையே பிரிய சினேகிதியாக மாற்றி விட்ட வளுக்கு இந்தப் பிளஸ் டூ ஃபெயில் எம்மாத்திரம்?

நம்பிக்கையோடு திரும்பிப் படுத்து உறங்கலானாள் நந்தினி.

தனது விஷயம் மட்டும் என்றால் தீர்மானம் செய்வதும் செயல்படுத்துவதும் எளிதுதான்.

ஆனால், அது மற்றவர்களைப் பொறுத்தது என்றால் அதற்கு அவர்களும் இடம் கொடுக்க வேண்டும் இல்லையா?

அண்ணிக்காரியை வசியம் செய்ய முனைந்த நந்தினி வெற்றுச் சுவரில் முட்டிக் கொள்வது என்றால் என்ன என்பதை அடுத்து வந்த சில தினங்களில் நன்றாக அறிந்து கொண்டாள்.



அது மட்டுமல்ல.

உருகுவது போலக் காட்டிக் கொண்டே மட்டம் தட்டுவது, வெளிக்குத் தெரியாமலே கத்தரிப்பது, சிரித்துக் கொண்டே கழுத்தை அறுப்பது... இவற்றை எல்லாம் கூடப் பிரிய அண்ணனுடைய அருமை மனைவி எவ்வாறு செவ்வனே செய்கிறாள் என்பதைக் கண்டு மலைத்தாள்.

மறுநாள் காலையில் எழும்போதே நந்தினிக்கு மனம் கலைந்து போயிற்று.

''பாருங்கள், ஏழு மணி வரை இப்படித் தூங்கினால் போகிற இடத்தில் மாமனார், மாமியார் என்று இருந்து விட்டால் சொல்லாலே கொன்று விட மாட்டார்களா? இனி விழித்துக் குளித்து வேலைக்குப் போகும் கணவனுக்குச் சாப்பாடுதான் செய்ய முடியுமா?'' என்றது மாலினியின் குரல்.

''எட்டு மணி வரை தூங்கினாலும் எழுப்பாமல் ஓட்டலில் டிபன் வாங்கி வந்து கொடுத்து அவளை நான் தான் கெடுத்து விட்டேன், மாலு!'' என்று வருந்தியது அண்ணன் மனோகரனின் குரல்.

தேர்வுக்குக் கண் விழித்துப் படித்த பெண் பின்னர் லீவு நாளில் கொஞ்சம் தூங்கினால் என்ன ஆகிவிடும்? கல்லூரியில் எல்லாம் ஆறு மணிக்கு விழித்துப் படிக்க வில்லையா? இது ஒரு பெரிய குறை போல அண்ணி கிளப்பிவிட வேண்டுமா?

இப்போதுகூட எழாமல் எட்டு மணிக்கு எழுந்தால் இவள் என்ன செய்து விடுவாள் என்று முரண்டியது மனது.

சும்மாவே சிறுபிள்ளை போல, சின்னக் குழந்தை போல என்று தம்பட்டம் இல்லாத குறையாய் டாம் டாம் அடித்தாகிறது. அதையே வலியுறுத்துவது போல நடந்து கொள்ளக் கூடாது என்று எண்ணி எழுந்து சென்றாள் அவள்.

முகம் கழுவி விட்டு வந்ததுமே காபியை நீட்டிய மாலினியின் முகத்தை உற்றுப் பார்த்தாள் நந்தினி.

சற்று முன் குறை பேசியவள் இவள்தான் என்று சத்தியம் செய்தால்கூட நம்ப முடியாது.

காபி தம்ளரைக் கழுவி வைத்துவிட்டு, ''ஏதாவது உதவி செய்யட்டுமா, அண்ணி?'' என வினவினாள் நந்தினி.

வியந்த பார்வையுடன், ''எனக்கேன் உதவி?'' என்று பதிலுக்குக் கேட்டாள் மாலினி.

''இல்லை... இது மாதிரி நேரத்தில் வாந்தி, அசதி என்று...''

''அதெல்லாம் முன் பிறப்பில் பாவம் செய்தவர்களுக்குத் தான் வரும். எனக்கு ஏன் வருகிறது? அதெல்லாம் ஒன்றும் இல்லை!'' என்று அடுப்பிடம் திரும்பினாள் மாலினி.

சற்று நேரம் நின்று பார்த்துவிட்டு வாயில்புறம் சென்றாள் நந்தினி.

அண்ணனோடு சேர்ந்து அமர்ந்து காலையில் உண்ணும் போது, ''நல்ல சுவை அண்ணி, இந்தப் பருப்புக் கூட்டும் சப்பாத்தியும்!'' என்று ஐஸ் வைத்தாள்.

''அம்மா கற்றுக் கொடுத்த பாடம்... ம் உனக்கு வருகிறவனும் இப்படிச் சொல்ல வேண்டுமே!'' என்று பெருமூச்சு விட்டாள் மாலினி.

''மதியம் நான் சமைக்கட்டுமா?'' என்று கேட்டு விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் நந்தினி.

இந்தச் சுவையைப் ''பீட்'' பண்ண முடியாதே.

சலனமே இல்லாமல், ''ஓ! செய்யேன். இன்று பக்கோடா குருமாவும் கத்தரிக்காய் எண்ணெய் மசாலாக் கறியும் வைக்கலாம் என்று இருந்தேன். நீயே செய்து விடேன்,'' என்றாள் மாலினி.

''ஐயய்யோ! அதெல்லாம் எனக்குச் செய்ய வராது அண்ணி. சும்மா லைட்டாகப் புளி சாதம், சிப்ஸ் செய்யலாம் என்று நினைத்தேன்.''



''நாம் என்ன 'பிக்னிக்'கா போகிறோம்? புளியோ தரையும் சிப்சுமாக சிம்பிளாகப் பண்ணுவதற்கு? வகை வகையாகச் சமைக்கத் தெரியாது என்றால், பிறகு என்ன செய்யப் போகிறாய்? கணவனுடைய நெஞ்சை அடைய அவன் நாக்கு வழியாகத்தான் செல்ல வேண்டும் என்பார்கள்.''

பொறுமையிழந்து, ''எல்லோருமே சாப்பாட்டு ராமன் களாக இருக்க மாட்டார்கள், அண்ணி!'' என்று வெடுக் கெனச் சொன்னாள் நந்தினி.

''யாரைச் சாப்பாட்டு ராமன் என்கிறாய்?'' என்று ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போய் விட்டாள் மாலினி.

பதறிப்போய், ''அண்ணா! நான் உங்களைச் சொல்ல வில்லை!'' என்று வேகமாகச் சொன்னாள் நந்தினி.

சில கணங்கள் பேசாமல் இருந்துவிட்டு, ''என்னைச் சொல்லுவாய் என்று நானும் நினைக்கவில்லை நந்து. ஆனால், நாங்கள் எடுத்த முடிவு சரிதான் என்பதைத்தான் உன் பேச்சும் செயலும் காட்டுகிறது,'' என்று அமைதி யாகச் சொன்னான் அவன்.

என்ன முடிவு?

லேசான பதைபதைப்புடன், ''என்ன முடிவு அண்ணா?'' என்று வினவினாள் தங்கை.

''இன்னும் இரண்டு நாட்கள் பொறுமையாக இருக்க முடியாமல் சிறு பிள்ளை போல் இது என்ன அவசரம் நந்தினி?'' என்று புருவச் சுழிப்போடு வினவினான், அன்று வரையில் கடிந்து ஒரு சொல் சொல்லி அறியாத அவளுடைய அருமை அண்ணன்.

அண்ணனின் கோபத்தை விடவும், ''சிறு பிள்ளை போல!'' என்ற வார்த்தையால் கலங்கிப் போனாள் நந்தினி.



3

காலைக் கடுமைக்கு ஈடுகட்டுவது போல மாலை வீடு வருகையில் சோனே அல்வா, முந்திரி வறுவல், பூ என்று வாங்கி வந்து தங்கையிடம் கொடுத்துக் குழைந்தான் மனோகரன்.

சிறு கலக்கத்துடனேயே நிமிர்ந்து தன் முகத்தைப் பார்த்த தங்கையின் தலையை வருடி, ''அண்ணனிடம் கோபமா, கன்னுக்குட்டிக்கு?'' என்று பழைய செல்லப் பெயரிட்டு அழைத்துக் கேட்டான்.

நந்தினியின் முகம் பளிச்சென மலர்ந்தது.

''அண்ணி, அண்ணி? சோனே அல்வா வேண்டுமானால் சீக்கிரம் வர வேண்டும். இல்லாவிட்டால் நாங்களே முடித்து விடுவோமாக்கும்!'' என்று கூவினாள்.

நிதானமாகக் காபி, ராகிமால்ட்டுடன் வந்தவளிடம், பலகாரங்களைக் கொடுத்துவிட்டு, அண்ணன் அருகே - அந்த நீள சோபாவில் அமர்ந்தாள்.

சலுகையுடன் அண்ணன் தோளில் தலை சாய்த்திருந்த நந்தனியை யோசனையாகப் பார்த்தாள் மாலினி. ''எங்கள் வீட்டில் அப்பாவின் அருகில் உட்காரக் கூட எங்கள் அம்மா விடமாட்டார்கள். வயது வந்த பெண்கள் அப்பாவானாலும் அரையடி தள்ளித்தான் உட்கார வேண்டும் என்பார்கள், குணம் கெட்டு விடுமாம்...'' என்று நிறுத்தினாள்.

முந்திரியை மொறுமொறுத்தபடி, ''அப்படி என்ன குணம் கெட்டுப் போய்விடுமாம்?'' என்று அலட்சியமாகக் கேட்டாள் நந்தினி.

கொஞ்சமும் தயங்காமல் மாலினி பதில் சொன்னாள். ''ஆண் பிள்ளைத் துணைக்கு உடம்பு ஏங்கத் தொடங்கி விடுமாம்.''

''அண்ணி!'' என நிமிர்ந்தாள் நந்தினி.

''யாரிடம் என்ன பேசுகிறீர்கள் என்று யோசித்துப் பேசுங்கள்,'' என்றாள் சினத்துடன்.



அப்பாவியாகக் கண்களை அகல விரித்தாள் மாலினி. ''உனக்கு நான் சொல்லாமல் வேற யார் சொல்லுவார்கள் நந்தினி? உன் மனது எவ்வளவோ நல்லதாக இருக்கலாம் தான். ஆனால் மனது வேறு, உடம்பு வேறு இல்லையா? சிறு தூண்டுதலிலும் வயதுக்குரிய ரசாயனம் உடம்பில் நிகழத் தொடங்கிவிடும்...''

''மேற்கு நாடுகளில் சிறுவயதில் இருந்தே சேர்ந்துதான் வளர்கிறார்கள். வித்தியாசமே இல்லாமல்தான் பழகுகிறார்கள், உறவே இல்லாதவர்கள்கூட. என்ன கெட்டு விட்டதாம்?''

''உண்மை, அங்கெல்லாம் பதினெட்டு வயதுவரை கன்னியாக இருப்பவரைக் காண முடியாது என்று நானும் படித்து இருக்கிறேன்,'' என்ற மாலினி கணவனிடம் காலித் தம்ளரை வாங்கினாள்.

''அதற்காக எல்லோருமே கெட்டு விடுவாங்களா?'' என்ற நந்தினியின் கேள்வியைக் கேட்க அவள் அங்கே இல்லை.

''பாருங்கண்ணா!'' என்று சலுகையுடன் மீண்டும் அண்ணன் புறம் திரும்பியபோது முகத்தில் சங்கடத்துடன் எழுந்தான் அவன்.

''அண்ணா!''

அவளது திகைப்பைக் கவனியாதவன் போல, அடுத்த சோபாவில் அமர்ந்தான் மனோகரன்.

சில கணங்கள் வாய் அடைத்துப் போன நந்தினி, ''என்னண்ணா, இது? அண்ணிதான் ஏதேதோ உளறினால் நீங்களுமா?'' எழுமுன் இடைமறித்துப் பேசினான்.

''நந்து, நமக்கு அம்மா இல்லாத குறைக்கு ஏதோ நல்ல காலமாய் உன் அண்ணி விவரம் தெரிந்தவளாகவும், நல்லவளாகவும் கிடைத்திருக்கிறாள். அவள் சொல்படி நடப்பது பொதுவாக நல்லது அம்மா.''

நந்தினி மீண்டும் வாயடைத்துப் போனாள்.

ஆனால், எப்போதும் பிறரிடம் நல்லதையே கண்டு வந்திருந்த அவளது மனது அண்ணன் சொல்வது சரி தானோ... அண்ணி நல்லதை எண்ணியேதான் சொல்கி றாளோ... அன்னை இருந்து இருந்தாலும் இதையேதான் சொல்லியிருப்பாளோ என்றெல்லாம் கூட எண்ணத் தோன்றியது.

வழக்கமாக லீவு விட்டு வீடு வந்து சேர்ந்ததும் தோன்று கிற சுதந்திர உணர்வு ஊனப்பட்டு விட, சற்றுக் கவனத் துடன் ஆஸ்டலில் நடந்து கொள்வது போலவே நடந்து கொள்ளலானாள்.

அப்போது சில சமயங்களில் மாட்டிக் கொள்ளவும் செய்தாள்.

அன்றிரவு ரேடியோ நாடகத்தைக் கேட்டு அடக்க மாட்டாமல் நகைத்த போது, ''வீட்டுப் பெண்கள் தெருவுக்கெல்லாம் கேட்க உரக்கச் சிரிப்பார்களா?'' என்று கொட்டு வாங்கினாள்.

மறுநாள் காலையில் மனோகரன் காய்கறி வாங்கி வரச் சென்றபோது, அவனுடைய நண்பன் ஒருவன் வந்தான்.

முன்பு பார்த்துப் பேசி இருந்ததால், சகஜமாக, ''உள்ளே வந்து உட்காருங்கள்,'' என்று அழைத்தாள் நந்தினி.

அழைப்புக்கு இணங்கி அமர்ந்தவனிடம், அவனுடைய தாயார், சகோதரியின் குழந்தைகள் என்றெல்லாம் குசலம் விசாரித்தாள்.

அண்ணனிடம், ஆபீசுக்கு அன்றைக்கு லீவு என்று சொல்லிவிட்டு அவன் செல்லும்வரை, ஒன்றும் இல்லை.

பிறகு...

'அன்னிய ஆண்களுடன் வயது வந்த பெண் பேசலாமா? பெண்கள் தனியாக இருக்கும் இடத்தில் அடுத்தவனை உள்ளே அழைக்கலாமா? இதுகூடத் தெரியாத சின்னக் குழந்தையா?'' என்று துளைக்கத் தொடங்கினாள் மாலினி.



''அண்ணி! அவர் அன்னியர் அல்ல. அண்ணனுடைய நண்பர்!'' என்றாள், நந்தினி ஆத்திரத்துடன்.

''கூடப்பிறந்த அண்ணனும் பெற்ற தகப்பனும் தவிர, மற்ற ஆண்கள் எல்லோரும் அன்னியர்கள்தான். அவர் உன்னைப் பார்த்த பார்வையில் நான் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருந்தேன்.''

''அநியாயமாய் ஒரு நண்பரை விரோதியாக்காதீர்கள் அண்ணி! ஒரு தப்புப் பேச்சுக்கூட அவர் பேசியது இல்லை.''

''பேசினால்தானா? பார்வையாலேயே துகில் உரிக் கிறானே. வாய்ப்புக் கிடைத்தால் செய்கையாலும் செய்வான்.''

''அண்ணி!''

அவளது அதட்டல் காதில் விழாதது போல, மாலினி தொடர்ந்தாள். 'இனம் கண்டு ஒதுங்க வயதுப் பெண் களுக்குத்தானே தெரிய வேண்டும். நீயானால் இரண்டுங் கெட்டானாக இருந்து பேசுகிறாய்.''

''தப்பெல்லாம் அவரவர் மனதில்தான் இருக்கிறது,'' என்று உதட்டைப் பிதுக்கினாள் நந்தினி.

''ஆமாமாம். அவரவர் மனது கெட்டுப் போவதால் தான் பெண்கள் கற்பழிக்கப் படுவது எல்லாம் நடக்கிற தாக்கும்!''

இந்த அளவு இறங்கிப் பேச முடியாமல், ''என்ன பேச்சு அண்ணி இது!'' என்று அருவருத்தாள் நந்தினி.

''என்ன செய்வது? ஒன்றும் தெரியாத பச்சைக் குழந்தையாக வளர்த்து வைத்து இருக்கிறாரே, உன் அண்ணன். அவரைத்தான் சொல்லி அழ வேண்டும்,

வேறென்ன?'' என்று சொல்லி அலுத்துக் கொண்டாள் மாலினி.

குற்றவாளிபோல நின்ற கணவனிடம் திரும்பி, ''இந்த மாதிரி இள வயதுக்காரனை உள்ளே கூப்பிட்டு உட்கார வைத்து உபசாரம் செய்தால் வருகிறவன் செருப்பால் அடிப்பான்...'' என்று பேசிய போது நந்தினி குறுக்கிட்டாள்.

''என் கை பூப் பறிக்குமோ?'' என்றாள் துடுக்காக.

'செருப்படி' என்ற சொல் வந்த வேகத்தில் பேசி விட்டு, உடனே நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

இந்த அண்ணிக்கு ஒவ்வொரு பிடி அவலாகப் போட்டுக் கொண்டே இருக்கிறாளே!

அவள் எதிர்பார்த்தது போலவே மாலினி இதையும் பற்றிக் கொண்டாள்.

''கேட்டுக் கொள்ளுங்கள். கட்டினவனைத் திருப்பி அடிப்பாளாம். சின்னப் பிள்ளைகள் போல ஒருவருக் கொருவர் அடித்துக் கொண்டு விபரீதமாய் முடிந்துபோகும். உங்கள் தங்கைக்கெல்லாம் சிறு வயது நண்பர்கள் இருக்கும் மாப்பிள்ளையே சரியில்லை. எல்லாவற்றையும் பார்த்து ஆயிற்று. செய்வதை யோசித்துச் செய்யுங்கள்!'' என்று ஒரே மூச்சில் திருத்தமாகச் சொல்லி முடித்தாள்.

இவ்வளவு சீரியசாக எடுத்துக் கொள்ள வேண்டுமா என்று நினைத்தாள் நந்தினி.

நிலைமையை லேசாக எண்ணி, ''சரிதான் அண்ணி, நல்ல குடுகுடு கிழட்டு நண்பர்கள் இருக்கும் மாப் பிள்ளையையே பார்த்து விடலாம். போதுமா? இன்றைக்கு என்ன காய்கறி வாங்கி வந்தீர்கள், அண்ணா?'' என்று பேச்சை மாற்றினாள். காய்கறிக் கூடையை ஆராய்ந்தாள்.

பார்த்தீர்களா என்பது போல மாலினி பார்த்த பார்வையையோ, "ஆமாம் ஆமாம்," என்பது போல அண்ணன் தலையை உருட்டியதையோ, நந்தினி கவனிக்கவில்லை.

ஆனாலும் நந்தினி முட்டாள் அல்ல.



தன்னுடைய வேடிக்கைப் பேச்சுக்கு இணையாக அண் ணன் சிரிப்பு கேளாததில் இருந்து இருவரும் தனக்குத் தெரியாத இரகசியம் பேசுவதைப் புரிந்து கொண்டாள்.

ஏதோ விஷயம் - அதுவும் அவளைப் பற்றிய விஷயம் இருக்கிறது.

அது அவளுக்குப் பிடிக்காததாக இருக்கும் என்பதை உள்ளுணர்வு கூறியது.

பேசுவதெல்லாம் செய்வதெல்லாம் அசட்டுத்தனமான தாகவும் சிறுபிள்ளைத் தனமானதாகவும் சாயம் பூசப் படுகையில், மீண்டும், ''ஏன்... என்ன?'' என்று கேட்க அவளுக்கு விருப்பமில்லை.

ஆனால், இது சாயந்தான்; அடிப்படையில் தங்கை யிடம் கோளாறு இல்லை என்பதை இந்த அண்ணன் உணர மறுத்ததுதான் நந்தினிக்கு வேதனையாகவும் வியப்பாகவும் இருந்தது.

இத்தனை ஆண்டுகள் ஒருவருக்கு ஒருவர் என்று இருந்து வளர்ந்த பாசம் கூடக் கண்ணிழந்து போய்விடுமா?

அண்ணியைப் பற்றிய சந்தேகம் இப்போது அவ ளுக்குத் தீர்ந்து போயிற்று.

அவள் ஏதோ திட்டம் போட்டு வேலை செய்கிறாள்.

அண்ணனைப் பிரிக்க முயற்சிக்கிறாள்.

அதையும் அவள் பேரில் பழியின்றிச் செய்யப் பார்க்கிறாள்.

ஆனால், அண்ணனிடம் அவளது உரிமையை ஒரு கணம் கூடத் தான் மறுக்கவில்லையே, பிறகு ஏன் என்று உள்ளூர மருகினாள் நந்தினி.

முடிந்த அளவு அவர்களது தனிமையைக் கலைப்பது இல்லை. அழையாது அவர்களிடையே செல்வது இல்லை.

அப்படி இருந்தும் தன்னை ஏன் மட்டம் தட்ட வேண்டும் என்று வேதனைப்பட்டாள்.

ஒருவேளை... அவளைவிட அழகியும் படித்தவளா கவும் இருப்பதால் வேறு விதத்தில் மட்டம் தட்டிப் பேசிப் பார்க்கிறாளோ?

அடிக்கடி சின்னப் பிள்ளைபோல, விவரம் தெரியாமல் என்றெல்லாம் கயிறு திரிக்கிறாள், போகட்டும்.

கொஞ்ச நாள் போனால் - நந்தினியின் அன்பு புரிந்து விட்டால் சரியாகிப் போகும்.

அதுவரை பொறுத்துத்தான் ஆக வேண்டும்.

மாலினி சொன்ன மூன்று நாள் முடிந்து, அன்று இரவில் தங்கையை அருகில் அழைத்தான் மனோகரன்.

''ஏதோ முடிவு எடுக்கிறீர்களே, அதைச் சொல்லப் போகிறீர்களா அண்ணா?''என்று முறுவலித்த நந்தினி யிடம் இருந்து பார்வையை விலக்கினான்.

''உனக்குத் திருமணம் செய்ய - அதுவும் விரை விலேயே முடிக்கப் போகிறோம்!'' என்றான் மொட்டையாக.

'தூக்குத் தண்டனை' என்பது போல் குரலில் சொல்லு கிறானே என்று மனதிற்குள் நகைத்தபடி, ''மாப்பிள்ளை யார் அண்ணா?'' என்று விசாரித்தாள் நந்தினி.

''பகதூர் பாண்டியன் என்று... மாலினிக்குச் சித்தப்பா முறையில்...''

சித்தப்பாவா? அப்படியானால்?

''அவருக்கு வயது என்ன?''

''நா...நாற்பது...''



4

**நா**ற்பது!

பத்தொன்பதே வயது ஆன நந்தினிக்கு வரப் போகும் மணமகனின் வயது நாற்பது!



நந்தினியின் வயதைவிட இரு மடங்குக்கும் அதிகம்.

அண்ணன் விளையாடுகின்றானோ என்று அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்த நந்தினி மேலும் பிரமித்தாள்.

கன்றிச் சிவந்திருந்த அந்த முகத்தில் விளையாட்டு, கேலி, கிண்டல் போன்றவைகளில் ஒன்றின் சாயல்கூட அடியோடு இல்லை.

பின்னே, மெய்யாகவேதான் நாற்பது வயது மாப்பிள்ளையைப் பார்த்து வைத்து இருக்கிறானா?

என்ன பைத்தியக்காரத்தனம்!

திகைப்புடன் நிமிர்ந்தவள் கண்ணில் கூர்மையான பார்வையுடன் நின்றிருந்த அண்ணி பட்டாள்.

இள வயது நண்பர்கள் உள்ள பையன் சரியில்லை, இருபத்தைந்து வயதுக் காளை மல்லுக்கட்டுவான் என்ற தெல்லாம் இதற்குத்தானா?

ராட்சசி.

சினத்துடன் திரும்பி, ''ஏன் அண்ணா?'' என்று கேட்டாள்.

''ஏ... எது...?'' என்று தடுமாறினான் அண்ணன்.

''இவ்வளவு கிழட்டு மாப்பிள்ளை பார்த்ததுதான்!'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு பேசினாள் நந்தினி.

''சேச்சே! நாற்பது வயதில் யாரும் கிழவர் ஆவது இல்லையம்மா!'' என்று எடுத்துச் சொன்னான் மனோகரன்.

கோபத்தைக் கொஞ்சம் சாந்தப்படுத்திக் கொண்டு, ''புது மாப்பிள்ளை ஆவதற்கு உரிய இளைஞரும் இல்லை அண்ணா, இவ்வளவு அதிக வயதில் மாப்பிள்ளை பார்த்தது ஏன் என்று கேட்கிறேன்,'' என்றாள் தங்கை.

கழுத்தை ஒரு தரம் தடவிவிட்டு, ''நந்தும்மா, வயது கொஞ்சம் கூடுதல்தான். ஆனால், யோசித்துப் பார்த்தால் உனக்கு அதுதான் நல்லது என்று தோன்றியது. இந்த மூன்று நாளில் அது சரி என்றும் தெரிந்துவிட்டது,'' என்றான் அவன்.

''எப்படி?'' என்றாள் நந்தினி சுருக்கமாக.

''பாரம்மா, நம் அப்பா, அம்மா இருந்து இருந்தால் உன்னைக் குடும்பப்பாங்கோடு வளர்த்து இருப்பார்கள்.''

''இப்போது...''

''ச்சு... சொல்லும் போது கேட்டு முடிக்கும் பொறுமை கூட இல்லையா, ம்... என்ன சொன்னேன்?'' என்று சற்று யோசித்துவிட்டு மீண்டும் தொடர்ந்தான் மனோகரன்.

''வந்து... சின்னப் பிள்ளை போலப் பிடிவாதம் பிடிக்கிறாய்! துடுக்காகப் பேசுகிறாய்! வீட்டு வேலை, சமையல் தெரியாது. வயதுக்குரிய அடக்கம் ஒடுக்கம் இல்லாமல் யாரோடும் சிரிக்கிறாய். நினைத்த நேரம் தூங்கி, நினைத்ததைச் சாப்பிட்டு... இதையெல்லாம் சின்ன வயது மாப்பிள்ளையோ, மாமனார், மாமியார் என்று இருப்பவர்களோ பொறுப்பார்களா? உன் அண்ணி யிடம் கேட்டுப் பார். ஐந்து மணிக்கு மேல் ஒரு நிமிடம் தாமதமாய் எழுந்தாலும் அவளுடைய ஒன்றுவிட்ட அக்கா ஒருத்தி அன்று முழுவதும் மாமியாரிடம் ஏச்சுக் கேட்க வேண்டுமாம். எழுந்தால் இரவு பத்து மணி வரை முதுகு ஒடிய வேலை செய்ய வேண்டுமாம். அதெல்லாம் உன்னால் முடியுமோ?

''அதோடு யோசித்துப் பார். உனக்குப் பொறுமை கொஞ்சம் குறைவுதான். சட்டென்று நுனி நாக்கில் வார்த்தைகள் துடித்துக் கொண்டு வந்துவிடும். சின்ன வயதுக்காரன் பொறுப்பானா? திருப்பிக் கொண்டு அடிகிடி என்று தொடங்கிவிட்டால் என்ன ஆவது?''

''அண்ணியை அப்படித்தான் நடத்துகிறீர்களா அண்ணா?''என்று கேலியாகக் கேட்டாள் நந்தினி.

''அது அவசியப்படாதபடி உன் அண்ணி பொறுமை சாலி ஆயிற்றே!'' என்றான் அண்ணன்.



''அதோடு உன் அண்ணனைப் போல ஆண் பிள்ளை இலட்சத்தில் ஒருவர் காண முடியுமா என்ன?'' என்று கணவனுக்கு ஐஸ் வைத்த கையோடு, ''என் பெரியப்பா பெண்ணுடைய நாத்தனார் ஒருத்தி கிட்டத்தட்ட உன்னைப் போலத்தான் குணம். எப்போதும் ரத்தக்காயத் துடன்தான் இருப்பாள். முகமெல்லாம் கூடத் தழும்பு கள்!'' என்று நாசூக்காக உடம்பைச் சிலிர்த்தாள் மாலினி.

கண்ணில் பயத்துடன், ''அது போன்ற நிலைமை உனக்கு நான் வரவிட மாட்டேன், நந்தும்மா!'' என்றான் மனோகரன்.

''உங்கள் சொந்தக்காரர்கள் இடையே நிறையக் கதைகள் கிடைக்கும் போல் இருக்கிறதே அண்ணி!'' என்று குத்தலாக மொழிந்தாள் நந்தினி.

இவளது குத்தலைப் புரிந்து கொள்ளாமல், ''அதனால் தான் நமக்கும் நாலு விஷயம் தெரிகிறது நந்து!'' என்றான் அண்ணன்.

''சொந்த பந்தம் என்று இல்லாமல் நாம் ஒதுங்கி விட்டது எவ்வளவு பெரிய தப்பு என்பது இப்போதுதான் புரிகிறது!'' என்று பெருமூச்சு விட்டான்.

''அன்றைக்குத் துடுக்காகக் காபியில் உயிர் போகாது என்றாய். காபியில் போகாத உயிர் அறையில் போகிறதா பார்ப்போம் என்று வருகின்றவன் அடித்தால்...? இதை எண்ணி எண்ணிக் கவலைப்பட்டு அன்றிரவு எல்லாம் உன் அண்ணி தூங்கவில்லை. இதுபோல சமயத்தில் அழக்கூடாது என்று நான் தேற்றும்படி ஆயிற்று!'' என்றான் வருத்தமாக.

நன்றாகத்தான் நாடகம் ஆடியிருக்கிறாள் அண்ணி என்று நினைத்தபடி, மாலினியைத் திரும்பிப் பார்த்தாள் நந்தினி.

சற்று சோக பாவனையுடன் பேசாமல் நின்றாள் அவள்.

பாதகி பாதகி என்று உள்ளூர அர்ச்சித்தபடி,' ''ஏன் அண்ணா! நீங்கள் இலட்சத்தில் ஒருவர் என்று அண்ணி

சொன்னாள். நம் நாட்டு மக்கள் தொகை கோடிக் கணக்கில் இருக்கும் போது உங்களைப்போல ஒருவனைப் பிடிப்பதுதானே!'' என்றாள் இலகுவாக.

''முதலில் அதைத்தானே நாங்களும் - முக்கியமாக உன் அண்ணியும் யோசித்தாள். ஆனால், வயதுப் பையன் சம்பாதிக்கிறவன் என்றாலே அறுபது எழுபது பவுன் நகையைக் கொண்டா, நாற்பது ஆயிரம் பணத்தைக் கொண்டு வா என்கிறார்களே.

''நாமும்தான் கொஞ்சமேனும் சேர்த்தோமா? எனக்குத்தான் சேமிப்பு மறந்து போயிற்று என்றால் பெண்ணான உனக்காவது அந்த எண்ணம் வந்ததா? குதியாய்க் குதித்தாயே ரேடியோ, காஸ் அடுப்பு, டி.வி. என்று. இதெல்லாம் இல்லாவிட்டால் செத்தா போயிருப்போம்?'' என்றான் அவன் கடுமையும் கண்டிப்புமாக.

''இப்போது டொபாசிட் செய்த பணம் இருக்குமே!'' என்று வாதாடினாள் நந்தினி.

''எவ்வளவு? என் பெயரில் உள்ள பணத்தை ஆபீசில் கட்டித்தானே வேலை வாங்கினேன்? உன் இருபதாயிரம் எந்த மூலைக்கு? பதினைந்து பவுன் நகைக்குக்கூட வராது என்று உன் அண்ணி சொல்கிறாளே.''

அண்ணி சொல்கிறாள்! அண்ணி சொல்கிறாள்! எல்லாம் அண்ணிதானா!

சட்டென்ப் பிறந்த விஷமத்தோடு, ''ஏன் அண்ணா, அண்ணி அணிந்து வந்த நகைகளை எனக்குத் தரமாட்டேன் என்றா சொல்வார்கள்?'' என அப்பாவியாகக் கண்களை விரித்துக் கேட்டாள்.

ஆனால், அவள் தன் அண்ணியின் திறமை பற்றி இன்னமும் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

''நான் கேளாமல் தருகிறேன் என்றாளே, உன் அண்ணி!'' என்றான் மனோகரன் பெருமிதத்துடன்.

ஆச்சரியமாகத் தங்கை பார்க்க, மேலும் சொன்னான். ''ஆனால், நந்தும்மா கல்யாணம் ஆகி மூன்றே மாதத்தில்



நகைகளை எடுத்துக் கொண்டால் அவள் வீட்டில் என்னை மட்டமாக நினைப்பார்களே என்று நினைக்கும் பொழுது அவளால் தாங்க முடியவில்லை. மற்றப்படி உனக்குத் தரத் தயங்குகிறவளா உன் அண்ணி?'' என்று அவளிடமே கேட்டான் அண்ணன்காரன்.

'வாவ்!' என்று வாயைப் பிளந்தாள் நந்தினி.

ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் என்னமாகக் கவனித்துச் செயல்பட்டிருக்கிறாள் இவள்!

இத்தனைக்கும் அண்ணி பிளஸ் டூ ஃபெயில்!

அவள் வழிக்கே ஒரு கும்பிடு போட்டு விலகுவதுமேல்.

யோசித்துவிட்டு, ''வரதட்சிணை கூடாது, அது இது என்று சட்டமும் பிரசாரமுமாக இருக்கிறதே அண்ணா! யாராவது நல்லவன் இதில் மனம் திருந்தி வரட்டுமே!'' என்றாள் நயமாக.

மனைவியை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''அப்படி ஒருவன் எப்போது வருவானோ? வந்தாலும் அவனுக்கும் பெற்றோர் என்று இருப்பார்களே, அவர்கள் விஷயம் என்ன? எல்லோருமே சீர்திருத்தவாதிகள் ஆக இருந்தாலும் அந்த மாதிரி குணம் உடையவர்கள் அமைதி விரும்பிகளாக அல்லவா இருப்பார்கள். உன் சிறுபிள்ளைத்தனத்துக்கும் அதற்கும் சரிப்படுமா? பொறும்மா, குறுக்கே பேசாதே!'' என்று ஏதோ பேச வாயெடுத்தவளை அடக்கினான்.

மீண்டும் தொடர்ந்து, ''அப்படி யாரும் இந்தக் காலத்தில் இருப்பார்கள் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. இருந்து அவன் வருவான் என்று காத்து இருக்க நமக்கு அவகாசமும் இல்லை!'' என்று முடித்தான் மனோகரன்.

''எனக்குப் பத்தொன்பது வயதுதான் ஆகிறது அண்ணா. எப்படி அவகாசம் இல்லாமல் போகும்?'' என்று வாதிட்டாள் தங்கை.

மீண்டும் ஒரு தரம் மனைவியை நோக்கினான் மனோகரன்.

அவன் பார்வையைத் தொடர்ந்து நந்தினியும் பார்த்தாள்.

குழந்தை மாதிரி முகத்துக்குப் பின்னால் இத்தனை சூழ்ச்சியா? கடவுளே!

அண்ணன் பேசத் தொடங்கவும், மீண்டும் அவனிடம் கவனத்தைச் செலுத்தினாள்.

''நந்தும்மா... உன்மேல் எனக்குள்ள பாசம் உனக்குத் தெரியும். ஆனால், என்னதான் பாசம் என்றாலும், குறைகளைக் காண மறுக்கக் கூடாது. உன் குணத்துக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்துவிட வேண்டும் என்று தோன்றுகிறதம்மா.''

''அண்ணா!'' என்றாள் நந்தினி அதிர்ச்சியுற்று.

''உண்மைதானம்மா. சங்கரிடம் நீ பழகிய விதம் அண்ணிக்கு ரொம்பவும் பயத்தை உண்டாக்கியிருக்கிறது.''

''நான் எந்த விதத்திலும் தப்பாக நடக்கவில்லை!'' என்றாள் நந்தினி ஆத்திரத்தில் குரல் நடுங்க.

''அவன் பார்வை உனக்குப் புரியவில்லையே நந்தும்மா. எங்கானும் ஏமாந்து விடுவாயோ என நடுங்குகிறாள் அவள். உன் துடுக்கைப் பொருட்படுத்தாமல் உன் பிடிவாதத்துக்கு இடம் கொடுத்துப் பொறுமையாக அனுசரித்துப் போக, சற்று வயதான ஒருவரால்தான் முடியும் என்ற முடிவுக்கு வந்தோம். நல்லவேளையாகப் பணக்காரர் ஆக, உன் மேல் பிரியம் உள்ளவராக ஒருவர்...''

''பிரியம் உள்ளவரா? அந்த மிஸ்டர் பகதூரை நான் பார்த்தது கூடக் கிடையாது. பிறகு எப்படித் தெரியுமாம்?'' என்றாள் சினத்துடன் நந்தினி.

''எங்கள் திருமணத்தின் போதுதான் நந்து, பார்த்து உடனே உன்னைப் பிடித்துப் போய் என்னிடம் வந்து கேட்டார். முதலில் நானும் ஆத்திரப்பட்டு முடியாது



என்றுதான் சொல்லி விட்டேன். பிறகு நாங்கள் இருவருமாக யோசித்த பிறகுதான் இந்த முடிவுக்கு வந்தோம்,'' என்றான் அண்ணன்.

இருவருமாக யோசித்தீர்களா? பெண்டாட்டி தாசனாய்ப் பெருமாள் மாடு போலத் தலையாட்டி விட்டுத் தானும் யோசித்ததாகச் சொல்லுகிறான்! வேடிக்கை தான்.

''அந்த ஆளுக்கு ஏன் இதுவரை திருமணம் ஆகாமல் இருந்தது?'' என்று அங்கே ஏதாவது குறை கிடைக்காதா என்ற நப்பாசையில் விசாரித்தாள் நந்தினி. ''ஏதாவது ஊமையா?''

''ச்சீ! அவருடைய இரண்டாவது மனைவி இறந்து இப்போதுதான் ஓர் ஆண்டு முடியப் போகிறது நந்தும்மா.''

சற்று நேரம் பேசவே முடியவில்லை நந்தினிக்கு. இருமுறை தாரம் இழந்தவன், நாற்பது வயதைக் கடந்த கிழவன். கல்லூரியை விட்டு இப்போது தான் வெளியேறிப் புது மலராக நிற்கும் இவளுக்கு நல்ல பொருத்தமான கணவன் என்று அண்ணனை நம்பவைத்த இந்த அண்ணி எப்பேர்ப்பட்ட ஜாலக்காரியாக இருக்க வேண்டும்... இந்த அண்ணன் எப்பேர்ப்பட்ட... ச்சீ.

மறுநாள் மனோகரன் அலுவலகம் சென்ற பின் கதவைமூடிவிட்டு வந்த அண்ணியை எதிர் கொண்டாள் நந்தினி.

''இப்போது அண்ணன் இல்லை. வேடம் போடத் தேவையும் இல்லை. சொல் அண்ணி, ஏன் இந்தப் பித்தலாட்டம்?'' என்று நேருக்கு நேர் கேட்டாள்.

மாலினியின் பதில் நிதானமாக வந்தது. ''இது என் வீடு. இங்கே உனக்கு இடம் இல்லை!'' என்று.

5

நந்தினியின் கேள்வியை எதிர்பார்த்தே இருந்தவள் போல வெகு நிதானமாகப் பிசிறற்ற குரலில் பதில் கூறிய மாலினி. அதற்கு மேல் நந்தினியைச் சட்டை செய்யாமல் உள்ளே சென்று தன் வேலைகளை வழக்கம் போல செய்யலானாள்.

அங்கே அவள் நின்று இருந்தாலும்கூட வெகுநேரம் வரையில் மற்றவளிடம் இருந்து எந்த விதப் பேச்சும் வெளி வந்திராதுதான்.

அந்த அளவுக்கு அதிர்ந்து போயிருந்தாள் நந்தினி.

சின்ன வயதில் அன்பான தாய், தந்தையோடு 'எங்கள் வீடு' என்று ஒன்று அவளுக்கு இருந்தது.

அவர்களின் மரணத்திற்குப் பின்னர், ஆஸ்டல், சித்தப்பா, மாமா, பெரியம்மா வீடு என்று முறை வைத்து அலைந்தபோது எல்லாம், 'தங்கள் வீடு' இல்லாத குறை அண்ணன் தங்கை இருவரையுமே வெகுவாகப் பாதித்து இருந்தது.

மனோகரன் சம்பாதிக்கத் தொடங்கியதும் செய்த முதல் வேலை வாடகைக்கு ஒரு வீட்டைப் பிடித்ததுதான்.

வெறும் கட்டடமாக இருந்ததைத் திரைகள், மிதியடி, மேசை நாற்காலி, பாத்திரம் பண்டம், அழகுப் பொருட்கள் என்று அமைப்புறச் சேர்த்து வீடு ஆக்கியவள் நந்தினி.

மனோகரன் கடிந்தாற்போலச் சொன்னானே டி.வி., ரேடியோ, காஸ் அடுப்பு என்று அவற்றையும் கூடத்தான்.

செலவு ஆனபோதும், 'நம் வீடு' என்ற நினைவில் இருவருமே வெகுவாகத் திருப்திப்பட்டுப் போயிருந்தனர்.

வாடகை வீடானாலும் எங்கள் வீடு என்று பெருமைப் பட்ட இடம்.



அண்ணி ஒருத்தி வந்தபோதும் நம் வீட்டுக்கு இன்னோர் ஆள் என்றுதான் நந்தினி நினைத்திருந்தாள்.

ஆனால், அந்த அண்ணி 'நம்'வீட்டை 'என்' வீடாக்கி அங்கே ''உனக்கு இடம் இல்லை!'' என்று தன்னிடமே சொல்லக் கூடும் என்று நந்தினி ஒரு வினாடி கூடக் கற்பனையிலும் எண்ணிப் பார்த்தது இல்லை.

ஆனால் சொல்லி விட்டாளே!

நாலு ஆண்டாகப் பார்த்துப் பார்த்து அழகுபடுத்திச் சொந்தம் கொண்டாடியவளை மூன்றே மாதத்திற்கு முன் வந்தவள் விரட்டுவது என்றால், எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்.

ஒன்றுமே நடவாதது போலச் சமையல் அறையில் வேலையைத் தொடங்கிச் செய்து கொண்டிருந்த அண்ணியிடம் சென்று அதையே கேட்டாள் நந்தினி.

''நாலு ஆண்டாகப் பார்த்துப் பார்த்து அண்ணனை விரட்டி அடித்து டி.வி., சோபா, காஸ் என்று சேர்த்தால் இன்று வந்துவிட்டு என்னையே விரட்டுகிறாயே அண்ணி!'' என்று பொருமினாள்.

ஓர் அலட்சிய முறுவலை இவளிடம்வீசிவிட்டு, ''நீ சொல்வதைப் பார்த்தால் இனி, இன்டீரியர் டெக்கரேட்டருக்கு எல்லாம் வீட்டில் பங்கு கொடுக்க வேண்டும் போல இருக்கிறதே!'' என்று தொடர்ந்து பீன்சை வெட்டினாள் மாலினி.

அவளது பதிலிலும் பாவனையிலும் இருந்த அர்த்தம் நந்தினியின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

''நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லை. நாலு ஆண்டாக இது என் வீடாக இருந்து வந்திருக்கிறது என்றேன்,'' என்றாள் கலக்கத்தை மறைத்து.

''இப்போது உரியவள் வந்துவிட்ட பிறகு அடுத்தவர் வெளியேற வேண்டியதுதானே!'' என்றாள் மாலினி சலனம் இல்லாமல்.

''அடுத்தவர் என்றே சொல்லாதே அண்ணி. அண்ணன் வீடு, என் வீடு எல்லாம் ஒன்றேதான்!'' என்றாள் நந்தினி சற்று அதட்டலாக.

''அண்ணனுக்கே நீ அடுத்தவள்தானே, வீடு மட்டும் ஒன்றாகுமா என்ன?''

நந்தினி மீண்டும் அதிர்ந்தாள்.

அண்ணனே அடுத்தவரா?

சிறு வயதில் இருந்து தனக்கு அண்ணனும், அண்ணனுக்குத் தானும் மட்டுமே என்று வளர்ந்து இருந்த போதும் நந்தினியின் விசால மனது மாலினிக்கும் இடம் கொடுத்துத் ''தம்மவள்'' ஆக்கியிருந்தது.

ஆனால், இவள் அண்ணனுக்கே தங்கையை அன்னியள் ஆக்குகிறாளே!

ஆத்திரம் மிக, ''பத்தொன்பது ஆண்டாக எங்கள் தொடர்பு. மூன்றே மாதம் -தொண்ணூறே நாள் முன்தான் அண்ணன் வாழ்வில் நீ நுழைந்திருக்கிறாய்!'' என்றாள்.

''ஆனாலும், நான் அவரில் பாதியாக்கும். நீ எங்களுக்கு அடுத்தவள்தான். இந்த வீடு உனக்கு வெறும் அண்ணன் வீடு மட்டும்தான். ஆனால், இது என் வீடு தெரியுமா? அதாவது உன் அண்ணனுக்கும் எனக்கும் மட்டுமே சொந்தமான எங்கள் வீடு. இன்னும் எட்டு மாதத்தில் பிறக்கப் போகும் எங்கள் குழந்தைக்கும் உரிமை உள்ள வீடு.''

மாலினி பேசப் பேச விக்கித்துப் போய் நின்றாள் நந்தினி.

இப்படி யெல்லாம் கூட ஒருவர் பேசுவார்களா?

பூங்காற்றாய் வீசி நெஞ்சைக் குளிர்விப்பாள் இந்த அண்ணி என்று எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக இருக்கிறாளே.

பயங்கரப் புயல் காற்றாய் வீசிக் கண்டபடி நெஞ்சைச் சேதம் செய்கிறாளே.



இந்த அண்ணி கொடுமை, மாற்றாந்தாய்க் கொடுமை எல்லாம் மெய்தான் போலிருக்கிறது!

வேதனையும் கோபமுமாக, ''இதை எல்லாம் அண்ணனிடம் சொன்னால் என்ன ஆகும் தெரியுமா?'' என்று மாலினியை மிரட்டிப் பார்த்தாள் நந்தினி.

கல்லென்று சிரித்துவிட்டு, ''நம்புவார் என்றா நினைக்கிறாய்?'' என்று கண்களை விரித்தாள் மாலினி.

''அட முட்டாளே!'' என்றது அவள் பார்வை.

முகம் சிவக்க, ''ஏன் நம்பமாட்டாராம்? உன் வார்த்தைக்கு என் வார்த்தைதானே!'' என்றாள் நந்தினி ரோஷத்துடன்.

வெங்காயத்தை உரித்தபடி மாலினி சொன்னாள். ''ஒரு போட்டி வைக்கலாமா நந்தினி? வெள்ளைக் காக்கையைப் பார்த்ததாக நான் சொன்னால் உன் அண்ணன் நம்புவார் என்கிறேன் நான். நீ என்ன சொல்கிறாய்?''

ஆத்திரமாக முறைத்துப் பாத்துவிட்டு, முன் அறைக்குப் போய் அமர்ந்து கொண்டாள் நந்தினி. வழக்கமான உதவி எதையும் செய்யாமல்.

என்ன திமிர் இந்த அண்ணிக்கு என்று மனது குமுறியது.

சத்தத்தைக்கூட உயர்த்தாமல் என்ன அலட்சியமான பேச்சு.

என்னவோ, அண்ணனுக்குச் சொந்த மூளையே இல்லாதது போலப் பேசுகிறாளே!

கோபமும் கொதிப்புமாக அங்கேயே கிடந்தாள்.

எதுவும் நடவாதது போல, மாலையில் பூவையும் இனிப்பையும் நீட்டிய அண்ணனைக் கூர்ந்து பார்த்தாள்.

''என்ன... நந்து?''

அலுப்புடன், ''நான் இங்கே இருப்பது அண்ணிக்குப் பிடிக்கவில்லை...'' என்று தொடங்கிய நந்தினி மனோகரனின் முகத்தைப் பார்த்துப் பேச்சை நிறுத்தினாள்.

"சீச்சீச்சீ! என்ன வார்த்தை சொன்னாய் நந்து? போய் வாயைக் கழுவிவிட்டு வா!" என்று அதட்டினான் அண்ணன்.

உடனே குரலைத் தணித்து, "நந்தும்மா! உன் மேல் அண்ணிக்கு எவ்வளவு ஆசை தெரியுமா? தினமும் உனக்கு நெய் ஊற்றுகிறாளே, என்ன வாசனை பார்த்தாயா? ஒரு மாதமாய் ரொட்டிக்குத் தடவக் கூட எடுக்காமல் வெண்ணெய்யை உனக்காகச் சேர்த்து வைத்துக் காத்தாள். இதுகூடப் பெரிதில்லை. வயதுப் பெண் மனது கெட்டு விடுமே என்று நீ வந்ததில் இருந்து தனித்தே இருக்கிறாள் தெரியுமா? அப்படிப்பட்ட தியாகியைப் போய்... சேச்சே! என்ன வார்த்தை சொல்லிவிட்டாயம்மா... சேச்சே!" என்று குமுறினான் மனோகரன்.

தியாகமா அல்லது அவனைப் பட்டினி போட்டுக் காரியத்தை விரைவில் முடிக்க முடிக்கும் தந்திரமா? சொன்னால் அண்ணன் ஒப்புக் கொள்வானா?

மாட்டான் என்பது புரிந்தது.

அதோடு அண்ணனின் வேதனையைப் பொறுக்க முடியாமல், "ஷ், என்ன அண்ணா நீங்கள்? புதிதாகக் கல்யாண மானவர்கள் இடையே வந்து விட்டேனோ என்ற நினைவில் கேட்டால் அதற்குள் இப்படிப் பதறுகிறீர்களே!" என்று சமாளித்தாள் தங்கை.

அப்பொழுது அண்ணன் முகம் மலர்வதை உள்ளூர ஓர் ஏளனத்துடன் கண்டாள்.

உடனே ஒன்று தோன்றவும், "அண்ணா! நான் உங்களிடம் ஒரு விஷயம் கேட்கப்போகிறேன். நீங்கள் மனதில் உள்ளதை அப்படியே சொல்ல வேண்டும்," என்று பீடிகை போட்டாள்.

அண்ணன் தலையாட்டவும், "வெள்ளைக் காக்காய் பறந்ததாக அண்ணி சொன்னால் நம்புவீர்களா?" என்று விசாரித்தாள்.



"நம்புவேன் நந்து, ஏனென்றால், உன் அண்ணி பொய் சொல்ல மாட்டாள் பார்."

அண்ணனின் பதிலைக் கஷ்டப்பட்டுச் செரித்தபடி, அடுத்து, "அதையே நான் சொன்னால்?" என்றும் கேட்டாள் தங்கை.

"சந்தேகம்தான். ஏன் என்றால், நீ வேடிக்கைக்காகப் பொய்யெல்லாம் சொல்லுவாயே!" என்று சிரித்தான் மனோகரன்.

இவனிடம் எதை எப்படிச் சொல்வது? ஒன்றும் புரியாமல் விக்கித்துப் போய் அவள் உட்கார்ந்து இருக்க, முகம் கழுவி விட்டு வருவதாக உள்ளே சென்றான் மனோகரன்.

அவன் வருமுன் தட்டில் காபி, ராகிமால்ட் கோப்பைகளுடன் வந்த மாலினி, கண்ணில் கேலியுடன், "என்ன பலித்ததா?" என்று கிண்டலாகக் கேட்டாள்.

தோல்வியை ஒப்புக் கொள்ளவும் மனமின்றி, பதில் கூறவும் முடியாமல், நந்தினி திணறியபோது, நல்லவேளையாகத் திரும்பி வந்து மனோகரன் அந்த ஒருசங்கடத்தில் இருந்து அவளை மீட்டான்.

ஆனால், அந்த ஒரே ஒரு சங்கடத்தில் இருந்து மட்டும்தான்.

அவன் முன்னிலையில் பழைய பேச்சு நினைவே இல்லாததுபோல மாலினி பொதுவான விஷயங்களைப் பேசலானாள்.

ஆனால், அவள் ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண் வைக்கிற ரகம்.

இரவு உணவு முடிகிற வரையிலும் சிரிப்பும் விளையாட்டுமாக ஏதேதோ பேசியவள், கடைசியாகக் கேட்டாள், "கடிதம் எழுதி விடலாமா?" என்று.

"உம். எழுதிவிட வேண்டியதுதான். என்ன நந்து, தான் சொன்னதை எல்லாம் நன்றாகச் சிந்தித்துப் பார்த்தாய் அல்லவா? சரிதான் என்று எழுதி விடலாம்

அல்லவா?''என்று அவளது ஒப்புதலை எதிர்பார்த்தவன் போல, மறுக்கக் கூடும் என்ற எண்ணம் சிறிதேனும் இல்லாதவன் போலக் கேட்டான்.

திட்டவட்டமாக மறுத்துவிட நந்தினி வாயைத் திறக்குமுன் மாலினி குறுக்கிட்டாள்.

''இது ஒரு கேள்வி என்று அவளிடம் கேட்கிறீர்களே. உயிருக்கு உயிரான அண்ணனும் அண்ணியும் தனக்கு நல்லதைத்தான் செய்வார்கள் என்பதுகூடப் புரியாத முட்டாளா உங்கள் தங்கை? பார்த்து, பத்தும் யோசித்து நீங்கள் செய்வதை அவளால் எப்படி மறுக்க முடியுமாம்?'' என்று இனிய குரலில் வினவினாள்.

''அரக்கி! அரக்கி!'' என்று உள்ளூரப் பொருமினாள் நந்தினி.



## 6

அண்ணியின் வெண்ணெய்ப் பேச்சுக்கு முன் தான் என்ன பேசினாலும் எடுபடாது என்பதை உணர்ந்தாள் நந்தினி.

அப்போதைக்குப் பின்வாங்கி, ''ஒரு வாரம் யோசிக்க அவகாசம் கொடுங்கள் அண்ணா,'' என்று கேட்டுப் பெற்றாள்.

இந்த வாரத்திற்குள் அண்ணன் மூளையை எப்படியாவது விழிப்படையச் செய்ய வேண்டும்.

முடியுமா?

முயன்றால் முடியாதது இல்லை என்ற கொள்கையில் நந்தினிக்கு இப்பொழுது சந்தேகம் வந்து இருந்தது.

மறுநாள் மாலையில் மனோகரன் வந்ததும் காபி டிபன் சமயத்தில், ''அம்மா வீட்டில் இருந்து ஆள் வந்தது. ஒரு வாரம் வந்து தங்கி நன்றாகச் சாப்பிட்டு விட்டுப் போக வேண்டும் என்றுசொல்லி அனுப்பி இருந்தார்கள். உங்கள்



இரண்டும் கெட்டான் தங்கையை விட்டு விட்டு எப்படிப் போவது? பிறகு பார்க்கலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டேன். ஸ்... அப்பாடி!'' என்று காலை நீட்டி அமர்ந்தாள் மாலினி.

''என்னடா? எங்கானும் வலிக்கிறதா? தைலம் தடவவா?'' என்று பதறிக் கொண்டு வந்தான் மனோகரன்.

''ஊகூம், வலியில்லை. உதவி செய்ய ஆசையிருந்தால் கூட எதுவும் செய்யத் தெரியாமலே நந்தினியை வளர்த்து விட்டீர்கள். நானே எல்லாம் செய்ததில் வந்த வினை. நல்லவேளை, பகதூர் சித்தப்பா வீட்டில் ஏழெட்டு வேலை யாட்கள். இவள் ஒன்றும் செய்யத் தேவையிராது.''

பல்லைக் கடித்தாள் நந்தினி.

உதவி தேவையில்லை என்று வெளியேறச் சொல்லி விட்டு, வேடத்தைப் பாரேன்! சொன்னால் இந்த அண்ணன் மண்டைக்குள் ஏறாதே!

வேறுவிதமாய், ''ஆள் எப்போது வந்தது? நான் பார்க்க யாரும் வரவில்லையே!'' என்று அதிசயமாகக் கேட்டாள்.

ஆனால் மாலினியா அசருகிறவள்?

''நீ குளிக்கும் போது வந்தது. நீதான் ஒரு மணி நேரம் குளிக்கிறாயே!'' என்று ஒரு போடு போட்டாள்.

அப்போதைக்குப் பேசாதிருந்தாலும், சற்றுப் பொறுத்து மாலினி உள்ளே சென்றதும், சிறுகுரலில், ''நீ சீக்கிரமாக முடிவுசொல்லிவிட வேண்டும் நந்து,'' என்று கண்டிப் புடன் மனோகரன் பேசிய போது, அண்ணியின் அம்பு இலக்குத் தவறாமல் தைத்து இருக்கிறது என்பது புரிந்தது.

''இப்படி அஞ்சாமல் புளுகுகிறாயே, இது பாவம் இல்லையா?'' என்று மாலினியிடம் கேட்டபோது, ''நீ ரொட்டியில் தேன் ஊற்றிச் சாப்பிடுகிறாயே, அதை எடுக் கும் போது எத்தனை புழுக்கள் சாகின்றன! பாவமா பார்க் கிறாய்!'' என்று வந்த பதில் நந்தினியின் வாயை அடைத்தது.

அண்ணியின் முகமூடியைக் கிழித்தெறிய வழி தேடி மூளையைக் கசக்கிக் கொண்டாள் நந்தினி.

மாலையில் மனோகரன் வரும் நேரத்தில், அவன் தெருக் கோடியில் வருவதை ஓரக் கண்ணால் பார்த்து விட்டு, மாலினியிடம் பேச்சைத் தொடங்கினாள்.

''நானும் உன்னைப்போல உன் வயதுப் பெண்தானே அண்ணி? நீ வெறுத்து விரட்டினால் எனக்குப் போக்கிடம் ஏது?''என்று பரிதாபமாக வினவினாள்.

''அதனால்தான் நீ என்றால் எனக்கு உயிர், நந்தினி!'' என்ற பதிலில் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு திரும்பி யவள் அண்ணியின் கண்களில் கேலியைக் கண்டதும் மேலும் திகைத்துப் போனாள்.

மாலினி அத்துடன் நிற்கவில்லை.

உள்ளே வந்த கணவனிடம், ''நந்தினிக்கு இன்னமும் உலக வழக்கே தெரியவில்லை. அவளைப் பிடிக்காமல் தான் திருமணம் செய்யப் பார்க்கிறோம் என்கிறாள். என்னைப் பிடிக்காமலா என் பெற்றோர் எனக்குத் திரு மணம் செய்வித்தார்கள்? இப்படி அசடாக வளர்த்து விட்டீர்களே!'' என்று வருத்தப்பட்டாள்.

அவன் காதில் விழாதபடி, ''இந்த மாதிரி அசட்டுத் தனங்களில் இனி இறங்காதே.. நான் தூங்குகிற போதும் விழித்திருப்பவள்!'' என்று எச்சரிக்கவும் செய்தாள்.

நந்தினி அயர்ந்து போனாள்.

இவளிடம் மோதி வெல்லும் சக்தி தனக்கு இல்லை என்பதையும் புரிந்து கொண்டாள்.

ஒருவேளை அண்ணனிடம் தனியே பேசிப் பார்க்கலாமோ என்றும் தோன்றியது.

மாலினி அசந்தது போல வேடம் போட்டு முடிக்கவும், ''ஒரு வாக்கிங் போய் வரலாமா அண்ணா?'' என்று மனோகரனிடம் கேட்டாள்.



அரைக் கண்ணால் பார்த்துவிட்டு, ''என்னால் வர முடியாதே!'' என்றாள் மாலினி பலவீனமான குரலில்.

குதூகலத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, ''நீ வீட்டில் ஓய்வு எடு அண்ணி. நானும் அண்ணனும் போய் வருகிறோம்,'' என்றாள் நந்தினி.

''சரி,'' என்று எழுந்த மனோகரனிடம், ''அவள்தான் அசட்டுத்தனமாகக் கேட்கிறாள் என்றால், நீங்களும் கிளம்பி விட்டீர்களே. தெருவில் பார்க்கிறவர்கள் நீங்கள் அண்ணன், தங்கை என்று கண்டார்களா? காதலர்கள் என்று எண்ணினால் அசிங்கம் இல்லையா? சீச்சீ!'' என்று கூறி அருவருப்புடன் உடம்பைச் சிலிர்த்தாள்.

முகம் வெளுத்துப் போய் அப்படியே உட்கார்ந்து விட்டான் மனோகரன்.

முன்னே அண்ணனும் தங்கையுமாக உலா வந்த நாட்களை எண்ணி அவன் கூசிக் கொண்டு இருப்பது அவன் முகத்திலேயே தெரிந்தது.

சே! ஒரு வினாடியில் எல்லாவற்றையும் எவ்வளவு கொச்சைப் படுத்தி விட்டாள்?

இவ்வளவு தரக்குறைவாகப் பேசுகிறவளுடன் எப்படி மோதுவது?

ஆனாலும் விடாமல், ''மட்டரகமாகப் பேசுகிறாய் அண்ணி!'' என்றாள் நந்தினி ஆத்திரத்துடன்.

''மட்டரகமாய் உங்களை நினைத்து விடக் கூடாதே என்றுதான்!'' என்று பதில் கொடுத்துவிட்டு, ''அம்மாடி!'' என்று இடுப்பைப் பிடித்தாள் மாலினி.

மற்றதை மறந்து மனைவியிடம், ''என்ன... என்ன?'' என்று ஓடினான் மனோகரன்.

பார்த்துக் கொண்டே இருந்த நந்தினி, சாட்சிக்காரன் காலில் விழுவதைவிடச் சண்டைக்காரன் காலில் விழுவது மேல் என எண்ணினாள்.

''அண்ணி, நீயும் பெண். நினைத்துப் பார். என்னை விட இரு மடங்குக்கும் அதிக வயதான ஒருவரை என்னால் எப்படி மணக்க முடியும்?'' என்று வாதாடினாள்.

''பின்னே, எவனோடாவது ஓடப் போகிறாயா?'' என்று வெகு அலட்சியமாகக் கேட்டாள் மாலினி.

''அண்ணி, ஜாக்கிரதை!'' என்றாள் நந்தினி கண்ணில் பொறி பறக்க.

''இந்த அதட்டல் எல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதே. இதைக்கேள். எனக்கு நீ இந்த வீட்டை விட்டு வெளியேற வேண்டும்.. அவ்வளவுதான். அதற்கு இதைவிட்டால் வேறு வழியில்லை!'' என்றாள் மாலினி தீர்மானமாக.

''திருமணம் ஆனால் மட்டும் இங்கே வராமலா போய் விடுவேன்?''என்று அவளை மடக்க முயன்றாள் நந்தினி.

லேசாகச் சிரித்துவிட்டு, ''பகதூர் சித்தப்பாவைப் பற்றி உனக்குத் தெரியாது இல்லையா? அவருடைய வீட்டுக்குள் நுழைந்த பெண்கள் செத்த பிறகுதான் வெளியேறி இருக்கிறார்கள்!'' என்றாள் மாலினி.

''பெண்களா?'' என்றாள் நந்தினி.

''ஆமாம் மனைவிகள்! ஆசை நாயகிகள்!'' என்று அடுக்கினாள் மாலினி.

இப்படிப்பட்ட ஓர் ஆளை நான் மணப்பதா என்று கறுவியபடி, ''வீட்டை விட்டுத்தானே போக வேண்டும்? வெளி ஊரில் ஏதாவது வேலை பார்த்துக் கொண்டால்...?'' என வினவினாள் நந்தினி.

இவளுக்குப் போய்ப் பணிவதா என்று இருந்த போதும், ''இப்போதைக்கு மட்டும்!'' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாள்.

இந்தத் திருமணம் தடைப்பட வேண்டுமே.

''எப்படி? என்ன வேலை பார்ப்பாய்? ஷார்ட் ஹாண்ட் டைப்ரைட்டிங், ஏதாவது தொழில்... என்ன தெரியும்



உனக்கு? வெறும் பி.ஏ.க்கு அதுவும் ரிசல்ட் வராதபோது என்ன வேலை கிடைக்கும்? ஒரு சமையல்காரி வேலைக்குக்கூட உனக்குத் துப்பில்லை!'' என்று அங்கம் அங்கமாக வெட்டிக் கூறு போட்டாள் அண்ணிக்காரி.

நந்தினி பிரமித்து நின்றாள்.

வெகுவாகக் கலங்கியும் போனாள்.

இவ்வளவு பயனற்றவளா இந்த நந்தினி?

ஆனால், இந்த ராட்சசியிடம் தன் கலக்கத்தைக் காட்ட மறுத்து, இயல்பு போல வளைய வந்தாள்.

இரவில், ''என்னம்மா, சம்மதம் சொல்,'' என்று வற்புறுத்திய அண்ணனிடம் வேறு திசையில் வாதாடினாள்.

''அண்ணா! எண்ணிப் பாருங்கள். இருபத்து ஓர் ஆண்டுகள் வித்தியாசம். எப்படியும் கை... கைம்பெண் கோலம் வந்து விடாதா?''

இந்தப் பாயிண்டில் அண்ணனை அசைத்துவிடலாம் என்று எண்ணியிருந்த நந்தினி அப்போதும் ஏமாந்தாள்.

''நானேகூட முதலில் அதை நினைத்துத்தான் பயந்தேன் நந்துமா. ஆனால் இந்தக் காலத்தில் சாவதற்கு வயது ஏது? இருபது வயதுப் பையன் 'பொட்டென்று' போய் விடுகிறான். எண்பது வயதிலும் பல்லோடு நன்றாக இருக்கிறார்கள். ஆண்டுதோறும் மெடிக்கல் 'செக்கப்' செய்து கொண்டால் ஒன்றும் பயம் இல்லை என்று உன் அண்ணி சொன்ன பிறகுதான் எனக்குத் தைரியமே வந்தது. அவள் சொந்தத்தில் கூட ஒன்றுவிட்ட பாட்டி ஒருத்தி எழுபதாவது வயதில்தான் தன் தொண்ணூற்றைந்து வயதுக் கணவனுக்கு முன்போய்ச் சேர்ந்தாளாம்.''

எமகாதகி! ராட்சசி!

தன் தலையிலேயே போட்டுக் கொள்ளலாமா அல்லது இந்த அண்ணன் தலையிலேயே ஓங்கி ஒன்று போடலாமா என்று வந்தது நந்தினிக்கு.

ஆனால், சின்னப் பிள்ளைத்தனம் இருக்கிறது என்று அப்பா வயது மாப்பிள்ளை பார்ப்பதுபோய், அதற்கு மேல் தாத்தா வயதில் தேடத் தொடங்கி விடக்கூடாதே என்று கல்லாக உட்கார்ந்திருந்தாள்.

''அதனால் சொல்கிறேன், இப்போது சம்மதம்தானே?'' என்று அண்ணன் முடித்தபோது, ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, ''இல்லை அண்ணா! எனக்குக் கொஞ்சமும் பிரியமில்லை. இது வேண்டாம்!'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

மனைவியின் விளக்கங்களில் தான் சமாதானம் ஆனது போல, தங்கையும் சமாதானம் ஆகிச் சம்மதிப்பாள் என்று எண்ணியிருந்த மனோகரன் திகைத்து விழித்தான்.

சட்டெனக் குறுக்கிட்டாள் மாலினி.

''நீங்கள் ஒன்று. திரும்பத் திரும்ப அவளிடம் கேட்கிறீர்களே! அவளுக்கு எது நல்லது என்று நாம்தான் யோசித்து முடிவு செய்து நடத்த வேண்டும். நீங்கள் முடிவு சொல்ல ஏற்பாடு செய்தால் பேசாமல் கழுத்தை நீட்டுகி றாள். இதை விட்டு அவளிடம் போய்க் குழம்புகிறீர்களே! நாள் முழுவதும் உழைத்துவிட்டு வருகிறவர் நீங்கள். பன்னிப் பன்னிப் பேசிக் கொண்டு இரவிலும் விழித் திருந்தால் உடம்பு கெட்டுவிடும். போங்கள். போய்ப் படுங்கள்!'' என்று கணவனைச் செல்லமாக விரட்டினாள்.

'அவளது கெட்டிக்காரத் தனத்தைப் பார்த்தாயா?' என்பது போல் பெருமிதப் பார்வையுடன் எழுந்து சென்ற அண்ணனைப் பார்க்கையில் நந்தினிக்கு ஒரு புறம் பரிதாபமாகக் கூட இருந்தது.

ஆனால், அதை மிஞ்சிக் கொண்டு தன்னைப் பற்றிய பரிதாபம் எழுந்தது.

அண்ணி சொன்னது போல் திருமண ஏற்பாடுகளைச் செய்தால் என்ன செய்ய முடியும்?



ஆதரவற்ற தனிமை நிலையோடு, தன் காலில் நிற்கும் தைரியமும் குலைந்து போகவே, வெகு காலமாகச் செய்யாத ஒன்றை அன்று நந்தினி செய்தாள்.

கண்ணீர் விட்டு அழுதாள் வெகு நேரம்.



7

மாலினி காரியவாதி

இருக்கிற நேரம் எல்லாம் இனிமை யான பேச்சும் சிரிப்புமாக இருந்து விட்டு வாழைப்பழ ஊசி போலக் காரியத்தைச் சாதிக்கும் ரகம்.

செய்யும் காரியத்தைச் சமயம் அறிந்து, மறுத்துப் பேசக்கூட எதிராளிக்கு அவகாசம் இல்லாமல் செய்வாள்.

மறுநாள் மனோகரன் அலுவலகம் செல்ல உடை அணிந்து வரும் வரை வீடு இயல்பாகவே நடந்தது.

கைக்குட்டையை அவனிடம் கொடுத்து விட்டு, ''நந்தினியின் டெப்பாசிட் பணத்தை எடுக்க முடியுமா என்று பாருங்கள். உங்கள் ஆபீசில் லோன் போடலாம் என்றால் நமக்கே பிறகு செலவு இருக்கிறது. சிசேரியன் அது இது என்று வந்தால் அவ்வளவுக்கும் அம்மாவிடம் பணம் கேட்பது உங்களுக்கு அசிங்கம்!'' என்றாள்.

தலையை உருட்டினான் கணவன்.

அண்ணியின் சாமர்த்தியத்தை உள்ளூர வியந்தபடி, ''எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம் என்கிறேன்!'' என அழுத்தம் திருத்தமாக அறிவித்தாள் நந்தினி.

மனோகரன் திகைத்து நிற்க, மாலினியே பேசினாள். ''அவள் அப்படித்தான் பேசிக் கொண்டே இருப்பாள். மருந்தை விரும்பிக் குடிக்கிற பிள்ளையை எங்கேனும் பார்த்து இருக்கிறீர்களா? பிடித்து வைத்து மருந்து ஊற்றுவது போல நல்லது என்று நாம் ஆராய்ந்து

கண்டதைக் கட்டாயமாகச் செய்ய வேண்டியதுதான். அதோடு நான் என்ன சாசுவதமா? பிரசவத்தில் போய் விட்டால் பிறகு இந்த அறியாப் பெண்ணை யார் பார்ப்பது?''

''இதுவரை யார் பார்த்தார்களாம்?'' என்ற துடுக்கான கேள்வி வெளிப்படுமுன், முகம் வெளுத்து நடுநடுங்கி, ''அப்படிப் பேசாதே!'' என்று அலறிவிட்டான் மனோகரன்.

கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு நந்தினியிடம் திரும்பினான்.

''இந்த மாதிரி மறுத்துப் பேசினால் இனி எனக்குப் பொல்லாத கோபம் வரும் நந்தினி. உனக்கு நல்லது எது என்று எனக்குத் தெரியும். கழுத்தை நீட்டு என்றால் பேசாமல் நீட்டுவதுதான் உன் கடமை. மற்றப்படி பேசாமல் இருக்க வேண்டும்,'' என்று அதட்டி விட்டு, மனைவியிடம் திரும்பினான்.

''வரும்போது பாங்க் மானேஜரைப் பார்த்துவிட்டு வருகிறேன்,'' என்று கூறிச் சென்றான்.

அண்ணனிடம் கோபத்துக்குப் பதிலாகப் பரிதாபமே உண்டாயிற்று நந்தினிக்கு.

கூடவே இந்த அசட்டு அண்ணனுக்கு இப்படி ஒரு கெட்டிக்கார மனைவி தேவைதான் என்றும் தோன்றியது.

ஆனால், இவ்வளவு சாமர்த்தியம் குவிந்திருக்கும் இடத்தில் கொஞ்சம் அன்புக்குப் பஞ்சமாகிப் போயிற்றே என்று ஏக்கமாகவும் இருந்தது.

ஆனால் எவ்வளவு காரியக்காரியாக இருந்தாலும், தன்னிடம் மட்டும் எதுவும் செல்லாது என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

இவர்களிடம் என்ன பேச்சு?

அந்த பகதூர் பாண்டியனிடம், ''உன்னைப் பிடிக்கவில்லை அய்யா!'' என்று சொல்லி விட்டால் விஷயம் முடிந்தது.



அலமாரியைக் குடைந்து மனோகரன் முகவரி எழுதி வைக்கும் டைரியைத் தேடினாள்.

''டைரி பீரோ மேல் இருக்கிறது!'' என்றாள் மாலினி.

தன் அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் மிடுக்காகவே சென்று டைரியை எடுத்து வந்தபோது, மாலினி, ''பகதூர் சித்தப்பாவின் விலாசம் கடைசிப் பகுதியில் இருக்கும்,'' என்று கூறி, மீண்டும் நந்தினியைக் குலுங்க வைத்தாள்.

தொடர்ந்து, ''மறுப்புத் தெரிவித்து எழுதுவதற்காக என்றால், அனாவசியமாக அலட்டிக் கொள்ளாதே. அவருடைய இரண்டாவது திருமணமே கிணற்றில் விழ முயன்றவளை இழுத்து வைத்துத் தாலி கட்டியதுதான். உன் மறுப்பையும் அவர் பொருட்படுத்தப் போவதில்லை. பிறகு உன் இஷ்டம்!'' என்று கூறிவிட்டு, மேலே சட்டை பண்ணாமல் அவள் சென்ற விதம், அந்த இரண்டாம் மனைவியின் கதையை உறுதி செய்தது.

மனம் மிரளத் தொடங்கியது.

மாலையில் வந்த அண்ணன், ''கல்யாணப் பத்திரிகையோடு விண்ணப்பித்தால் எழுபத்தைந்து சதவீதத்தைக் கடனாகத் தருவதாகவும், மூன்று மாதத்தில் டெப்பாசிட் காலம் முடிவு அடைந்து விடுவதால் அப்போது முழுத் தொகையையும் திரும்பத் தருவதாகவும் பாங்க் மானேஜர் சொன்னார்,'' என்றான்.

அன்றும், மறுநாளும் அவர்கள் இருவருமாகத் திருமணத் திட்டங்களைத் தீட்டத் தீட்ட நந்தினி திணறிப் போனாள்.

இனி வேறு வழிதான்.

''அண்ணா! என் தோழி பானுவைப் பார்க்க வேண்டும். கொண்டு விடுகிறீர்களா?''என்று கேட்டாள்.

''ஓ!'' என்று தொடங்கியவன் சட்டென முகம் மாற, ''இல்லை, இல்லை, நீயாகவே போய்க் கொள். அல்லது

அண்ணியைக் கூட்டிக்கிட்டுப் போ,'' என்று நிமிர்ந்து பாராமலே முடித்துவிட்டான்.

வாக்கிங் தடைப்பட்ட காரணத்தை நினைத்து அவன் மறுப்பதைப் புரிந்து ஆத்திரத்தில் முகம் சிவந்தாள் நந்தினி.

அவன் அலுவலகம் கிளம்பியதும், அண்ணியிடம், ''நான் வெளியே போகப் போகிறேன். உன்னோடு அல்ல, தனியாக. அண்ணனிடம் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்,'' என்றாள் விரைப்பாக.

லேசாக முறுவல் செய்து, ''சொல்ல மாட்டேன். ஏனெனில் நீ என் காரியமாகத்தானே போகிறாய். ஆனால், சந்திக்கப் போவது சினேகிதியையா அல்லது சினேகிதனையா?'' என்று விஷமமாகக் கேட்டாள் மாலினி.

''நான் போவது உனக்கு நிம்மதி என்றல்லவா நினைத்தேன்,'' என்று முறைத்தாள் நந்தினி.

''இந்தப் பார்வை எல்லாம் என்னிடம் வேண்டாம் நந்தினி. உன்னிடம் எச்சரிக்கை செய்யாமலே உன் அண்ணன் மூலம் பகதூர் சித்தப்பாவோடு உன் திருமணத்தை என்னால் முடித்திருக்க முடியாது என்றா நினைக்கிறாய்? என் விஷயம் என்று வரும் போது மற்றவர்களை அடியோடு ஒதுக்குவேனே தவிர, மற்றப்படி உன்னிடம் எனக்கு விரோதம் இல்லை. அதனாலேயே இந்தத் திருமணத்தில் இருந்து விடுவித்துக் கொள்ள உனக்கு அவகாசமும் வாய்ப்பும் கொடுத்து இருக்கிறேன். செண்பகம் சித்தி மனம் உடைந்து தற்கொலை செய்து செத்தாள் என்பது எனக்குத் தெரியும். நீயாக விலகி விட்டால் உனக்கு அந்த விதியில்லை!'' என்று நியாயவாதி போல் மாலினி பேசினாள்.

''தராசு முள்போல உனக்கு என்ன நியாய புத்தி!'' என்று குத்தலாக வியந்தாள் நந்தினி.

''அது மட்டும் அல்ல; பகதூர் சித்தப்பா விஷயம் நடந்தாலும், அவ்வப்போது உன்னைப் பார்க்கத் துடிப்பார் உன் அண்ணன். நீயாக விலகிவிட்டால், அந்தத் தொல்லை இல்லை,'' என்றாள் மாலினி வெகு சாதாரணமாக.



''வேலை என்றோ, அல்லது காணாமல் போனாலோ, அண்ணன் தேடாமல் பேசாமல் விட்டுவிடுவார் என்றா நினைக்கிறாய்?'' என்றாள் வேதனையை அடக்கியபடி.

''அதை நான் பார்த்துக் கொள்வேன். ஆனால், நீ இங்கே இருந்தால் பகதூர் சித்தப்பாதான் உன் கதி!'' என்று எச்சரித்தாள் மாலினி.

பதிலுக்குப் புண்படுத்தி விடும் வேகத்தில், ''ஒன்று கேட்கட்டுமா அண்ணி? இந்த வீட்டை விட்டு விலகி னால் மட்டும் போதுமா? அல்லது அந்தப் பகதூர் பாட்டனாரிடம் ஏதாவது கைக்கூலி கூட வாங்கியிருக் கிறாயா?'' என்று காட்டமாகக் கேட்டாள் நந்தினி.

அசராமல், ''ஓ! வாங்கியிருக்கலாம் என்று இப்போது தான் தோன்றுகிறது,'' என்ற மாலினி, ''உன் விலகல் நிரந்தரமாயில்லாமல் இடையில் வந்தால் பகதூர் சித்தப் பாவிடம்தான் போயாக வேண்டும் என்பதை மட்டும் ஒருகணமும் மறவாதே!'' என்று தெளிவுபடுத்தினாள்.

''உங்கள் பகதூர் தாத்தாவுக்கு அதற்குள் வேறு பெண் கிடைத்துவிட்டால்?'' என்றாள் நந்தினி ஏளனமாக.

''உன்னை வைத்துக் கொள்ளச் சொல்கிறேன்,'' என் றாள் அவள் கொஞ்சமும் கூசாமல்.

பாவி... பாதகி... ராட்சசி...!

இவளிடம் போய்ப் பேச்சுக் கொடுத்தேனே என்று தன்னையே நொந்தபடி விலகிப் போனாள் நந்தினி.

பானு வீட்டுக்குப் போகும் வழியெல்லாம் நந்தினிக்குப் பழைய நினைவுகள் அலைமோதிக் கொண்டு வந்தன.

ஏதோ ஒரு தூரத்து உறவினரோடு தரகர் வந்து மாலினியைப் பற்றிச் சொல்லிவிட்டுப் போனதும், ''உன் திருமணத்துக்குப் பிறகுதான். எனக்கு அதுவரை வேண்

டாம் கன்னுக்குட்டி!'' என்று அண்ணன் மறுத்ததும், ''நீங்கள் அலுவலகம் போனால் எனக்குத் துணையாய் இருப்பாள். கட்டாயம் அண்ணி வேண்டும்!'' என்று பிடிவாதம் பிடித்து அண்ணனைச் சம்மதிக்க வைத்ததும், ஆவலோடு எதிர்பார்த்ததும்...

துணையாக இருப்பாள் என்று ஆசையாக நம்பியதற்கு, இவள் இருக்கும் ஒரே துணையையும் பிரித்து அனாதை யாக்குகிறாளே...

தொண்டை வலித்து, கண்ணை கரித்துக் கண்ணீர் ததும்பியது.

அழுவது என்றாலே நந்தினிக்குப் பிடிக்காது.

அது கோழைத்தனத்தின் அடையாளம் என்பது அவளது கணிப்பு.

''நானும் கோழையாகிவிட்டேனா?'' என்று வருத்தத் துடன் நினைத்தாள்.

நல்ல வேளையாக நந்தினி சென்றபோது, பானு வீட்டிலேயே இருந்தாள்.

தோழியைக் கண்டதும் விழிகளை விரித்து, ''என்னடா அதிசயம்! மழை பொழியவில்லையே!'' என்று நகைத்தாள்.

''ஆமாமாம், மழை ஒரேயடியாகப் பொழிந்து வெள்ளம் பெருகி, நான் அதில் மூழ்கித் தொலைந்தாலும் நல்லது தான்!'' என்று நந்தினி அலுத்ததும் திகைத்தாள் பானு.

தோழியின் முகத்தைப் பார்த்து மேலும் அதிர்ந்து போய், ''ஏய்... என்ன.... இது? சீச்சீ..இது என்ன அசட்டுத் தனம்?'' என்று நந்தினியின் கண்களைத் துடைத்தாள்.

உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் அமர்ந்தாள் நந்தினி.

''வா, முதலில் குளிர்ச்சியாகப் பழச்சாறு குடி. பிறகு மற்ற தெல்லாம் பேசலாம்,'' என்று அழைத்துச் சென்று பழச்சாறு கொடுத்துப் பருக வைத்தாள். ''இப்போது சொல்லு,'' என்றாள்.



மீண்டும் நந்தினியின் உதடுகள் துடித்தன.

அடக்கிக் கொண்டு, ''பானு! உடனடியாக எனக்கு ஒரு வேலை வேண்டும். மரத்தில் பறித்து வருகிறேன்; கடையில் வாங்கி வருகிறேன் என்றெல்லாம் வேடிக்கை பண்ணாதே. என்னால் தாங்கிக்க முடியாது!'' என்றவள் மீண்டும் உதடுகளைப் பற்களால் அழுத்தியபடி தலை குனிந்தாள்.

மீண்டும் நிமிர்ந்து, ''பானு! எனக்குத் தட்டெழுத்து, சுருக்கெழுத்து என்று தனிப்பட்ட பட்டங்கள் எதுவும் கிடையாதுதான். படித்த பட்டத்துக்கு ரிசல்ட்கூட இன் னமும் வரவில்லை. ஆனால் டியூசன் மாதிரி ஏதாவது... ஏ... தாவது ஒரு வேலை கட்டாயம் வேண்டும் பானு,'' என்றாள் ஒரு மன்றாடலுடன்.

சற்று யோசித்துவிட்டு, ''அக்காவிடம் சொல்கிறேன் நந்து. அவள் பழகுகிறவர்களில் பெரிய பணக்காரக் கும்பல் இருக்கிறது. இங்கேயே ஒரு வேலை..'' என்று பானு மேலே தொடருமுன் நந்தினி குறுக்கிட்டாள்.

''இங்கே வேண்டாம் பானு. சென்னையில் இருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரத்தில். அது பாம்பு, புலி வாழும் காடு என்றாலும் சரிதான்.''

பானுவின் வியப்பு விரைவில் மாறியது. ''உன் அண் ணனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்றாயில்லையா?'' என்று ஒரு மாதிரி குரலில் வினவினாள்.

பதிலை எதிர்பாராமலே, ''ஓகே! அக்காவிடம் கேட்கலாம் வா,'' என்று தோழியின் கையைப் பற்றினாள்.

பானுவின் கணிப்பில், அண்ணன் இறங்கியதை நந்தினியால் தாங்க முடியவில்லை.

''நீயே கேட்டுச் சொல். நான் நாளை வருகிறேன்,'' என்று கிளம்பிவிட்டாள்.

மறுநாள் அவளுக்குச் சொல்ல பானு ஒரு சேதி வைத்திருந்தாள்.

அந்தச் சேதி நல்லதா கெட்டதா என்பதை மட்டும் அன்று மட்டுமல்ல, பல நாட்களுக்கு நந்தினியால் தீர்மானிக்க முடியவே இல்லை.



## 8

மறுநாள் தன்னை நாடிவந்த நந்தினியைப் பார்த்துத் தெம்பூட்டுவது போல முறுவலித்த பானு, தன் அக்காவிடம் அழைத்துப் போனாள்.

நந்தினியைப் புன்னகையால் வரவேற்று அமரச் செய்துவிட்டு, சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தாள், பானுவின் சகோதரியான டாக்டர் சசி.

''நந்தினி! உனக்கு நிரந்தரமான ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்ய இப்போது முடியவில்லை. ஆனால், இதுவும் ஆறேழு மாதம் தொடர்ந்து செய்யக் கூடியதுதான்... அப்படித்தான் நினைக்கிறேன்.''

''என்ன வேலை சசிக்கா?'' என வினவினாள் நந்தினி.

''கம்பானியன் போலத்தான். இதுவரை நர்சிங் தெரிந்த ஆள் தேவைப்பட்டது. இனி அது அனாவசியம்.''

''என்னை ஏற்றுக் கொள்வார்களா அக்கா?'' என்று கவலையுடன் கேட்டாள் நந்தினி.

''ம்... அதில் ஒன்றும் சிரமம் இல்லை. ஆனால்...''

''ஆனால் என்ன அக்கா?'' என்று பயத்துடன் விசாரித்தாள் நந்தினி.

''ஒன்றும் இல்லை. முதலில் அந்தப் பெண்ணின் பெயர் செல்வி.. வயது பதினேழு இருக்கும். ஆறு மாதங்களுக்கு முன் ஒரு கார் விபத்தில் பெற்றோர் இருவருமே இறந்து போனார்கள்.''

''அய்யோ!'' நந்தினி உருகிவிட்டாள்.

''இவளுக்கு நிறையக் காயம். அரும்பாடுபட்டுத்தான் பிழைத்தாள். மருத்துவமனையிலேயே இரண்டு மாதம் தங்க நேர்ந்தது. இப்போது தன் மாமனுடைய ஆதரவில் இருக்கிறாள் கை, கால்களை அசைக்கக்கூடச் சிரமப் பட்டவள் இப்போது மெல்ல மெல்லத் தேறி இரண்டு மாதங்களாகத் தன் நிலைக்குத் திரும்பியிருக்கிறாள். அவளுக்குத்தான் துணையாக இருக்கவும் சிறு உதவிகளைச் செய்யவும் ஆள் தேடுகிறார், அவளுடைய மாமா கீர்த்தி வாசன். செலவு போக மாதம் ஐந்நூறு ரூபாய் தருகிறேன் என்கிறார்.''



''நிரம்பவும் போட்டி இருக்குமே அக்கா?''என்று யோசனையோடு வினவினாள் பானு.

''இருந்திருக்க வேண்டும். ஆனால் இரண்டு தடைகள். ஒன்று, அவரது இருப்பிடம், சென்னையை விட்டு மிகவும் ஒதுங்கியிருக்கிறது. கோவையில் இருந்துகூட நூற்றைம்பது கிலோ மீட்டர் தள்ளிப் போக வேண்டும். ஷாப்பிங், சினிமா என்று பொழுது போக்குக்கு வழி இராது. அடுத்த நாலு மாதங்களில் ஆறு நர்சுகள் அங்கேபோய்த் திரும்பி விட்டார்கள். அவர்கள் சொல்லும் கதைகள்...''

சென்னையில் இருந்து வெகு தூரம் என்ற சொல்லே இனித்துவிட, ''பரவாயில்லை, நான்..'' என்று அவசரமாகத் தொடங்கினாள் நந்தினி.

அவளைத் தடுத்து, ''எதற்கும் கடைசியாகத் திரும்பி வந்த நர்சின் முகவரி தருகிறேன். போய்ப் பார்த்துவிட்டு அதன் பிறகு முடிவு செய். பானு! நீ வேண்டுமானால் நந்தினியோடு போய்விட்டு வா,'' என்று நர்சின் முகவரி தந்து அனுப்பி வைத்தாள் டாக்டர் சசி.

செல்லும் வழியில் தனக்குத் தெரிந்த மற்ற விவரங்களைச் சொன்னாள் பானு.

''அந்தப் பெண் செல்வியின் உடம்பில் பலப்பல எலும்பு முறிவுகள். அவளும் போய் விடுவாள் என்று

எதிர்பார்த்ததுதான். சிறுவயது, ஆரோக்கியமான உடம்பு என்றதால் தப்பினாள். படுக்கையை விட்டு எழவே கிட்டத்தட்ட இரண்டுமாதங்கள் ஆகிவிட்டன.

''வாழ்வதற்கு என்று ஒன்றுமே இல்லாததுபோல வெறிச்சென்ற அவள் முகத்தைப் பார்க்கவே மனதுக்குக் கஷ்டமாக இருக்கும்.

''ஒரே பெண். பாவம், அணைத்து ஆறுதல் சொல்ல உறவென்று ஒரு நாதியில்லாமல் கிடந்தாள்.''

''அவள் மாமா எங்கே போனார்?''என்று வினவினாள் நந்தினி.

''அவர் சகோதரியின் கடைசி நேரத்தில் வந்தாராம். அவரது கையைப் பிடித்தபடியே உயிரை விட்டாளாம் தமக்கை. ஆனால் அக்கா, அத்தான் உடலோடு போனவர் இந்தப் பெண்ணை டிஸ்சார்ஜ் செய்து அழைத்துப் போகத் தான் வந்தாராம். அதுவரை ஆள் கண்ணிலேயே பட வில்லை. இந்தப் பெண் பாவம். தன்னந்தனியாக ஏங்கிக் கிடப்பாள். ஏதோ கூட்டிப் போகலாம்னு வந்தார். பிறகு இந்த ஆறு நர்சுகளின் நம்பமுடியாத கதை.''

கண்ணில் கேள்விக் குறியுடன் தோழியை ஏறிட்டாள் நந்தினி.

''பின் என்ன நடந்தது? மருத்துவ மனையில் அவ் வளவு சாதுவாக இருந்த பெண் கத்துகிறாள், கை நீட்டு கிறாள் என்றால் நம்பவா முடிகிறது?''

ஆனால், அந்த நர்சு சொன்ன கதை அதையும் மிஞ்சியிருந்தது.

நந்தினியை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''உயிர் மேல் ஆசை இருந்தால் அந்தத் திசையைக்கூட எட்டிப் பாராதே!'' என்று பயமுறுத்தினாள்.

''ஏன்?'' என்றாள் நந்தினி மிரண்டு போய்.

''அந்தப் பெண்ணுக்கு ஹிஸ்டீரியா. தேவாங்குமாதிரி இருக்கிற அவளுக்கு வெறி வரும் போது பார்க்க வேண்டுமே! பிடித்து நிறுத்த நாலு ஆள் வேண்டும்.''



''கடைசியாகக் கத்தியை எடுத்துக் குத்த வந்தாள் பார். கையில் கீறியே விட்டாள். அந்தப் பையன் மட்டும் வந்திராவிட்டால் என் உயிர் போயிருக்கும்!'' என்று முகம் வெளுத்தாள் நர்சு பவானி.

உள்ளூரப் பயத்துடன், ''யா... யாருக்கும் அடங்க மாட்டாளா? வீட்டில் பெரியவர்கள் இருப்பார்கள் இல் லையா? அந்த மாமா...'' என்று தடுமாறினாள் நந்தினி.

வெகு ஆத்திரத்துடன் சீறிக் கொண்டு வந்தது நர்சின் பதில். ''ஏன் இல்லை. இருக்கிறார்.ஆனால் அவருக்கு நம்மைப் பார்த்தால் உயிரும் உணர்ச்சியும் உள்ள மனிதப் பிறவிகளாகத் தோன்றாது. அவருக்குப் பெண் ஓர் எந்திரம் தான். அவளுக்கும் இதயம் உண்டு என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்காதவர்!'' என்று ஏக்கமாக முடித்தாள்.

''ஏன்... அப்படி...'' என்று நந்தினி தொடங்கவும், பவானி முகம் மாறித் தடுத்து -

''இதோ பார், உயிர்மேல் ஆசையிருந்தால் போகாதே. ஆனால் உன்னைப் போகாதே என்று தடுக்க நான் யார்? உனக்கு விருப்பமானால் போய் மாட்டிக் கொண்டு நன்றாகத் திணறு. இப்போது எனக்கு வேறு வேலை இருக்கிறது. போய் வாருங்கள்!'' என்று கத்தரித்து முடித்தாள் நர்சு பவானி.

ஆனால் பானுவிடம் மட்டும் ஒரு முறுவலுடன், ''வேறு நல்ல இடத்தில் தேவைப்பட்டால் என்னைச் சிபாரிசு செய்யும்படி அக்காவிடம் சொல்லம்மா,'' என்று குழைந்தாள்.

''இப்போது கிளம்புகிறீர்களா?''

தோழிகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு எழுந்தனர். பானு கிளம்ப, நந்தினி பின் தொடர்ந்தாள்.

''இந்த நர்சு ஏதோ சொல்லப் பிடிக்காமல் மறைப்பது போல இருக்கிறது,'' என்று முணுமுணுத்தாள் நந்தினி.

''அப்படித்தான் எனக்கும் தோன்றியது. நம்மையும் பேச விடாமல் விரட்டி அடித்தாளே... ஆனால், நந்து! இவள் பேச்சைக் கேட்ட பிறகு நீ அங்கே போவதில் எனக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லை,'' என்றாள் பானு.

நந்தினிக்கும் விருப்பம் இல்லைதான்.

ஆனால், அது வேண்டாம், அது பிடிக்கவில்லை என்று எதையும் ஒதுக்கும் நிலையில் அவள் இப்போது இல்லையே!

அவள் அண்ணிக்காரி பொல்லாத ராட்சசியாக அல்லவா இருக்கிறாள்.

அந்தப் பகதூர் பாண்டியனிடம் சிக்கிச் சீரழிவதைக் காட்டிலும் இது மேல்தான்.

ஆனால் இன்னமும் ஒரு முயற்சி செய்து பார்க்கலாமோ என்று தோன்றியது நந்தினிக்கு.

மறுநாள் அண்ணனிடம், ''பகதூர் பாண்டியனின் மனைவி இறந்தது பற்றி என்னென்னவோ கேள்விப் படுகிறேனே அண்ணா, நீங்கள் கொஞ்சம் விசாரித்துப் பாருங்களேன்,'' என்று எழுதிக் கொடுத்தாள்.

''ஓ! அது பற்றி அண்ணி முன்பே சொல்லிவிட்டாளே! நந்தும்மா, பணக்காரனைப் பார்த்தால் பத்தும் சொல்லத் தான் எல்லோருக்கும் தோன்றும். ஆனால், அவர் உன்னைப் பொன்னாகப் போற்றி வைத்துக் கொள்வார் என்று நிச்சயமாகச் சொன்னாள்,'' என்று அதற்கு மேல் அதில் யோசிக்க, விசாரிக்க என்று ஒன்றுமே இல்லாததுபோல மனோகரன் முடித்துவிடவும், நந்தினி வாயடைத்துப் போனாள்.

அண்ணனின் தலைக்குள் மூளையிருந்த இடத்தில் அண்ணி அமர்ந்து கொக்கரிப்பது போலத் தோன்றியது.

அண்ணன் வெளியே சென்றதும், மாலினியிடம், ''நான் அந்த ஆளிடம் கஷ்டப்பட நேர்ந்தால், அண்ணன் உன்னைத் தட்டிக்கேட்க மாட்டார் என்றா நினைக்கிறாய்?'' என்றாள் காரமாக.



''அந்த நேரம் வரும்போது நானும்கூட ஏமாந்து போனேனே என்று அவரோடு கூடச் சேர்ந்து அழுதால் சரியாகப் போகிறது!'' என்றாள் அவள் சாவதானமாக.

''அந்தச் சிரமம் உனக்கு வைக்கமாட்டேன் அண்ணி!'' என்றாள் நந்தினி வேகத்துடன். ''ஆனால், இப்போது போனாலும்கூட நீ நினைப்பதுபோல அண்ணன் ஒன்றும் சும்மா இருந்துவிட மாட்டார், பார்த்துக் கொள்.''

''இருக்க வைப்பேன்!'' என்றாள் மாலினி கர்வத்துடன் தலையை நிமிர்த்தி. ''தேடி வந்தால் தற்கொலை செய்து கொள்வேன் என்று நீ சொன்னாய் என்று ஒரு போடு போட்டால், பேசாமல் இருந்துவிடப் போகிறார். ரொம்பவும் திட்டம் போடாதே. இப்போது தற்கொலை ஆயுதத்தைக் கையாள நினைத்தால், இதுவெறும் பொய் மிரட்டல். சொல்பவள் செய்யமாட்டாள் என்று உன் அண்ணனை நம்பவைக்கவும் என்னால் முடியும். ஜாக்கிரதை!'' என்று இறுமாப்புடன் எச்சரித்தாள்.

உதடுகளை இறுக மூடிக் கொண்டு விலகிப் போனாள் நந்தினி.

அதன் பிறகு பானு தடுத்துப் பேசியதை அவள் லட்சியமே செய்யவில்லை.

அண்ணி இருக்கும் இடத்தில் இருந்து விலகிப் போயாக வேண்டும் என்ற ஒன்றை வெறியாக இயங்கிக் கடைசியாக ரெயிலில் ஏறி அமர்ந்து விட்டாள்.

நகரத் தொடங்கிய ரெயிலோடு நடந்தபடி பானு சொன்னாள். ''எப்போதும் எச்சரிக்கையோடு இரு நந்து. அதுவும் செல்வியின் மாமாவிடம் ஜாக்கிரதை.''

என்ன ஜாக்கிரதை?

முதல் தடவையாக வேலையைப் பற்றியும், அது தொடர்பான மனிதர்களைப் பற்றியும் சிந்திக்கலானாள்.

செல்வி... பரிதாபத்திற்கு உரியவள்.

அந்த மாமா...

நர்சு பவானி, செல்வியின் மாமாவைப் பற்றி வெகு ஆக்ரோஷத்துடன் பேசினாளே... அவன் என்ன செய்திருப்பான்?

ஒருவேளை...

நந்தினியின் உடம்பு குலுங்கியது.

வலைக்குத் தப்பிப் புலி வாயிலே விழப் போகிறாளா?

தைரியம் இழந்த மனது தறிகெட்டு ஓடியது.



## 9

ரெயிலில் ஏறி அமரும் வரையில் அடுத்து வருவது பற்றி நந்தினி கொஞ்சமும் எண்ணிப் பார்க்கவில்லை.

செல்விக்குக் கொடுக்க வேண்டிய மருந்துகள், அவளுக்கு அளிக்க வேண்டிய பயிற்சிகள் பற்றி டாக்டர் சசி கூறியவற்றை மறந்துவிடாமல் குறித்து வைத்தாளே தவிர, இனி அதுதான் தனது வாழ்வு என்ற எண்ணம் வரவில்லை.

நிகழ்கால வேதனை திரை போல மற்றதை மறைத்திருந்தது.

ஆனால், ரெயிலேற்றிவிட்ட தோழியின் எச்சரிக்கை அந்தத் திரையைக் கிழித்து நெஞ்சுக் கூட்டினுள்ளும் ரெயில் ஓடச் செய்தது.

''இதயம் இல்லாத கல் அந்தக் கீர்த்திவாசன்!'' என்று நர்சு பவானி சொன்னாளே...

வேலை செய்பவர்களை எந்திரமாகப் பாவிப்பவன் என்று அவள் சொன்ன போதுகூட, அதிகவேலை வாங்கக்கூடும், கடுமையாகப் பேசக்கூடும் என்று மட்டும்தான் அலட்சியமாக நினைத்திருந்தாள் நந்தினி.

ஆனால், இப்போது வேறு ஏதேதோ தோன்றிப் பயமுறுத்தியது.

வேலைக்கு என்று வரும் பெண்களைப் பலவிதமாகப் பயன்படுத்துவார்கள் என்று கேள்விப்பட்டு இருக்கிறாள். இவனும் அப்படி நடத்துபவனா?



'அதெல்லாம் என்னிடமா செல்லும்!' என்று எண்ணமிட்டபடி, நிமிர்ந்து அமர்ந்தாள் நந்தினி.

பணத்தைக் காட்டி வேலையைத் தூண்டிலாகப் போட்டுப் பிடிக்காமல் உடல் பலத்தால் வெல்ல முயன்றால் என்ன செய்ய இயலும்?

மீண்டும் தனது தைரியம் இழந்து தவிக்கலாயிற்று.

தப்பி ஓடக் கூட முடியாத காடு என்று பவானி வர்ணிக்கவில்லையா?

மதுரைக் கல்லூரியில் கற்ற கராத்தே சமயத்தில் நினைவுக்கு வந்து மீண்டும் நிமிர்ந்து அமர வைத்தது. என்னிடம் வாலாட்டினால் பல்லைத் தட்டி விடுவேனாக்கும்.

சற்றுப் பொறுத்து இன்னோர் எண்ணம்.

அந்த ஆளும் கராத்தே வல்லுனன் ஆக இருந்தால்?

இந்தக் களைப்புக்கு முடிவு ஏது? பிடிவாதமாகச் சிறு வயதில் அன்னை கற்றுத் தந்திருந்த கந்தர் கலிவெண்பாப் பாடலை உருப்போடலானாள்.

''என் தாயும் எனக்கருள் தந்தையும் நீ!
சிந்தாகுலமானவை தீர்த்தெனையாள்!
கந்தா கதிர்வேலனே உமையாள்
மைந்தாகுமரசோ மறைநாயகனே!''

மறை நாயகன் மனதில் இருந்தது என்னவோ... யாரறிவார்?

சசியின் வார்த்தைகளை இம்மி பிசகாமல் பின்பற்றி ரெயில், பஸ், இன்னொரு பஸ் என்று மாறிக் கடைசியாக அந்தக் கிராமத்தில் நந்தினி இறங்கி நின்றபோது, காலை பத்துமணி. அப்போதும் காற்று குளிர்ச்சியாக சிலுசிலுத்தது.

பச்சைப்பசேல் என்று இருந்த சுற்றுப்புறத்தை ரசனையோடு துருவியவள் கொஞ்சம் குழம்பிப் போனாள்.

அவளை அழைத்துப் போக ஏன் யாருமே வரவில்லை?

அவளது வருகை குறித்து டெலிபோனில் அறிவித்து விடுவதாகச் சொன்ன சசி, ஏதாவதுஅவசர வேலையில் மறந்து இருப்பாளோ?

ஊகூம். சசி அக்கா அப்படிப்பட்டவள் அல்ல.

தனக்காக நேரம் இல்லாவிட்டாலும் அடுத்தவர் மூல மாவது சொல்லிக் காரியத்தைச் செய்து முடித்து விடுவாள்.

பின்னே?

அங்கங்கே குறுகுறுத்த பார்வைகளைச் சந்திக்க மன மின்றி, கையோடு கொண்டு போயிருந்த நாவலில் பார் வையைப் பதித்தாள்.

வெகுநேரம் ஆகிவிட்டாற்போல் தோன்றவும் கையைத் திருப்பி மணி பார்த்தாள்.

பத்தே நிமிடந்தான் சென்றிருந்தது.

இரண்டு மணி நேரம் போலத் தோன்றி, பத்து முறை நேரம் பார்க்க வைத்த இன்னொரு பத்து நிமிடங்கள்.

சற்று யோசித்து விட்டு எதிர்ப்புறம் இருந்த சின்னக் கடையை நோக்கி நடக்கலானாள்.

அவள் அசைவதற்காகவே காத்திருந்தாற் போல ஒரு சைக் கிள் வேகமாக வந்து அவளது வழியை மறைத்து நின்றது.

என்னதென்று நிமிருமுன் ஒரு கவரை அவள் கையில் திணித்துவிட்டு, பெடலை வேகமாக மிதித்துக் கொண்டு பறந்து விட்டான் சைக்கிளில் வந்தவன்.

ஆச்சரியத்துடன் கையில் இருந்த கவரைப் பிரித்து, உள்ளேயிருந்த துண்டுக் காகிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்தவளின் முகம் வெளிறியது.

''உயிர் மேல் ஆசை இருந்தால் வந்த வழியே திரும்பிப் போய்விடு...''

வேலைக்கு வேண்டாம் என்றால், நேருக்கு நேர் சொல்ல வேண்டியதுதானே?



அதை விட்டு இதென்ன குறுக்கு வழியும் கிறுக்கு மிரட்டலும்?

அதோடு வந்த வழியே போக வேண்டுமாமே?

உள்ளூர மூண்ட சினத்துடன் கடிதத்தை மடித்து உறையுடன் கைப் பையில் திணித்தாள்.

உறுதியான நடையுடன் கடையை அணுகினாள்.

மரியாதையுடன் எழுந்த கடைக்காரரிடம், ''மலர் வனத் துக்கு எப்படிப் போக வேண்டும்?'' என்று விசாரிக்கும் போதே, தனது முட்டாள் தனத்தை உணர்ந்தாள்.

அவள் காதில் விழுந்த பேச்சும் கிசுகிசுப்பும் தமிழ் மொழியல்ல.

மலையாளம் போல... மலையாளம்தான்.

ஆங்கில இலக்கியம் பயின்றதற்குப் பதில் மலையாளம் படித்து இருந்தால் இப்போது நன்றாக இருந்து இருக்கும் என எண்ணமிட்டபடி, ''மலர் வனம்... மலர் வனம்... வழி எப்படி?'' என்று வழியை சைகையால் வினவினாள்.

புரிந்து கொண்ட பாவனையில் மிச்சமிருந்த பற்கள் அத்தனையும் கள்ளம் இன்றிக் காட்டினார் கடைக்காரர்.

அவருடைய ஏற்பாட்டின்படி அவளை அழைத்துச் செல்ல வந்து நின்ற வண்டியைப் பார்த்ததும், மற்ற எல்லா வற்றையும் மீறிக்கொண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது.

சரியான கட்டை வண்டி.

எப்படியோ காப்பாற்ற வந்த வண்டிதான் என்று நினைத்தபடி சாமான்களோடு வண்டியில் ஏறினாள்.

பாதை ஒரு மாதிரியாக இருந்தபோதிலும் இருபுறமும் கண்ணுக்கு எட்டிய வரையில் பசுமையும் பன்னிறப் பூக்களுமாக வெகு அழகாக இருந்தது.

ஆனால், இந்த எழிலில் நந்தினியால் ஈடுபட முடியவில்லை.

அந்தப் பெண் செல்வி ஹிஸ்டீரியாவில் அவ்வப்போது முரண்டும் முரட்டுத்தனமுமாக இருக்கக் கூடும் என்று சசி கூறியிருந்தாள். மற்றப்படி மிஸ்டர் கீர்த்திவாசன் தன்

பொறுப்பில் வாழும் செல்விக்கு ஒரு துணையை ஏற்பாடு செய்வதில் வெகு தீவிரமாக இருப்பதால், நந்தினிக்கு அங்கே வரவேற்பு நிச்சயம் என்றும் சொல்லியிருந்தாள்.

அந்தக் கடிதம் அவளைக் குழப்பியடித்தது.

வேலைக்கு யாரும் தேவையில்லை என்றால் தேடி யிருக்கவே வேண்டாமே!

ஆள் வந்தபின் கடிதம் மூலம் மிரட்டி விரட்டுவதா?

சசியின் செய்தி கிடைக்கவில்லையோ என்று நந்தினி கவலைப்பட்டது எல்லாம் வீண்.

செய்தி கிடைத்துத்தான் இருக்கிறது.

சட்டென அவளுக்கு எல்லாம் விளங்கிப் போயிற்று.

சசியின் செய்தி அந்தக் கீர்த்திவாசனுக்குப் போய்ச் சேராமல் இடையில் எப்படியோ செல்வியிடம் கிடைத்திருக்க வேண்டும்.

நர்சு என்றால் வெறுக்கும் செல்வி குறுக்கு வழியில் நந்தினியை விரட்ட முயன்றிருக்கிறாள்.

பெற்றோரை இழந்த அதிர்ச்சியால் ஏற்பட்ட ஹிஸ் டீரியா என்றால்,இந்த அளவுயோசித்துத் திட்டம் போட்டு வேலை செய்ய முடியுமா?

நந்தினி ரொம்பவும் சந்தேகப்பட்டாள்.

அத்தோடு அவள் சொன்னதை வீட்டுத் தலைவருக்குத் தெரியாமல் செய்யும் ஆளும் அவளிடம் இருக்கிறான்.

கடிதம் தந்த சைக்கிள்காரனுடைய முகத்தை மனத் தில் கொணர முயன்றாள்.

தாடி, மீசை எல்லாம் ஒட்டாக இருக்குமோ?

எப்படியும் அவளது வரவை விரும்பாத இரண்டாவது ஆள் அவன்.

இனி என்ன நடக்கும்?

என்ன நடந்தாலும் அது நடக்கிறபோது பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். அனாவசியமாக மூளையைக் குழப்பிக் கொள்வது முட்டாள்தனம் என்று முடிவு செய்து



கொண்டு அந்த மலைநாட்டு அழகில் வலுக்கட்டாயமாக மனதைத் திருப்பினாள் நந்தினி.

அதுவும் கடினமாக இல்லைதான்.

மலர் வனத்தில் அன்றைக்கு அவளை யாரும் எதிர் பார்க்கவில்லை என்பது நன்றாகத் தெரிந்தது.

''அய்யா ஊரிலே இல்லையே...'' என்று முக்கால் வழுக்கை மனிதர் ஒருவர் கையைப் பிசைந்தார்.

வீட்டு விவகாரங்களைக் கவனிப்பவர் போலத் தோன்றிய ஓர் அம்மாள், சட்டெனப் பொறுப்பை ஏற்று, ''அய்யா வரும் வரை முன் அறையில் தங்கிக் கொள்ளுங்கள். அவர் வந்த பிறகு வேலையைத் தொடங்கலாம். பயண அலுப்பு இருக்கும். குளித்து விட்டு ஓய்வு எடுங்கள். சாப்பாட்டை அரைமணி நேரத்தில் அனுப்புகிறேன்,'' என்றார்.

அந்தக் கீர்த்திவாசன் வரும்வரை கொடுக்கப்பட்ட அறையோடு ஒதுங்கி இருப்பதே சரி என்று உணர்ந்தாள் நந்தினி.

அந்த அம்மாள் கூறியது போல, தன் அறையை ஒட்டி யிருந்த குளியலறையில் குளித்தாள் நந்தினி.

வந்த சுவையான உணவை அருந்தினாள்.

அடர்ந்த கூந்தலை விரித்துக் காயவிட்டபடி, ஜன்னல் வழியே இந்தச் செழிப்பான பூமியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

கதவு தாழிடப்படும் ஓசை கேட்டுச் சட்டெனத் திரும் பிய போது முதல் முறையாகச் செல்வியைச் சந்தித்தாள்.

அந்த மெலிந்த உருவத்திடம் மற்ற எல்லாவற்றையும் விட அவளைக் கவர்ந்தது கையில் இருந்த கத்திதான்.

ஆக... பவானி சொன்னது பொய் இல்லை!

## 10

கதவை உட்புறமாகத் தாழிட்டுத் திரும்பிய செல்வி, சன்னல் ஓரமாகவே நின்றிருந்த நந்தினியை வெறித்துப் பார்த்தாள்.

அவள் கையில் இருந்த கத்தியின் மீது கவனம் வைத்தபடியே செல்வியை நோட்டமிட்டாள் நந்தினி.

சுருள் கூந்தலும், வட்டக் கண்களும், மொட்டு மூக்கும், பெரிய உதடுகளும், பச்சரிசிப் பற்களும், சற்றே சதைப் பற்றோடு இருந்திருந்தால் மனதைச் சுண்டி இழுக்கக் கூடியவையே.

மிடிக்கும் பிளவுசுக்கும் வெளியே குச்சி குச்சியாகத் தெரிந்த கைகால்கள் நந்தினியின் மனதை உருக்கின.

சாப்பாட்டுத் தட்டை எடுத்துப் போக வந்த பெண், ''நல்ல வேளை! செல்வியம்மா மாதிரி நீங்கள் சோற்றைக் கொறிக்கலை!'' என்று திருப்திப்பட்டது நினைவு வந்தது.

இந்தப் பெண் இப்படிப் பட்டினி கிடந்து மெலிவானேன்? ஆறு மாதங்கள் ஆன பிறகும் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லையா?

அவளது எண்ணங்களை இடைவெட்டி, ''கடிதம் கிடைத்த பிறகும் ஏன் வந்தாய்? உன் உயிர் மேல் உனக்கே ஆசையில்லையா?'' என்று கத்தியைத் தூக்கிக் காட்டியபடி அழுத்தமான காலடிகளுடன் நெருங்கி வந்தாள் செல்வி.

'இன்னும் கொஞ்சம் அருகில் வரட்டும், பார்த்துக் கொள்ளலாம்,' என்று அசையாமலே நின்றாள் நந்தினி.

ஆனால் நெருங்க நெருங்க, செல்வியின் காலடிகளில் அழுத்தம் குறைவதையும் கை தொய்வதையும் உதடுகள் நடுங்கத் தொடங்குவதையும் கண்டபோது, அவளுக்குப் பரிதாபமாகி விட்டது.

அந்த பவானி கத்தியைக் கண்டதும் மிரண்டு போய், பிடுங்க முயன்று காயத்தைத் தானாகவே இழுத்திருக்க வேண்டும்.



இந்தப் பெண் பாவம்...

நந்தினிக்குச் சற்றுத் தொலைவிலேயே நின்றுவிட்ட செல்வி, ''உனக்கு... உனக்குப் பயமா இல்லையா? நீ போகாவிட்டால் நி...நிஜமாகவே கு..கு... குத்திடுவேன்!'' என்று மிரட்டலாகப் பேச, வெகு பிரயாசைப்பட்டாள்.

நந்தினி வேகமாக ஒரு முடிவுக்கு வந்து, ''சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டம்!'' என்றாள் சுருக்கமாக.

''அப்படி என்றால்?'' செல்வியின் விழிகள் கொட்டைப் பாக்காய் உருண்டன.

உலகை வெறுத்த பாவனையுடன், ''குத்தி விடு என்கிறேன். வெளியே சென்று வேதனைப்பட்டுச் சாவதை விட, இங்கேயே ஒரே குத்தில் முடித்து விடு!'' என்று கையைக் கட்டிக் கொண்டு நின்றாள்.

''வெளியே போனால் ஏ...ன்... சாக வேண்டும்?'' என்று குழப்பத்துடன் வினவினாள் செல்வி.

''பெற்றவர்கள் இல்லாது போக்கிடம் அற்றுப் போன அனாதைகள் யாரை நம்பி வாழ்வது?'' என்றாள் மெய்யான விரக்தியுடன் நந்தினி.

தாயோ, தந்தையோ இருவரில் ஒருவர் இருந்திருந்தால் கூட அண்ணனைப்போல இப்படி ஆடுவார்களா? அந்தக் கணத்தில் உண்மையாகவே வாழ்வில் பிடிப்பற்றுப் போயிற்று அவளுக்கு.

''உனக்கும் அம்மா அப்பா யாரும் இல்லையா?'' செல்வியின் கரத்தில் இருந்த கத்தி நழுவி விழுந்தது. ''எனக்கும் யாருமில்லை!'' என்றாள் குரல் தழுதழுக்க.

மனம் உருகிவிட, கத்தியை எடுத்துக் கொள்ளும் எண்ணத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, செல்வியின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் நந்தினி. திகைத்தாள். கடலளவு சோகம் என்றால் இதுதானா?

அவள் கையைப்பற்றி லேசாக அழுத்தி, ''தெரியும்,'' என்றாள் மென்மையாக.

''உன் பெற்றோர்கூட இப்போதுதான் இல்லாமல் போனார்களா? அதனால்தான் இந்த மாதிரி வேலை என்றால்கூடப் பரவாயில்லை என்று வந்தாயா?'' என்று லேசாக முகம் கன்றினாள் செல்வி.

முழுப் பொய்யில் செல்வியின் அன்பைச் சம்பாதித்துக் கொள்ள விரும்பாமல், 'அப்படி இல்லை,' என்று மறுத்தாள் நந்தினி. ''என் சிறுவயதிலேயே இருவரும் இறந்து போய் விட்டார்கள். ஆனால் அவர்கள் இருந்திருந்தால் நான் வேலை என்று தேடி இங்கே வந்திருக்கமாட்டேன்,'' என்றாள் அமைதியாக.

செல்வியின் பார்வை எங்கோ வெறித்தது. ''ஆமாம். அம்மாவும் அப்பாவுமாக உலகத்தையே நம் காலடியில் வைக்கும் போது நமக்கு அதன் அருமை புரிவது இல்லை. தெரியும் நிலை வரும் போதோ எந்தவிதப் பிரயோசனமும் இல்லை!'' என்று சோர்வுடன் சோபாவில் சாய்ந்தாள்.

மிஞ்சி மிஞ்சி நந்தினியைவிட இரண்டு வயது சின்னவளாக இருக்கலாம் இந்தச் செல்வி! ஆனால் அந்தக் கணத்தில் செல்வியை விட மிகவும் பெரியவளாக உணர்ந்தாள் நந்தினி. சோபாவின் கைப்பிடியில் அமர்ந்து, ''முதலைப் போலவே முடிவும் சர்வ நிச்சயமான ஒன்றுதான் செல்வி. நம்முடைய அறிவினாலோ முயற்சியினாலோ தடுக்க முடியாமல் இறைவன் சித்தப்படியே நடந்த ஒன்றை எண்ணி இப்படி வருந்தலாமா?

''நீ இப்படி வேதனையும் வெறுப்புமாகப் பட்டினி கிடந்து மெலிவதை உன் பெற்றோரே கூட விரும்ப மாட்டார்கள் இல்லையா?'' என்று கனிவுடன் செல்வியின் முதுகை வருடினாள்.

சிறிது கண்ணீர் வடித்தாள் செல்வி. சற்று நேரத்தில் கண்களைத் துடைத்துக் கொண்டு நேராக உட்கார்ந்தாள்.

''உங்களை எனக்குப் பிடித்திருக்கிறது மிஸ் நந்தினி... நந்தினிதானே உங்கள் பெயர். டாக்டர் சசி அப்படித்தான் சொன்னார்கள்.''



''பெயர் அதுவேதான். ஆனால் 'மிஸ்' எல்லாம் போடாமல் 'ங்கள்' என்று முடிக்காமல் பேசலாம்,'' என்று சிநேக பாவனையில் முறுவலித்தாள் நந்தினி.

சில கணம் நந்தினியின் முகத்தையே பார்த்துவிட்டு, ''உன் சிரிப்பு மிக அழகாக இருக்கிறது நந்தினி. இனி நீ என் கட்சி. சரிதானா?'' என்று கேட்டாள் செல்வி.

''ஓகே!'' என்று நந்தினி நிம்மதியோடு சம்மதித்தாள்.

''நந்தினி! நான் உனக்குக் கொஞ்சம்கூடத் தொல்லை பண்ணாமல், முரண்டு பிடிக்காமல் மிகமிக நல்லவளாக இருக்கிறேன். அதற்குப் பதிலாக...''

''பதிலாக?''

''நான் என் மாமாவை மணந்து கொள்ள வேண்டும் என்று நீ என்னிடம் பேசக் கூடாது. செய்வாயா?'' என்று கெஞ்சுதலாகக் கேட்டாள் செல்வி.

தூக்கிவாரிப் போட்டவளாக, ''மாமாவை மணப்பதா?'' என்றாள் நந்தினி.

இங்கேயுமா அதே கதை?

இந்தக் கிழட்டு மாமன்களுக்கெல்லாம் இளசு இளசாய் மருமகள்தான் மனைவியாக வேண்டுமாக்கும்! என்ன அநியாயம்! நாற்சந்தியில் நிறுத்திக் கசையடி கொடுக்க வேண்டும்.

''அந்த மாதிரித் திருமணத்துக்கு நான்தான் முதல் எதிரியாக இருப்பேன்!'' என்று உரக்க அறிவித்தாள் நந்தினி.

அவள் கையைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, ''ரொம்ப நன்றி!'' என்றாள் செல்வி.

மனம் விட்டுப் பேச ஒருவருக்காகக் காத்திருந்தாள் போலும்.

செல்வி நிறையச் சொன்னாள்.

ஆனால் அவள் சொன்ன சேதிகள்தான் நந்தினியின் மனதிற்கு உகந்தவையாக இல்லை.

செல்வியின் பெற்றோர் பெரிய பணக்காரர்களாம். ஒரு பெரிய சர்க்கரை ஆலையும் துணி மில் ஒன்றும் அவர்களுடையதாம்.

இப்போது அதற்கெல்லாம் செல்விதான் வாரிசு.

வாரிசாகப் போனதாலேயே மாமனுக்கு மண ஆசை மிகுந்து விட்டதாம்.

சாகப் போகிற சகோதரியிடம் குழைந்து செல்வியின் பொறுப்பைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி செய்து விட்டாராம் அந்த மாமா கீர்த்திவாசன்.

எல்லாம் அவரது அதிகாரத்தின் கீழ் வந்தவுடன் தன்னை மணந்து கொள்ளும்படி உத்தரவு போடுகிறாராம்.

வருகிற நபர்கள் எல்லாரும் மாமாவின் பணத்தில் மயங்கி இவளிடம் உரு ஏற்றத் தொடங்குகிறார்களாம் - சீதையிடம் அரக்கிகள் செய்தது போல.

''மாமாவும் பணக்காரர் என்றால் உன் பணம் எதற்கு?'' என்று ஐயத்துடன் விசாரித்தாள் நந்தினி.

''அச்சோடா! உனக்கு ஒன்றுமே தெரியவில்லையே. பணம் என்றால் சேரச் சேர ஆசைதான். எந்தப் பணக்காரனாவது சம்பாதித்தது போதும் என்று நிறுத்தப் பார்த்திருக்கிறாயா?''

''ஓகோ...''

''எனக்கு ரொம்பவும் ஆத்திரம் என்ன தெரியுமா? முன்பு இருந்த நர்சுகள் மாமாவிடம் உடம்பை நெளித்து, பல்லை இளித்துவிட்டு, அவரையே மணக்கும்படி என்னிடமும்...''

''உன் மாமாவின் பணத்துக்கு ஆசைப்படுகிறவள்தானே அவரை மயக்கி மணக்க முயற்சி செய்வாள்? உனக்குச் சிபாரிசு செய்வாளா?'' என்று ஆட்சேபித்தாள் நந்தினி.



''உனக்கு ஒன்றும் தெரியவில்லை நந்தினி. மணக்க முடியாவிட்டால் என்ன? பணக்காரனின் 'கீப்' என்றால் எவ்வளவு வசதி தெரியுமா? நகை, துணிமணி...''

''போதும் செல்வி. கேட்கவே குமட்டுகிறது!'' என்று பேச்சை மாற்ற முனைந்த போது, எங்கோ மணி முழங்கியது.

முகம்வாட, ''மணி முழங்குகிறது பார். மகாராஜா வருகிறார்!'' என்று செல்வி உதட்டைப் பிதுக்கினாள்.

''ஓ! பழங்காலப் பந்தாவா? பராக்கெல்லாம் கூட உண்டா?''என்று வியப்போடு விசாரித்தாள் நந்தினி.

சிரித்துவிட்டு, ''சேச்சே! அதெல்லாம் இல்லை. கேட் திறக்க, கார் கதவு திறக்க, காரை ஷெட்டில் கொண்டு விட, எல்லாவற்றுக்கும் தயாராக நிற்க வேண்டாமா? அதனால்தான்.''

''ஓகோ!''

வயதான மனிதனுக்கு இதையெல்லாம் செய்ய ஆள் தேவைப்படுவது இயற்கையே. ஆனால் அந்த இளம் பெண்ணின் வாழ்வைப் பலி வாங்க வேண்டுமா?

முழு மூச்சுடன் அதை எதிர்த்துப் போராட முடிவு செய்தாள் நந்தினி. நல்ல வார்த்தையில் கேளாவிட்டால் போலீஸ் அது, இது என்று மிரட்ட வேண்டியதுதான்.

எதிர்பார்த்தது போலவே நந்தினிக்கு அழைப்பு வந்தது.

எதிர்பாராத ஒன்று, ஆபீஸ் அறையில் மேசையின் மறுபுறம் அமர்ந்திருந்த மனிதன்தான்.

ஒரு வழுக்கைத் தலை அல்லது நரை முடியை எதிர்பார்த்துச் சென்றவள் கருத்தடர்ந்த சிகையைக் கண்டு திகைத்துப் போனாள்.

ஒடுங்கிய தோள்... வழிந்த தொப்பை... என்றெல்லாம் தோன்றிய கற்பனைக்கும் நிஜத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்!

ஏன்? எதனால் இங்கே வயதான ஒருவனை எதிர் பார்த்தேன்?

பகதூர்ப் பாண்டியன் நினைவில் 'மாமா' என்றதும் வயதானவர் என்று எண்ணி விட்டாளா?

செல்வியே லேட்டாகப் பிறந்தவள் என்று பானு சொன்னதால், அவளுடைய மாமா கிழவராக இருப்பார் என்று நினைத்தாளா?

அந்த மணி ஓசை பந்தாவினாலா?

திகைப்பை மீறி வேகமாக யோசிக்க முனைந்தாள் நந்தினி.

ஆனால் அதற்கு அவகாசம் கொடாமல் அவன் பேசத் தொடங்கினான். "நீ வந்த போது உரிய ஏற்பாடுகள் செய்ய முடியாமல் போயிற்று. காரணம்..."

"நீ"யாமே!

செல்விக்குத் தானாக ஒருமையில் அழைக்கும் உரிமையை ஈந்தவள் இப்போது பகைத்தாள்.

மனிதருக்கு மனிதர் செய்யும் மரியாதையை எடுத்த எடுப்பிலேயே ஒதுக்கி விட்டவன் விளக்கம் கூற வருகிறானா?

பெரிய விளக்கம். இருந்திருந்து செல்வியைக் குற்றம் சாட்டுவான். அதுதானே!

இந்த விளக்கம் இல்லாமலேயே அவளால் பிழைத்துப் போக முடியும்.

"வேலை செய்ய வந்தவர்களிடம் முதலாளிகள் விளக்கம் சொல்வதில்லை!" என்றாள் மொட்டையாக.

ஒரு வினாடி கண்கள் இடுங்க அவள் முகத்தை ஆராய்ந்தான் அவன்.

உடனேயே கேள்விகள் தொடர்ந்தன.

பானுவுடன் சேர்ந்து திட்டமிட்டது போலவே - சசிகலா விடம் சொல்லி வைத்தது போலவே - கோர்வையாகப் பதில் சொன்னாள் நந்தினி.

யாருமற்ற அனாதை, பிழைப்புக்காக வேலை பார்க்க வந்தவள்... பலப்பல சொல்லி முடித்தாள்.



அவள் ஓயும்வரை அவன் குறுக்கிடவில்லை.

மேசை மேல் இருந்த பேப்பர் வெயிட்டை விரல் களால் உருட்டியபடி அதிலேயே பார்வையைப் பதித்து இருந்த அவன் அவள் முடித்த பின் திடுமென நிமிர்ந்து பார்த்தான்.

பிறகு கேட்டான். "எல்லாம் சரிதான். ஆனால் உண்மையை எப்போது சொல்வதாக உத்தேசம்?"

## 11

ஆற்றில் இறங்கிக் குளிர்பயம் நீங்கித் துணிவு பெற்றுக் குளிக்கையில் திடுமெனச் சுழலில் சிக்கினால் எப்படி இருக்கும்?

நந்தினி அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

ஆழ்ந்த குரலில் வெகு நிதானமாகக் கீர்த்திவாசன் அந்தக் கேள்வியைக் கேட்டதும், நீருக்குள் மூழ்கிச் சுற்றிச் சுழன்று மூச்சுக் காற்றுக்குத் தவிக்கும் உணர்வே அவளுக்கு உண்டாயிற்று.

கடும் பிரயாசைப்பட்டுப் பெரிய பெரிய மூச்சுகளை விட்டபடி மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

எதிர்பாராத வண்ணம் அவன் புரிந்த புன்னகை மீண்டும் அவளைச் சுழலுள் தள்ளியது.

அவள் பேந்தப் பேந்த விழிக்கையிலேயே அவனது சிரிப்பு மறைந்தது.

"பெயராவது நந்தினிதானா, அல்லது...?" என்றான் குரலில் ஒரு வித ஏளனத்துடன்.

விடுக்கென நிமிர்ந்தாள் அவள்.

"நந்தினியேதான்!" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

"மற்றதெல்லாம்தான் பொய்யாக்கும்?" என்று அவன் வினவியபோது, உளறி விட்டாற்போல உணர்ந்தாள்.

உதட்டைக் கடித்துக் கொண்டு தலையசைத்தவள் அவன் பார்வையைத் தவிர்க்கத் தரையை நோக்கினாள்.

அமைதி நீண்டு கொண்டு போகவும், பொறுக்க முடியாமல் பார்வையை உயர்த்தினாள்.

எதற்காகவோ காத்திருப்பது போல மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியபடி தன் இருக்கையில் ஓர் அலட்சிய பாவனையுடன் சாய்ந்திருந்தான் அவன்.

'எதற்காகவோ' என்ன? அவளுடைய விளக்கத்துக்காகத்தான். பெரிய மகாராஜாபோல் அவன் அமர்ந்திருந்த தோரணை எரிச்சலை மூட்ட, சொல்லாவிட்டால் என்ன செய்வானாம் என்று ஆத்திரமாக நினைத்தாள். ஒரு வேளை வேலை இல்லை என்று கூறிவிட்டால்... கடவுளே!

எரிச்சலை அடக்கியபடி யோசித்தாள் நந்தினி!

அண்ணன் வீட்டை விட்டு வெளியேறிய காரணத்தைச் சொன்னால் ஒப்புக் கொள்வானா?

அதிலும் பெண்ணின் மனதைப் பற்றிய எண்ணமே இல்லாமல் தன்னை மணக்குமாறு ஒருத்திக்குத் திருமண உத்தரவு போடுகிறவன்.

நேராகக் கொண்டு போய் அண்ணனிடம் ஒப்புவித்து அந்தத் திருமணத்தை நடத்தச் சொன்னாலும் ஆச்சரியம் இல்லை.

அண்ணனைப் பற்றி மட்டமாகப் பேச மனம் இல்லாமலும், எந்த விதத்திலும் தான் இருக்கும் இடம் அண்ணனுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகவும் தானே நந்தினி உண்மையை மறைத்தாள்.

கீர்த்திவாசனின் குணம் இரண்டாவது காரணத்துக்கு மேலும் வலுக்கூட்டவே, என்ன ஆனாலும் உண்மையைச் சொல்வது இல்லை என்ற முடிவுக்கு நந்தினியை வரவழைத்தது.

''நான்... நான்...சொன்னது மெ... மெய்தான்!'' என்று திக்கும் நாக்கைச் சபித்தபடி சொன்னாள்.



பத்துத் தடவை அழுத்தமாகச் சொன்னால் பொய்யும் மெய்போலத் தோன்றும். இந்த மடநாவுக்கு இது தெரியவில்லையே. தடுமாறுகிறதே!

டாக்டர் சசி கைவிடமாட்டாள் என்ற தைரியத்தில், ''சசி அக்கா சொல்லியிருப்பார்களே...'' என்று இழுத்தாள்.

லேசான புருவ முடிச்சுடன், ''அதுதான் எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது!'' என்றான் அவன்.

''எ... என்னது?''

''உன்னை ஆறு ஆண்டாகத் தெரியும். நல்ல பெண் என்றெல்லாம் எழுதியிருக்கிறாள் சசி. ஒருவேளை ஆள் மாறாட்டமும் செய்து விட்டாயா?''

ஆள் மாறாட்டமுமாமே!

''வேறு என்னென்ன செய்திருப்பேன் என்று நினைக்கிறீர்கள்?'' என்று ஆத்திரமாகக் கேட்டாள் நந்தினி.

அவன் மீண்டும் தோளைக் குலுக்கினான்.

''ஏதோ தவறு செய்துதானே வீட்டை விட்டு வெளியேறி இருக்க வேண்டும்? அது பொய்யோ, கனவோ... எனக்கெப்படித் தெரியும்?''

''அடடா! நான் செய்த பத்துக் கொலைகளை விட்டு விட்டீர்களே சார்!'' என்று கண்களை விரித்தாள் நந்தினி.

சட்டெனக் கண்களில் தோன்றிய லேசான சிரிப்புடன், ''வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளுவோம். ஆனால் சசிக்கேனும் உண்மை தெரியுமா, அன்றி அவளிடமும் இதே கதைதானா?'' என்று விசாரித்தான் அவன்.

''கேட்டுப் பார்ப்பதுதானே!'' என்றாள் அவள் பதிலுக்கு.

மீண்டும் ஒரு தரம் அவளைக் கூர்ந்து நோக்கிவிட்டு, ''உன் சொந்த விஷயங்களைப் பற்றி எனக்கு அக்கறை எதுவுமே இல்லைதான். ஆனால் என் சகோதரியின் மகளுடைய துணை அவளுக்கு நன்மை செய்வதாக அமைய வேண்டும்.' என் தேவை அது ஒன்றுதான். சசியிடம் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆறு ஆண்டாக நீ

பானுவின் தோழி, இந்த வேலைக்குப் பொருத்தமானவள் என்று அவள் சொன்னாள். அது தவறாக இராது என்று நம்பி உனக்கு இந்த வேலையைத் தருகிறேன். செல்வி பழக எளிதானவள் அல்ல. உன் வரவையே மறைத்து அல்லல்பட வைத்ததில் இருந்து உனக்கே தெரிந்து இருக்கும். கோவை ஆபீசுடன் தொடர்பு கொண்ட போதுதான் விஷயம் தெரிந்து ஓடிவந்தேன். ஆனால் அதற்குள் நீ கட்டை வண்டிப் பயணம் செய்யும்படி நேர்ந்துவிட்டது. அதற்காகச் செல்வியை உன்னிடம் மன்னிப்புக் கேட்க வைக்கிறேன்,'' என்றான் கண்டிப்புத்தொனித்த குரலில்.

"வேண்டாம்... வேண்டாம்!" என்றாள் நந்தினி அவசரமாக.

''ஏன்?''

''அவள் என்னிடம் நல்லபடியாகவே பழகுகிறாள். இப்போது மன்னிப்பு என்று கட்டாயப்படுத்தினால் அது கெட்டுவிடக் கூடும்.''

''ம்... ஓ.கே! உன் விருப்பம். உனக்கு ஒன்றுசொல்ல வேண்டும். நீ செல்விக்கு ஒரு துணை... அதாவது தோழி மட்டும் அல்ல.''

''தெரியும். அவளுக்கு நான் ஒரு நர்சுங் கூட.''

''அவளுக்கு ஒரு காவலும்கூட. இனி வரப்போகும் ஆறு மாத காலத்தில் தவறான தொடர்புகள் அவளுக்கு ஏற்பட்டு விடாதபடி காவல் காக்க வேண்டும்.''

ஆறேழு மாதத்து வேலை என்று சசி சொன்னது நினைவு வர, ''ஆறு மாதங்களுக்குப் பிறகு?'' என்று வினவினாள் நந்தினி.

''அவளுக்குப் பதினெட்டு வயது ஆகிவிடும்.''

புரியாமல் பார்த்தாள் நந்தினி.

''பதினெட்டு வயதானால் சட்டப்படி திருமணம் செய்யக் கூடிய வயது ஆகிவிடுகிறது. அவள் என்மனைவி ஆனபின் வேறு துணையோ காவலோ எதற்கு?''



மூன்றாம் முறையாகச் சுழலுக்குள் சிக்கினாள் நந்தினி.

செல்வி சொன்ன சேதிதான்.

ஆனால் அவன் வாய் மூலம் கேட்கையில் ஏன் இவ்வளவு அதிர்ச்சி உண்டாக வேண்டும்?

கேட்கவே பிடிக்காமல் வெறுப்பை ஏன் தர வேண்டும்?

ஒரு கட்டாயத் திருமணம் என்பதால்தான் என்று தனக்குள் தேடி ஒரு காரணத்தையும் கண்டுபிடித்தாள் அந்த அசட்டுப் பெண்.

மனமற்ற மணத்துக்கு அதை விரும்பாமல் வெளியேறி வந்திருக்கும் அவள் எப்படி ஆதரவு தர முடியுமாம்?

நெஞ்சம் கடுத்ததைப் பளிங்கு போல முகம் காட்டி விட்டதா?

''உனக்கு ஏதும் ஆட்சேபனை இராதென நம்பு கிறேன்,'' என்றான் அவன் கேலிக் குரலில்.

சிரமத்துடன் முகத்தைச் சீர்ப்படுத்திக் கொண்டு, ''திருமணம் என்பது இரு மனக் கலப்பு என்று படித் திருக்கிறேன். செல்விக்குச் சம்மதம்தானா?'' என்று அறியாதவள் போல விசாரித்தாள்.

மீண்டும் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, ''அவளது விருப்பம் தெரிந்த பிறகும் ஏன் கேட்கிறாய்?'' என்று நேராகக் கேட்டு அவளைத் திகைக்க வைத்தான் அவன்.

இந்த நேரடிக் கேள்வியில் நந்தினி திக்குமுக்காடிப் போனாள்.

இந்தக் கீர்த்திவாசனை எப்படிக் கணிப்பது என்று அவளுக்குப் புரியவில்லை.

ஒரு பெண் தன்னை மணக்க விரும்பவில்லை என்றால் அது அவமானம் அல்லவா?

அதை இவன் வெகு சாதாரணமாகச் சொல்லுகிறானே!

ஒருவேளை மற்றவர் விருப்பம் எதுவானாலும் தன் வார்த்தைதான் நடக்கப் போகிறது என்ற திமிரா?

பெண் என்றால் அவ்வளவு அலட்சியமா?

இவள் வேலைக்கு வந்தவள், என்ன சொன்னாலும் தலையாட்டுவாள் என்ற எண்ணமா?

சட்டென நிமிர்ந்தாள். "அவளுக்கு விருப்பம் இல்லை என்று தெரிந்த பிறகும் நீங்கள் அவளை ஏன் வற்புறுத்துகிறீர்கள்?" என்று துணிவாகக் கேட்டு விட்டாள்.

ஒரு கணம் அவனிடம் பேச்சில்லாது போகவும், அவனை மடக்கி விட்டதாகப் பெருமைகூட உண்டாயிற்று.

ஆனால் உடனேயே, "அதன் காரணங்களை உனக்குச் சொல்லியாக வேண்டிய கட்டாயம் எனக்கும் இல்லை. கேட்கும் தகுதி உனக்கும் இல்லை!" என்று அந்தப் பெருமையைத் தரை மட்டமாக்கினான் அவன்.

பணிபுரிய வந்தவள் என்ற நிலையில் அவளைக் கொணர்ந்து நிறுத்தியவன் மேலே பேசினான்.

"செல்வியின் மெலிவைக் கவனித்தாயா? எப்படி இருந்த பெண்! பூசணிக்காய் என்று கேலி செய்வேன். இப்போது உண்பதே இல்லை!" என்றான் கவலையோடு.

"ஏன் அப்படி?" என்று விசாரித்தாள் நந்தினி.

"இன்னொரு புதிர்!" என்று கையை விரித்தான் அவன்.

"இன்றிரவு அவள் உண்பதைப் பார் தெரியும். இரவு உணவு எட்டு மணிக்கு. செல்வியுடன் வா!" என்று எழுந்தான். "எதிலுமே அடுத்தவர் பேச்சைக் கேட்டு முடிவு எடுப்பதைவிட நடப்பதைக் கவனித்துச் சொந்த மூளையைப் பயன்படுத்துவது நல்லது. இப்போது நீ போகலாம்," என்று அனுப்பி வைத்தான்.

சுவைபடத் தயாரிக்கப்பட்டிருந்த இரவு உணவைச் செல்வி உண்ட விதம் நந்தினிக்கு வியப்பை அளித்தது.

சுடச்சுட வந்த தோசைகளையோ வாட்டி வந்த ரொட்டித் துண்டுகளையோ இணைந்த கறிவகைகளையோ அவள் தொட்டும் பார்த்தாள் இல்லை.



பசியே இல்லை என்று பறைசாற்றி விட்டு, மேசை மேல் இருந்த பழங்களை மட்டும் புசித்தாள்.

ரசித்து உண்ட நந்தினியிடம் ஏதோ கூறுவது போல வெறித்த பார்வைகள் வேறு.

இடையிலேயே அவள் எழுந்து விடவும், குழப்பத்தோடு கீர்த்திவாசனைப் பார்த்தாள்.

எதிர்பார்த்தது போலவே தோளைக் குலுக்கினான் அவன்.

'எப்படிப் பசி தாங்கும்!' என்று யோசித்தபடியே உணவு முடிந்ததும் நேராகச் செல்வியின் அறைக்குச் சென்றாள் நந்தினி.

அச்சத்துடன் விழித்த செல்வி, இவளைப் பார்த்ததும் ஒரு பெருமூச்சு விட்டபடி, மறைத்து வைத்திருந்த பிஸ்கெட்டுகளை எடுத்து விழுங்கலானாள்.

"ஒழுங்காக அங்கேயே சாப்பிடுவதற்கு என்ன செல்வி?" என்று வினவினாள் நந்தினி.

"உனக்குத் தெரியாது. சாப்பாட்டில் வசிய மருந்து கலந்திருக்கிறார்கள். அதைச் சாப்பிட்டுத்தான் நர்சுகள் எல்லாம் மாமாவிடம் மயங்கியதே!" என்று சீரியசாகச் சொன்னாள் செல்வி.

வியப்பில் பேச்சிழந்து போனவளிடம், "இதற்கே அசந்து போனாயே, இதற்கு மேல் பெரிய விஷயம் இருக்கிறது தெரியுமா?" என்று கண்களை உருட்டினாள்.

"அதென்னது... பெரிய விஷயம்..." வியப்பு மேலிடக் கேட்டாள்.

"விளையாட்டில்லை நந்தினி. கல்யாணம் ஆன பிறகு கீர்த்தி அங்கிள் என்னைக் கொல்லவும் போகிறார்!" என்றாள் செல்வி உதடு நடுங்க.



## 12

வசியமாம்!

கொலையாம்!

என்ன உளறல் இதெல்லாம்?

கலீரென்று துள்ளிய சிரிப்பு, செல்வியின் முகத்தைக் கண்டு கப்பென்று அடங்கிப் போயிற்று.

வெளுத்த முகமும் ஒளியிழந்த கண்களும் நடுங்கும் உதடுகளும்...

செல்வி விளையாடவில்லை.

பரிவுடன் அவளை அணைத்து, ''இதெல்லாம் என்ன அசட்டுத்தனம் செல்வி?'' என்று கனிவாகக் கேட்டாள் நந்தினி.

சில நிமிடம் ஓசையின்றி அழுதாள் செல்வி.

அழுது ஓய்ந்ததும் மண் கூஜாவில் இருந்து நந்தினி கொணர்ந்து தந்த நீரை ஒதுக்கிவிட்டு, வாஷ்பேஸினில் முகம் கழுவி, அதில் வந்த நீரையே அருந்திவிட்டு வந்து அமர்ந்தாள்.

செல்வி மெலிந்திருப்பதின் காரணம் முகத்தில் அடித்தாற் போல நந்தினிக்குத் தெளிவாகத் தெரிந்தது.

இந்த வீட்டில் எதை உண்ணவும் அவளுக்குப் பயம்! பயம்!! ஒரே பயம்!!!

நகரத்தில் வளர்ந்தவள் போலத் தோன்றும் இந்தப் பெண்ணிடம் வசியம் கிசியம் என்று இந்த மடத்தனமான எண்ணங்கள் எப்படிக் குடியேறின?

இதை எப்படிப் போக்குவது?

உடனே கீர்த்திவாசனோடு இது குறித்துக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று தோன்றியது.

ஆனால், முதலில் செல்வியைத் தேற்றுவது முக்கியம் என்று தோன்றவே அதில் ஈடுபட்டாள்.



செல்வியின் கையைப் பற்றி மெல்ல வருடியபடி, ''உன் மனதில் என்ன குழப்பம் செல்வி? முடிந்தால் என்னிடம் சொல்கிறாயா?'' என்றாள் மென்மையாக.

விழிகளை உயர்த்தாமலேயே, ''நீதான் அசட்டுத்தனம் என்கிறாயே, பிறகு உன்னிடம் சொல்லி என்ன பயன்? கூடக் கொஞ்சம் சிரிப்பாய்!'' என்றாள் செல்வி மனத் தாங்கலுடன்.

''இனிமேல் சிரிக்கவில்லை, சொல்லு.''

''மாமாவிடம் சொல்லிவிட மாட்டாயே, சத்தியமாக?''

அசட்டுத்தனமாக அவசரப்பட்டுச் சத்தியம் செய்யவும் மனம் இல்லாமல், அலட்சியமாகப் பொய்ச் சத்தியம் செய்யவும் பிடிக்காமல், ''நான்தான் உன் கட்சியாயிற்றே!'' என்றாள் நந்தினி.

சமாதானம் அடைந்தவளாகச் செல்வி சொல்லத் தொடங்கினாள்.

செல்வியின் பெற்றோர் பணம் படைத்தவர்கள். அவர்கள் வீட்டில் பிரியமான விருந்தாளி கீர்த்திவாசன்.

செல்வியின் பெற்றோர் இறக்கும் பொழுது, எப்படியோ செல்வியின் பொறுப்பாளனாகத் தன்னை நியமிக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டான்.

'செல்வியை மணந்து சொத்தை விழுங்குவது கீர்த்திவாசனின் திட்டம்.'

பெண்ணுக்குத் திருமண வயது பதினெட்டு அல்லவா?

செல்வி திருமண வயதை அடைவதற்கு உள்ள ஆறு மாதத்திலும் அவன் சொன்னபடி ஆட வைக்க அவளுக்கு வசிய மருந்து கொடுக்கும் ஏற்பாடு நடக்கிறது.

அந்த முயற்சியை முறியடிப்பதற்காகவே செல்வி பட்டினி கிடக்கிறாள்.

இவளுக்கு என்று சுடும் தோசை மாவில் அதைக் கலந்திருந்தால்... வாட்டிய ரொட்டியில் தூவியிருந்தால்...?

''வசிய மருந்து என்றால் அது எப்படி இருக்கும் செல்வி? நிறம் என்ன? திரவமாக இருக்குமா? தூள் மாதிரி இருக்குமா?'' என்று சாதுபோல விசாரித்தாள் நந்தினி.

புருவத்தைச் சுருக்கிக் கைகளை விரித்தாள் செல்வி. ''அது எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாதுதான். ஆனால், அப்படி ஒன்று இருப்பது மட்டும் தெரியும். அதை எனக்குத் தர முயற்சி நடக்கிறது என்பதும் தெரியும்,'' என்று அழுத்தத்துடன் பதிலிறுத்தாள்.

''அதுவும்தான் எப்படித் தெரியும்?'' என்று அதே குரலில் திருப்பிக் கேட்டாள் நந்தினி.

ஒரு கணம் பேசாமல் இருந்தாள் செல்வி.

பிறகு சற்றுச் சினம் அடைந்தவள் போல, ''உனக்கு இன்னமும் நம்பிக்கை இல்லை, அதுதானே நந்தினி?'' என்றவள், திடும் எனக் கண் அகல, ''நந்தினி! நீ...நீ... அய்யோ, உனக்கும் அந்த மருந்தைத் தந்துவிட்டார்களா? வேண்டாம் என்று நான் ஜாடை காட்டியும் சாப்பிட் டாயே! அந்தப் பவானி போலவே நீயும் மாமாவிடம் மயங்கத் தொடங்கி விட்டாயா?'' என்று பதறினாள்.

''சீச்சீ!'' என்று மறுத்தாள் நந்தினி.

கீர்த்திவாசனிடமாவது நந்தினி மயங்குவதாவது!

ஒரு மகாராஜா போல உயர்த்திய புருவங்களுடன் அவளது பதிலை அதிகாரத்துடன் அவன் கேட்ட தோரணை இப்போதும் அவளை உள்ளூரப் புகைய வைத்தது.

மேலும் ஒரு பெண்ணின் மறுப்பை அலட்சியம் செய்து மணக்க முற்படுகிற ஒருவனிடம் அவளுக்கு எப்படிப் பிரியம் வரும்?

வேறு நிலைமையில் இருந்திருந்தால், ''உன் வேலையும் நீயும்!'' என்று வீசியெறிந்துவிட்டுப் போயிருப்பாள்.

''அந்த ஆளைக் கண்டாலே ஆத்திரம் வருகிறது. இதில் மயங்குவதாவது... சீ!'' என்று உறுதியோடு சொன்ன விதம் செல்வியின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தியது.



மேற்கொண்டு கேட்பதா, வேண்டாமா என்று நந்தினி யோசிக்கத் தொடங்கிய போது செல்வியே தொடர்ந்தாள்.

''இது கேரள எல்லைப் பகுதி நந்தினி. மலையாள மந்திரவாதி என்றெல்லாம் படித்திருப்பாயே. வழி வழி யாக மந்திர தந்திரங்களில் தேர்ந்த குடும்பங்கள் இங்கே இருக்கின்றன. வசிய மருந்தெல்லாம் இவர்களுக்குச் சுண்டைக்காய் சமாச்சாரம்.''

''ம்... அப்புறம்? இவ்வளவு கஷ்டப்பட்டு வசிய மருந்து கொடுத்து உன்னை மணப்பானேன்? பிறகு கொலை என்று கூட எதுவோ சொன்னாயல்லவா? அதைச் செய்வானேன்?''

பத்துத் தரம் சொல்லியும் புத்தியில் ஏறாத முட் டாளைப் பார்ப்பது போலப் பரிதாபப் பார்வை பார்த்தாள் செல்வி. ''நந்தினி... நந்தினி! என்னைக் கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால் என் சொத்து கிடைக்குமா? கல்யாணத்திற்கு நான் சம்மதிக்க வேண்டும் என்றுதான் இவ்வளவு வசதி, வைத்தியம், மருந்து, மாயம் எல்லாம். மேஜரான பிறகு திருமணம் ஆகி அதன் பிறகு நான் செத்துப் போனால் என் சொத்தெல்லாம் எனக்குத் தாலி கட்டுகிறவனுக்குத்தானே போகும். என் பெற்றோர் என் வாழ்வுக்காகச் சேர்த்த சொத்தே எனக்கு எமனாகவும் ஆகி விட்டது பார்த்தாயா?'' என்றாள் வேதனையோடு.

''கொலை ஒன்றும் அவ்வளவு எளிதல்ல. செல்வி. போலீஸ் இலாகா, சட்டம் எல்லாம் தூங்கும் என்றா நினைக்கிறாய்?''

''இந்த வட்டாரத்தில் கீர்த்தி அங்கிள் ரொம்பவும் செல் வாக்குப் படைத்தவர். பணம் உள்ளவரும்கூட. அவரை எதிர்த்து இந்த அனாதைப் பெண்ணுக்காக விரலை அசைப்பவர் யார்?'' விசும்பினாள் செல்வி.

கீர்த்திவாசனே வாய் திறந்து செல்வியை மணக்கப் போவதாகச் சொல்லியிருந்த போதிலும், செல்வி கூறிய

மற்றக் கதைகளில் நந்தினிக்குக் கொஞ்சமும் நம்பிக்கை வரவில்லை.

ஆனாலும் செல்வி உண்மையாகவே வேதனைப்படுவதை உணர்ந்து, ''விரலை மட்டும் அசைப்பதா? இனி நான் உலகத்தையே தலைகிழாகப் புரட்டிவிட மாட்டேனா? அசட்டுக் கவலைகளை விடு செல்வி!'' என்று தேற்றினாள்.

செல்வி சற்றுத் தெளிவான பிறகு மீண்டும் விசாரித்தாள் - இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும் என்று.

உதடுகளை அழுந்த மூடியபடி சற்று நேரம் பேசாமல் இருந்தாள் செல்வி. பிறகு, ''யாரிடமும் சொல்வதில்லை என்று வாக்குக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இதில் எதுவும் பொய்யில்லை!'' என்று மட்டும் அடித்துச் சொன்னாள்.

அதற்கு மேல் வற்புறுத்த முடியாமல் அந்தப் பேச்சை விட்டாள் நந்தினி.

இதில் எங்கோ பிசகு இருக்கிறது. அதை என்னவென்று எப்படி அறிவது?

பிஸ்கெட் பாக்கெட்டை ஏக்கமாகப் பார்த்துவிட்டு, அதை மூடி வைத்தாள் செல்வி.

சாதாரணமாகப் பார்த்துக் கொண்டிருந்த நந்தினி ஆச்சரியத்துடன், ''செல்வி! நீ ஏன் இந்த பிஸ்கெட்டைச் சாப்பிடுகிறாய்?'' என வினவினாள்.

''ஏன்? முன்னெல்லாம் சாப்பிட்டது இதைத்தானே. குண்டாகி விட்டேன், க்ரீம் பிஸ்கெட் தின்னக் கூடாது என்று அம்மாகூட இதைத்தான் தருவார்கள்.''

''ஆனால் இது மெலிய வேண்டியவர்கள் உண்ண வேண்டிய பிஸ்கெட். எலும்பும் தோலுமாக இருந்து கொண்டு இதைப் போய்த் தின்னலாமா? உள்ளே வை.''

''ஆமாமாம். மின்னி அக்கா அடுத்து வரும்வரை இதுதானே. இன்னமும் மூன்று பாக்கெட்தான் இருக்கிறது.''



''அது யார் மின்னி அக்கா?''

''தூரத்து உறவு. நீ வரும்வரை எனக்கு இருந்த ஒரே தோழி. இங்கே வரும் போதெல்லாம் பிஸ்கெட் வாங்கி வந்து மாமாவுக்குத் தெரியாமல் மறைத்துத் தருவார்கள். அவர்கள் மட்டும் இல்லையென்றால் என்ன ஆகியிருப்பேனோ?'' என்று உடலைச் சிலிர்த்தவள், ''பாவம், மின்னி அக்காவும்!'' என்று பரிதாபப்பட்டாள்.

''ஏன்?''

''அது... அது வந்து ஒரு நல்ல பெண். தான் ஆசைப்பட்ட மனிதர் கெட்டவர் என்று தெரிந்து, அதன் பிறகு ஆசையை விட முடியாமல் தவிப்பது என்றால் பாவம்தானே?''

''நிச்சயமாகப் பரிதாபம்தான்!'' என்று ஆமோதித்தாள் நந்தினி.

மேலும் எதையோ செல்வி சொல்ல விரும்புவது போலத் தோன்றிற்று நந்தினிக்கு.

இவ்வளவு கதைக்கு மேலாக இன்னும் என்னவாக இருக்கும்.

ஆவலும் தயக்கமுமாகச் செல்வி ஊசலாட, ''உன் கைக்கெடிக்காரம் நன்றாக இருக்கிறது!'' என்று பேச்சை மாற்றினாள் நந்தினி.

தங்க நிறச் செயினுடன் (தங்கம்தானோ!) கருநிற டயலில் பளபளக்கும் எண்களும் முட்களுமாக மெய்யாகவே அழகாகத்தான் இருந்தது அந்தக் கைக்கடிகாரம்.

''எனது பதினைந்தாவது பிறந்த நாளைக்குக் கீர்த்தி அங்கிள் ஜெர்மனியில் இருந்து கொண்டு வந்தார்!'' என்று புன்னகை செய்தாள் செல்வி.

நந்தினியின் திகைப்பைக் கவனியாமல், ''அப்புறம் ஒரு தடவை பத்து வீடியோ கேம்ஸ்... அப்போதெல்லாம்

கீர்த்தி அங்கிள் வந்தாலே ஜாலிதான். ஆனால் இப்போது...'' என்று சோகமாக முடித்தாள் செல்வி.

செல்விக்குத் தெம்பூட்டும் விதமாகச் சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு, தன் அறைக்குத் திரும்பினாள் நந்தினி.

பழக்கமற்ற படுக்கையில் புரண்ட வண்ணம் அண்ணனை எண்ணி வெகுநேரம் ஏங்கினாள். எப்படி இருந்த அண்ணன் எப்படி ஆகிவிட்டான்!

கடைசியாக, இது முடிந்து போன அத்தியாயம் என்று பிடிவாதமாக மனதை வேறுபுறம் திருப்பினாள்.

செல்விக்காக இரங்கினாள்.

வில்லனைக் காதலித்த அந்த மின்னி அக்காவுக்காகப் பரிதாபப்பட்டாள்.

கடைசியாகக் கீர்த்திவாசனிடம் கோபப் பட்டபடியே உறங்கிப் போனாள்.

அவள் பெயர் மின்னி என்று தெரிந்தது.

செல்வி சொன்னது போலப் பாவம் என்று பரிதாபப் பட அவளிடம் ஏதும் இல்லை என்று புரிந்தது.

அது மட்டும் அல்ல. அவள் அந்த முதல் சந்திப்பிலேயே நந்தினியை வெறுத்தாள் என்பது தெரிந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக, செல்லும் இடம் எல்லாம் அழிவின் சின்னங்களையே விட்டுச் செல்லும் சூறைக் காற்றின் நினைவு அந்த மின்னியைக் கண்டதும் நந்தினிக்கு ஏனோ உண்டாயிற்று.



## 13

மறுநாள் அந்த மின்னியைப் பார்க்கும் வரை நந்தினிக்கு உலகமே காற்றில் மிதப்பது போல இருந்தது.

கூடவே அவளும் மிதந்தாள்.



அவளுக்கு ஆச்சரியமாகக்கூட இருந்தது.

வழக்கமாக ஆஸ்டலில் இருந்து அண்ணன் வீட்டுக்குப் போகிற நாள்தான் இப்படி இருக்கும்.

அண்ணனைப் பிரிந்து விட்ட அவளுக்கு இந்த உற்சாகம் எப்படி வந்தது?

அதிகாலையிலேயே விழித்து விட்டவள் இருள் பிரியத் தொடங்கியதும், தோட்டத்தில் இறங்கினாள்.

மலைக்காற்று ஜிலுஜிலுவென்று முகத்தில் மோதவும் உற்சாகம் பீறிடத் துள்ளல் நடை போட்டாள்.

ஆனால், உடனே அதை நிறுத்த வேண்டி வந்தது.

காரணம், இரு பெரிய நாய்கள்.

படபடப்பை வெளியே காட்டாமல், கையால் சொடக்குப் போட்டு அவைகளைச் சினேகம் பிடிக்க முயன்றாள்.

''உனக்கு இனி அந்தக் கை தேவை இல்லையா?'' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

கீர்த்திவாசன்தான்.

அவனை நிமிர்ந்து பார்த்து, ''நாய்களிடம் வேறு எப்படிப் பழகுவதாம்?'' என்றாள் மிடுக்காக.

லேசாகப் பிதுங்கிய கீழ் உதட்டில் ஏளனம் தெரிய, ''சாதாரணத் தெரு நாய்களிடம் அப்படிப் பழகலாம். நான் இல்லாவிட்டால் கை போயிருக்கும்!'' என்றான் அவன்.

லேசான மிரட்சியுடன் நாய்களைப் பார்த்துவிட்டு சொடக்குப் போட்ட கைகளையும் பார்த்துக் கொண்டாள்.

ஆனால்? இவனிடம் பாச மிகுந்த குழந்தைகள் போல உரசிக் கொண்டு நிற்கின்றனவே.

மேலே நடக்குமாறு சைகை காட்டிவிட்டு, ''இவ்வளவு அதிகாலையில் உன்னை இங்கே எதிர்பார்க்கவில்லை. செல்வியும் நீயும் இரவில் வெகுநேரம் பேசிக் கொண்டு இருந்தீர்களே!'' என்றான் நடந்தபடி.

திகைத்தாள் நந்தினி. ஒட்டுக் கேட்டிருப்பானா? வேலை யாட்கள் யாரும் உளவா? என்னவெல்லாம் பேசினார் கள்... என்னவெல்லாம்...

அவன் சாதாரணக் குரலிலேயே தொடர்ந்தான். ''புதிய இடத்தில் தூக்கம் வரவில்லையா? ஆனால் இந்த நேரத் தில் தோட்டம் மிக அழகாக இருக்கும்.. இளம் பெண் ணின் வெட்கச் சிரிப்புபோல, பாதி மலர்ந்த பூக்களும், பனியாடை உடுத்திய மலைப்புறமும் மெல்ல மெல்ல வெளிச்சத்தில் அவை முழுமை பெறுவதும் பார்க்க வேண்டிய காட்சி...''

நந்தினி மீண்டும் திகைத்தாள்.

இவ்வளவு அழகுணர்ச்சியும் ரசனையும் உள்ளவன் வில்லனாக இருக்க முடியுமா? ஒருவேளை இவன் பாம்பல்லவோ? ஆனால் -

''என்ன... பேச்சையே காணோம். பெண்களிடம்தான் பேசுவாயா?'' என்று கிழ்க்கண்ணால் பார்த்தான் அவன்.

''அ... அதில்லை, இவ்வளவு அழகான தோட்டத்தை இந்த நாய்களின் பயத்தில் பார்க்க முடியாமல் போய் விடுமோ என்று நினைத்தேன்,'' என்று சமாளித்தாள் நந்தினி.

மீண்டும் அவனது பார்வை அவள்மீது படிந்து மீண்டது.

ஒரு முடிவுக்கு வந்தவன்போல, ''நாய்களுக்கு உன்னை அறிமுகப்படுத்துகிறேன். ஆனால், எல்லைக்கு வெளியே போக வேண்டாம். இந்தக் காட்டுப்பகுதியில் தொலைந்து போவது எளிது!'' என்று உரைத்தான் கீர்த்திவாசன்.

''பிளாக்கி,'' ''ப்ரௌனீ'' என்று நாய்களை அழைத்துப் பழக்கப்படுத்தி வைத்தான்.

முகத்தருகே நாயின் முகம் நெருங்கியபோது, சற்றே கால் தடுமாறினாள் நந்தினி.

அவளது கரத்தைப்பற்றி அவன் நிறுத்தியபோது, பயம் அகல்வதையும் ஒரு திடம் உண்டாவதையும் உணர்ந்தாள்.



இரு நாய்களும் விலகிய பிறகு, ''அழகு மலர்க் கரம்!''என்று அவனாகவே விடுவித்தபோது, அவளுக்கு முகம் சிவந்து போயிற்று. நெஞ்சு படபடத்தது.

ஏனென்று புரியாமல் திணறிய போது பவானியின் நினைவு வந்தது.

அவளையும் இப்படி வர்ணித்துத்தான் மயக்கினானோ?

வரிசைப் பல் பளபளக்க முறுவலித்தபடி, ஆறடி உயரத்தில் வலிமையும் வாலிபமும் உருவெடுத்தாற் போல நின்று அலங்காரப் பேச்சு வேறு பேசுவானானால் வசிய மருந்து என்று தனியாக வேறு வேண்டுமா?

'ஆனால் நான் பவானி அல்ல - இதில் எல்லாம் மயங்கிப் போய்விட!' என ஆத்திரமாக நினைத்தபடி அவனை உற்றுப் பார்த்தாள்.

ஆனால், புருவ மத்தியில் முடிச்சுடன் அவன் பார்வை மலைமுகட்டில் இருக்கவே இவளது முறைப்பு வீண் ஆயிற்று.

இவனுக்கு என்ன குழப்பம் இருக்கக் கூடும்?

இவன் எப்படிப்பட்டவன்?

செல்வி அவனுக்கு முழுக் கறுப்பில் வண்ணம் தீட்டினாள். பவானியும் அப்படியே.

ஆனால், அவன் நல்லவனாக இருக்கவேண்டுமென்று தன் மனம் விரும்புவதை ஆச்சரியத்துடனும் ஒரு பயத்துடனும் உணர்ந்தாள் நந்தினி.

இவனது அருகாமையைத் தவிர்ப்பது நல்லது என்று மூளை அறிவுறுத்த, 'போகிறேன்,' என்று முணுமுணுத்து விட்டு ஒதுங்கிப் போனாள் நந்தினி.

காலையில் அவன் வெளியே சென்ற பிறகுதான் செல்வி எழுந்து வந்தாள்.

''நானே பிழிந்தது!'' என்று ஒரு தம்ளர் ஆரஞ்சுச் சாற்றையும், மொத்தத்தில் இருந்து எடுத்து வந்தேன்

என்று நாலு பூரிகளையும் செல்வி உண்ணும்படி செய்தாள் நந்தினி.

அதையும் இதையும் பேசி முடித்த பின், திடும் என, ''இரண்டு நாளாய் அலைச்சல். உன் அறையில் ஓய் வெடுத்துக்கொள்,'' என்று நந்தினியை வற்புறுத்தினாள் செல்வி.

''களைப்பாக இல்லை,'' என்று நந்தினி கூறியும் விடுவதாக இல்லை.

'என்னுடன் பேசுவது போரடிக்கிறதோ?' என்று உள் ளூரக் குழம்பியபடி தன் அறைக்குச் சென்றாள் நந்தினி.

''நானும் என் அறையில் படுத்திருக்கப் போகிறேன்,'' என்று செல்வியும் சென்றாள்.

கொஞ்ச நேரத்திற்கு மேல் சும்மா இருக்க முடியாமல் எழுந்து விட்டாள் நந்தினி.

செல்வி படுத்திருக்கட்டும், அதற்குள் தோட்டத்தின் மறுபுறத்தைச் சுற்றிப் பார்க்கலாம் என்று சென்றபோது தான் இந்தப் பின்காலைப் பொழுதில் ஓய்வு எடுக்கும்படி செல்வி வற்புறுத்தியதின் மர்மமும் அவளுக்குப் புரிந்தது.

அந்த மர்மம் சுமார் இருபத்திரண்டு வயது மதிக்கக் கூடிய ஓர் ஆண் மகன்.

எதிர்பாராத விதமாக நந்தினியைப் பார்த்ததும், அதற்குள் தன் குட்டு வெளிப்பட்டுவிட்ட அவமானத்தில் செல்வியின் முகம் கன்றிப் போயிற்று.

சமாளித்துக் கொண்டு, ''உன்னை ஓய்வெடுக்கச் சொன்னேனே!'' என்று அதிகாரமாகப் பேச முயன்றாள்.

சிரிப்பை அடக்கியபடி, ''நீயும் ஓய்வு எடுக்கப் போவதாகத்தான் சொன்னாய்,'' என்றாள் நந்தினி.

சட்டென முகம் கசங்கிவிட, ''மாமாவிடம் சொல்லி விடுவாயா?'' என்றாள் செல்வி கண்ணீர்க் குரலில்.



''தப்பான தொடர்புகள்!'' என்று கீர்த்திவாசனின் பேச்சு நந்தினிக்கு நினைவு வந்தது.

ஆனால், இவன் தப்பானவன் என்று எப்படிச் சொல்வது!

பெரிய ஆபத்தில் இருந்து செல்வியைக் காப்பவன் போல, அவளது தோளை லேசாக அணைத்து அவன் நின்ற விதம் சிரிப்பு மூட்டினாலும், மெய்யாகத்தான் தோன்றியது.

இவர்கள் இருவரும் தூய நேசமே கொண்டிருந்தால்...

ஆனால் இவன் போலி என்று சொல்லவும் வேண்டும் தான்.

எனவே பொதுவாக, ''நான்தான் உன் கட்சி என்றேனே!'' என்று பழைய பல்லவியையே பாடினாள் நந்தினி.

நிம்மதியோடு மூச்சு விட்டுக் கொண்டு, ''இவர் பெயர் கதிரேசன்,'' என்று அறிமுகம் செய்து வைத்தாள் செல்வி.

''நேற்றுக் கூடப் பார்த்தேனே... சைக்கிளில் கடிதம்!'' என்று சிரித்தாள் நந்தினி.

''இன்றைக்குத் தாடி மீசை எல்லாம் மைனஸ்!'' என்று கூடச் சேர்ந்து சிரித்த அவனை நந்தினிக்குப் பிடித்துப் போயிற்று.

மூவருமாகப் பேசிக் கொண்டு இருந்தபோது, நந்தி னிக்கு இரண்டு சந்தேகங்கள் உண்டானது.

இவன் வருவதும் போவதும் கீர்த்திவாசனுக்குத் தெரி யாமல் இருக்குமா?

அடுத்தது, இவன் மூலம் நல்ல உணவு வகைகள் வாங்கி வரச் சொல்லி உண்டிருக்கலாமே.

கதிரை அனுப்பிவிட்டுத் திரும்பி வரும் போது இரண்டு கேள்விகளுக்கும் செல்வி பதில் சொன்னாள்.

கீர்த்திவாசன் இங்கே இருக்கையில் கதிரேசன் வருவது இல்லை. சங்கேதக் குரல்கள் மூலம் இருவரும் வெகு கவனமாக நடந்து கொள்கிறார்கள்.

அடுத்தது கதிரேசன் கொஞ்சம் ஆவேசப்படுகிற தினுசு. இந்தப் பட்டினிக் கதை எல்லாம் தெரிந்தால் முன் பின் விளைவுகளை யோசியாது, ''மாமாவைத் தீர்த்துக் கட்டுகிறேன்!'' என்று கிளம்பி விடலாம்.

கூடக் கொஞ்சம் துருவினாள் நந்தினி.

''நிலையான வேலை என்று இல்லை. அங்கங்கே கிடைத்த வேலைகளைச் செய்து சாப்பிடுகிறான்,'' என்றாள் செல்வி. கூடவே, ''அவருக்கு அநீதியைச் சகிக்க முடியாது நந்தினி. பாரபட்சம், ஏமாற்று என்று யார் பாதிக்கப்பட்டாலும் பொங்கி விடுவார். கடைசியில் கதிருடைய வேலைதான் போய் விடுகிறது. ஆனால் இந்தக் காலத்தில் கூட நியாயத்துக்காகப் போராடுகிற ஒருவர் இருப்பது ஆச்சரியமாக இல்லை?'' என்று மயங்கினாள்.

பொறுப்பற்ற தன்மை என்று தோன்றியதை மறைத்தாள்.

''ஆமாம்,'' என்று அசிரத்தையாகச் சொல்லிவிட்டு, ''இப்போது என்னோடு நன்றாகச் சாப்பிடப் போகிறாயாக் கும். நாம் இருவருமாகச் சமையல் அறைக்கே போய் எடுத்து வந்துவிடலாம்,'' என்று செல்வியை இழுத்துப் போனாள் நந்தினி.

பொதுவான பொறுப்பையும் - முக்கியமான சமையல் அறையையும் நிர்வகித்த பார்வதி அம்மாளிடம், ''எங் களுக்கு பிடித்தமாகப் பார்த்து எடுத்துக் கொள்ளப் போகி றோமாக்கும்!'' என்று அழகாகப் புன்னகைத்துக் காரியம் சாதித்தாள்.

''இப்படிச் சாப்பிட்டு எவ்வளவு நாள் ஆயிற்று!'' என்ற செல்வியைக் கண்டு மகிழ்ந்தாள்.

இந்த மகிழ்ச்சியில் அவள் மிதந்து கொண்டு இருந்த போதுதான் மாலையில் கீர்த்திவாசன் திரும்பி வந்தான்..

தனியாக அல்ல; அந்த மின்னியோடு.

சேலையில் இவ்வளவு கவர்ச்சி காட்ட முடியுமா? உடம்போடு ஒட்டிய சேலையும் மொழுமொழுவென்று



இருந்த சைனா பொம்மை முகமும் நடையும் பாம்பை நினைவு படுத்திற்று நந்தினிக்கு.

ஆனால், பார்த்தவுடனே ஒருவரைப் பற்றி ஏதாவது அபிப்பிராயம் கொள்வது தவறு. அண்ணி மாலினியிடம் தவறாகி விடவில்லையா?

செல்வி சொன்ன கதையை எண்ணிச் சிரமப்பட்டு அந்த மின்னி மீது பரிதாபத்தை வரவழைத்துக் கொண் டாள் நந்தினி.

ஆனால் அது நிலைப்பதாக இல்லை.

கீர்த்திவாசன் நந்தினியை அறிமுகம் செய்து வைத்த துமே, ''பெயர் என்ன நந்தினியா? அய்யோ! என்ன பயங்கர மான பெயர்!''என்று உடலைச் சிலிர்த்தாள் மின்னி என்ற அந்த மேனகா.

''ஏனோ?'' என்று ஆத்திரமாகக் கேட்டாள் நந்தினி.

''ஏன்?'' என்று திகைத்தாள் செல்வி.

நந்தினியை அலட்சியம் செய்து, ''செல்வி டார்லிங்! நீ 'பொன்னியின் செல்வன்' படித்ததில்லையா? அதில் வரும் வில்லி நந்தினி எவ்வளவு கொடூரமானவள் தெரி யுமா! அதில் இருந்து அந்தப் பெயரே எனக்கு வெறுத்துப் போயிற்று... செல்வி டார்லிங்! நான் கீர்த்தியோடு பேசி விட்டு வரட்டுமா?'' என்று கத்தரித்தாள்.

கீர்த்தியோடு செல்லும் போதே திரும்பிச் சோகமான பார்வை ஒன்றையும் செலுத்திவிட்டுப் போனாள்.

யோசனையோடு பார்த்த நந்தினியிடம், ''இதற்குக் காரணம் இருக்கிறது,'' என்று கிசுகிசுத்தாள் செல்வி.

சற்றுப் பொறுத்து சிறு கைப்பெட்டியோடு செல்வியின் அறைக்கு வந்தாள் மேனகா.

ஆவலுடன் பெட்டியைத் திறந்து பிஸ்கெட் பாக் கெட்டுகளைச் செல்வி எடுத்தாள்.

முன் தினமே நெஞ்சில் நெருடி நாவில் துறுதுறுத்த கேள்வியை நந்தினி கேட்டு விட்டாள். ''நீங்கள் ஏன் சத்து

குறைந்த லோ கலோரி பிஸ்கெட்டையே செல்விக்கு வாங்கி வருகிறீர்கள்?''

சடேரென்று கொத்த வரும் பாம்பின் விரைவுடன் திரும்பிப் பார்த்தாள் மேனகா.

முகமூடியை எடுத்தாற் போல, கோரமும் குரூரமுமான முகம் தெரிந்தது.

என்னவென்று தெரியாமலேயே ஏதோ இரகசியம் ஒன்றில் மூக்கை நீட்டி விட்டதை நந்தினி உணர்ந்து கொண்டாள்.

அது என்ன?



## 14

பிஸ்கெட் பாக்கெட்டுகளை எடுத்து வைப்பதில் ஈடுபட்டு இருந்த செல்வி, மேனகாவின் முக மாற்றத்தைக் காண வில்லை.

செய்யும் காரியமே கவனமாக, ''இந்தத் தடவை பத்து பாக்கெட்டுகள்தான் கொணர்ந்தீர்களா அக்கா?'' என வினவினாள்.

சற்று முன் கண்ட முகம் பொய்யோ என மயங்கும் வண்ணம் மின்னியின் முகம் மீண்டும் ஒரு சோகப் புன்னகையைப் பூசிக் கொண்டது.

''திடீர் என்று கிளம்ப நேர்ந்ததால் நாலு கடை அலைந்து சேகரிக்க முடியவில்லை பேபி. அத்தோடு கீர்த்தி வேறு கூடவே இருந்தாரா..'' என்று பேச்சை முடிக்காமலேயே பெருமூச்சு விட்டாள்.

புரிந்து கொண்ட பாவனையில், ''ஓ! ஆனால் பரவா யில்லை மின்னி அக்கா. இங்கே நானும் பட்டினி கிடக்க வேண்டியது இல்லை!'' என்று சொல்லப் போனாள் செல்வி.

''ஷ்...'' என்று இடைமறித்தாள் மேனகா.



''நந்தினிக்கு அதெல்லாம் தெரியும் அக்கா. அவளது கெட்டிக்காரத்தனத்தில்தான் நான் சாப்பிடுவதே.''

மீண்டும் மேனகாவின் முகத்தில் என்னவோ பளிச் சிட்டு மறைந்தது.

''நந்தினியும் நானும் சமையல் அறைக்குள்ளே போய் ஆபத்து இல்லாததைப் பார்த்துத் தட்டில் எடுத்து வந்து விடுவோமாக்கும்!'' என்று உற்சாகமாக விவரித்தாள் செல்வி.

''பரவாயில்லை. நல்ல ஐடியாதான். ஆனால், எதற்கும் எப்போதும் எச்சரிக்கையோடு இரு. யாரையும் முழுசாக நம்பிவிடாதே... உன்னிடம் நிறையப் பேச வேண்டும் என்று வந்தேனே...'' என்று குறிப்பாக நந்தினியை நோக் கினாள் மேனகா.

வெளியேறிவிட எண்ணித் திரும்பிய நந்தினி, செல்வி யின் முகத்தில் தோன்றிய கலவரத்தைக் கண்டு நின்றாள்.

பிரியமானவள் என்று சொன்னாளே - அவளது பேச்சைக் கேட்கப் பயப்படுவானேன்?

மீண்டும் மேனகாவைப் பார்த்தாள் நந்தினி.

அந்த ஒரு விநாடிக் கொடூரம் நந்தினியின் கற்பனை தானே? சோகம் இழையோடும் இந்தக் கண்களில் கொடூரம் வரக்கூடுமா?

அண்ணி மாலினியின் முகத்தைப் பார்த்து ஏமாந்த நினைவு வந்தது.

மனதை உறுதிப் படுத்திக் கொண்டு மீண்டும் கேட்டாள். ''நீங்கள் ஏன் குறைந்த சத்துள்ள பிஸ்கெட் வாங்கி வருகிறீர்கள் என்று கேட்டேனே?''

சூது அறியாத கேள்வியுடன் நந்தினி ஏறிட்டுப் பார்த்தாள் மேனகாவை. ''ஏன்? இதுதான் செல்விக்குப் பிடிக்கும் என்று அண்ணி - செல்வியின் அம்மா எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறார்களே.''

செல்வி குழப்பத்துடன், ''இல்லை, அக்கா! எனக்கு கிரீம் பிஸ்கெட்தான் பிடிக்கும். ஆனால், குண்டாக இருந்ததால் அதைச் சாப்பிடக் கூடாது என்றுதான் அம்மா இதை வாங்கித் தருவார்கள்,'' என்றாள்.

''இல்லையே. இதுதான் உனக்குப் பிடிக்கும் என்று என்னிடம் நேரில் சொன்னார்களே!'' என்று வலியுறுத்திப் பேசினாள் மேனகா. உடனேயே, ''ஒருவேளை கிரீம் பிஸ்கெட் வாங்கிக் கொடுத்துவிடக் கூடாதே என்று அப்படி சொல்லி இருப்பார்களோ என்னவோ? ஊ...ம்... எப்படிப் பார்த்துப் பார்த்து வளர்த்துவிட்டு, ஒரு திருமணத்தைச் செய்து வையாமல் போய் விட்டார்களே. கடைசியாக இந்த வேதனை உனக்கும் உன்னோடு சேர்ந்து எனக்கும் வாய்த்தது!'' என்று முத்தாகத் துளிர்த்த கண்ணீரை விரலால் நாசூக்காக வழித்து எறிந்தாள்.

''அம்மாவுக்கு என் மேல் ரொம்ப ஆசை. அப்பா கூட...'' என்று விம்மினாள் செல்வி.

செல்வியின் சின்ன மண்டைக்குள் இருக்கும் ஆயிரம் பிரச்னைகளோடு இதை வேறு கிளறிவிட வேண்டுமா என்று மேனகா மேல் கோபம் வந்தது நந்தினிக்கு.

''செல்வி, என்னம்மா இது? தாயன்பு, தந்தைப் பாசம் என்று அறியக்கூட வாய்ப்பில்லாமல் எத்தனை பேர் வளர்கிறார்கள்! பதினேழு ஆண்டுகள் அந்த பாக்கியம் அடைந்ததை எண்ணி ஆறுதல் அடையாமல் அழலாமா? மேலும் நீ அழுதால் உன் பெற்றோர் தாங்குவார்களா? யோசித்துப் பார்,'' என்று ஆறுதலும் அறிவுரையும் கூறி அவளைத் தேற்றினாள்.

செல்வி சமாதானம் ஆகித் தன் அறைக்குத் திரும்பிச் சென்ற பிறகுதான், மேனகாவும் கண்ணீர் வடித்தாள் என்பதையும் அவளது கண்ணீரைக் கண்டு அணுவளவும் தன் மனம் பாதிக்கப்படவில்லை என்பதையும் ஆச்சரியத்துடன் நினைவு கூர்ந்தாள்.



சுமார் பதினோரு மணி அளவில் கதவுக் குமிழ் திருகுவது போலச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள்.

விளக்கைப் போட்டுப் பார்த்தால் ஒன்றும் இல்லை.

யோசனையாக நின்ற போது மீண்டும் அதே சத்தம் சற்று விலகிக் கேட்டது.

கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள்.

மேனகா!

செல்வியின் அறைக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்துவிட்டு மீண்டும் மூடிக் கொண்டு இருந்தாள்.

நந்தினியைக் கண்டதும் முதலில் லேசாகத் திடுக்கிட்டவள் போல் தோன்றிப் பின்னர் சலிப்புடன் பெருமூச்சு விட்டாள்.

''செல்வி தூங்கி விட்டாளா என்று பார்த்துவிட்டு, தன் அறைக்கு வரச் சொன்னார் கீர்த்தி. ஆனால் இதையெல்லாம் செல்வியிடம் சொல்லி விடாதே, பாவம்!'' என்று இயம்பிவிட்டு மெல்ல நடந்தாள்.

அவளது பேச்சை வெகு சிரமப்பட்டு ஜீரணிக்க முயன்றாள் நந்தினி.

தெள்ளத் தெளிவாய்ப் பொருள் விளங்கிய பிறகும் நம்பிக்கை வராமல் வழி முனைவரை சென்று எட்டிப் பார்த்தாள்.

கீர்த்தியின் அறைக் கதவைத் திறந்து கொண்டு அவள் உள்ளே செல்வதைக் கண்டாள்.

அடுத்து ஒரு விஷயமும் நெஞ்சை எரித்துக் கொண்டு புலனாயிற்று.

மின்னியின் அந்தப் பொல்லாத காதலன் கீர்த்தி வாசனேதான்!

செல்வி அறியாத அத்தனை விஷயங்களும் இந்த மேனகாவின் வாய் மூலம் வந்தவைதான்.

இவள் நல்ல புத்தியில் சொன்னாளோ, அன்றித் தன் ஆசை மண்ணான ஆங்காரத்தில் சொன்னாளோ?

எப்படியிருப்பினும் காதல் விவகாரத்துக்கு இன்னமும் முற்றுப்புள்ளி வைக்கவில்லை கீர்த்திவாசன்.

மாறாக...

''சே இவன் என்ன மனிதன்!''

அடி வயிற்றில் இருந்து குமட்டிக் கொண்டு வந்தது நந்தினிக்கு.

கூடவே அடிபட்டாற் போல வேதனையும் உண்டாயிற்று.

காலையில் தோட்டத்திற்குச் சுற்றுப் போகலாமா, வேண்டாமா என்று ஒரு நிமிடம் யோசித்தாள்.

இரவு உல்லாசத்தில் காலையில் விழித்திருக்கக்கூட மாட்டான். மேலும் இந்த ஆளுக்காக நான் ஏன் ஒதுங்க வேண்டும் என்று ஆத்திரத்துடன் எண்ணியபடியே தோட்டத்தில் இறங்கினாள்.

ஆயினும் முன்தினம் சென்ற வழிசெல்லாமல் மறுபுறமாகச் செல்லலானாள்.

அந்தப் பகுதியிலும் சற்று நேரத்தில் நாய்களின் கட்டியத்துடன் கீர்த்திவாசன் வந்து சேர்ந்தான்.

எதுவுமே நடந்திராதது போல நந்தினியை நோக்கி அழகாகப் புன்முறுவல் செய்தான்.

மனதை மறைத்துப் பதிலுக்குப் புன்னகை புரியுமுன் நந்தினி திணறிப் போனாள்.

ஏதோ சமாளித்து விட்டோம் என்று அவள் நிம்மதியோடு நிமிர்கையில், அவளைக் கூர்ந்து நோக்கிவிட்டு, ''சொல்வதற்கு ஏதேனும் முக்கிய விஷயம் இருக்கிறதா?'' என்று விசாரித்தான்.

சொல்வதற்கு ஆயிரம் விஷயங்கள் இருக்கலாம். ஆனால் அவற்றில் எதைக் கேட்கவும் உனக்குத் தகுதி இருக்கிறதா என்று உள்ளூர ஆத்திரத்தில் பொங்கினாள் நந்தினி.



அவனைக் குதறிவிட வேண்டும் போலப் பெருகிய சினத்தை முடிந்த அளவு உள்ளடக்கி, ''செல்விக்கு உங்களை மணக்க அடியோடு பிடித்தம் இல்லை...'' என்றாள் மொட்டையாக.

''பழைய விஷயம்தானே!'' என்று தோளைக் குலுக்கினான் அவன். ''அதெல்லாம் பிறகு சரியாகிப் போய் விடும். திருமணம் ஆன பிறகு மாறி விடுவாள். என்னையே நினைக்கும்படி மாற்றி விடலாம்,'' என்றான் அவன் மிகுந்த தன்னம்பிக்கையுடன்.

பொறுக்கமாட்டாமல், ''அதெல்லாம் பெண்களுக்கு மட்டும்தானாக்கும்?'' என்று கேட்டுவிட்டாள் நந்தினி.

ஒரு கண நேர அமைதிக்குப் பிறகு, ''எதெல்லாம்?'' என்று நிதானமாகக் கேட்டான் கீர்த்தி.

''இந்த ஒருவனையே நினைக்கிற விஷயம். சொல்லப் போனால் ஒன்றை மட்டுமே துணையாக நினைக்கிற விஷயம்!'' என்று ஆத்திர மிகுதியில் கொட்டித் தீர்த்தாள் நந்தினி.

ஆனால் பார்வையில் கூர்மையுடன், ''இதற்கு என்ன அர்த்தம்?'' என்று அவளது வழியை மறைத்து நின்று கேட்டபோது திணறவும் செய்தாள்.

''நான்... நான் பொதுவாகச் சொன்னேன்...''

''இதுபோல வார்த்தைகளைப் பொதுவாகச் சொல்வது குற்றம் சாட்டுவதற்கு சமமே. ஏன் அப்படிச் சொன்னாய்?''

அவன் ஓர் அன்னியன். அதிலும் சம்பளம் கொடுக்கும் முதலாளி. அவனது சொந்த விஷயங்களில் மூக்கை நுழைப்பது தவறு என்ற காலம் கடந்த ஞானோதயத்துடன் அவள் விலக முயன்றபோது, சட்டெனக் கைவீசி, அவளது கரத்தைப் பற்றி நிறுத்தி, ''ஏன் அப்படிச் சொன்னாய்?'' என்று அதட்டிக் கேட்டான் அவன்.

விடுவித்துக் கொள்ள முடியாமல் இரும்பாகப் பற்றியிருந்த கையை எரிச்சலோடு பார்த்தாள் நந்தினி.

அவன் கைப்பிடி மேலும் இறுகவும், நீதானே கேட்டாய், பதிலை வாங்கிக் கொள் என நினைத்தபடி, ''நேற்றிரவு மேனகா உங்கள் அறைக்குள் வந்ததை நான் பார்த்தேன்,'' என்றாள் மிகுந்த வெறுப்புடன்.

''அதனால் என்ன?'' என்றான் அவன் அலட்சியமாக.

அதனால் என்னவாமே! திமிரைப் பார்!

அவளை மேலும் அருகே இழுத்து, ''மின்னி என் அறைக்குள் வந்ததற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். அவளது குடும்பப் பண வரவு செலவுக் கணக்கு பற்றிக் கூடப் பேச வந்திருக்கலாம்,'' என்றான் கீர்த்தி.

அவனது அருகாமை தந்த திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள் நந்தினி.

விழிகளை விலக்க முடியாமல் நின்றபோது, அவன் கூறுவது மெய்தானோ என்றுகூடத் தோன்றியது.

பார்வை வழியே அவன் தனது எண்ணங்களை அவளுள் செலுத்த முயல்வது போல ஓர் உருவகம் உண்டாயிற்று.

வசிய மருந்தில் நந்தினிக்கு நம்பிக்கை இல்லைதான். ஆனால் மெஸ்மரிஸம், ஹிப்னாடிசம் போன்றவைகளில் இவன் தேர்ந்தவனோ என்று நினைத்தாள்.

இல்லையானால் அவன் பேச்சு மெய்தானோ என்ற எண்ணம் எப்படி வரக்கூடும்?

பணக் கணக்குப் பார்க்க இரவு பதினோரு மணிக்கு மேல்தான் நேரமோ என்று ஏன் தோன்றவில்லை?

சட்டெனப் பார்வையை விலக்கிக் கொண்டு, ''ஏன், அவர்கள் வீட்டு நாய் நாலு குட்டி போட்டதைக் கூடப் பேச வந்திருக்கலாம்,'' என்றாள் அவள் ஏளனமாக.

''என் நடத்தை பற்றி யாருக்கும் சமாதானம் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. கேட்க உனக்கு உரிமையும் இல்லை!'' என்றான் அவன் சூடாக.

''அது மட்டுமா? அதற்குத் தகுதியும் இல்லை.''



''தெரியும்,'' என்ற வெடுக்கென மொழிந்துவிட்டு, கையை உதறி விடுவித்துக் கொண்டு வேகமாக விலகிப் போனாள் நந்தினி.

அவளைத் தடுக்க முயற்சிக்காதது மட்டுமின்றி, அவன் எதிர்ப்புறம் திரும்பி நடப்பதும் தெரிந்தது.

யாரோ என்னவோ தப்பு செய்தால் நமக்கு என்ன என்று எவ்வளவோ எண்ணிப் பார்த்தும் மனம் வலியாய் வலித்தது.

பவானி, செல்வி, ஏன் பானுகூட ஓரளவு சொல்லியிருந் தும், இவனைக் கெட்டவன் என்று அவள் எண்ணவில்லையே.

கடைசியில் உள்ளங்கை நெல்லிக் கனியாகக் கண் எதிரே திணித்துக் காட்டும்படி ஆயிற்றே. சே...

கையில் அவன் பற்றிய இடம் சிவந்திருந்தது கண்ணில் பட்டது.

அவனும் அதிகமாகவே ஆத்திரப்பட்டிருந்தது புரிந்தது.

சம்பளம் கொடுக்கிறவன் வேலையிலிருந்து டிஸ்மிஸ் கூடப் பண்ணலாம்... ஏன் பண்ணவில்லை?

ஒருவேளை செய்வானோ?

நினைக்கையிலேயே மனசு மேலும் கஷ்டப்பட்டது.

தனித்திருக்கப் பயந்தவளாய்ச் செல்வியை நாடிச் சென்றாள்.

நந்தினியை நிமிர்ந்து நோக்கிய செல்வியின் பார்வை யில் சந்தேகம் நிறைந்திருந்தது.

மறுபடி என்ன?

## 15

பொதுவாகக் காலை ஏழரை மணிக்கு முன்னதாக எழுந்து தனக்கு வழக்கம் இல்லை என்று செல்வி முன்பே சொல்லி யிருந்தாள்.

தனியே இருந்து தன்மனத்தோடு அல்லல்பட விரும் பாமல்தான் நந்தினி செல்வியின் அறையை நாடிச் சென்றதே.

செல்வி விழித்திருக்க வேண்டுமே என்று நினைத்தபடி அவள் சென்றாள். ஆனால் அங்கே செல்வி விழித்து இருந்தது மட்டும் அல்லாமல், வெடித்துக் கொட்டப் போகும் கார்கால மேகம் போலக் கண்ணும் முகமும் கலங்கிச் சிவந்தும் இருந்தாள்.

இந்தப் பெண்ணுக்குத்தான் எத்தனை வேதனை என்று உருகிப் போய், ''என்னம்மா?'' என்று அருகில் சென்றபோதுதான், தன்னையே அவள் சந்தேகத்துடன் பார்ப்பதை நந்தினி உணர்ந்தாள்.

இப்போது என்ன?

கண்டு கொள்ளாதவள் போல, ''நேற்றுப் போல இன்றும் சாப்பிடலாம், வருகிறாயா?''என்று அழைத்தாள்.

'ஊகூம்' எனச் செல்வி அவசரமாக மறுத்தாள்.

மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறுகிறதா?

''ஏன் செல்வி?''

''நான்... நீ...வந்து... இல்லை... வேண்டாம்...''

செல்வியின் கைகளைப் பற்றிக் குனிந்து, ''என்ன செல்வி?'' என்று பரிவுடன் நோக்கினாள் நந்தினி.

செல்வியின் கண்கள் கலங்கின.

கூடவே குழப்பத்துடன் புருவங்களை நெரித்தாள்.

ஒரு முடிவுக்கு வந்தவள்போல், ''என் மாமாவைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறாய்?'' என்று விசாரித்தாள்.

''உன் மாமாவைப் பற்றிப் பேசுவதானால் நான் இங்கிருந்து போய் விடுகிறேன்,'' என்றாள் நந்தினி.

''இல்லை,'' என்றுகூறியபோது செல்வியின் முகம் தெளிந்திருந்தது. ஆனால், கைகளில் முகம் புதைத்து விம்மி அழத் தொடங்கினாள்.

அருகில் அமர்ந்து தோளை அணைத்து, ''என்ன செல்வி... ஏம்மா?'' என்று வினவினாள் நந்தினி.

''அது... அது... ப்ளீஸ்... கேட்காதே நந்தினி!''



என்று கூறிய செல்வி நந்தினி மீது சாய்ந்து கொண்டு அழலானாள்.

முந்தைய இரவு சமாசாரம் எந்த அளவு இவளுக்குத் தெரியும்? மேனகா வந்தபோது செல்வி விழிக்கவில்லை தான். ஆனாலும்...

நேரடியாகக் கேளாமல், ''உன் கீர்த்தி அங்கிள்தானே மேனகாவின் காதலன்?'' என்று மெல்ல விசாரித்தாள் நந்தினி.

''உ... உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று வியந்தாள் செல்வி.

''உன் மின்னிக்கா மூலம்தான்!'' என்றாள் நந்தினி.

'கிட்டத்தட்ட சரிதானே! அக்கறையாகக் கதவைத் திறந்து சொல்லிவிட்டுப் போனாளே.''

''ஓ!'' திகைத்தாள் செல்வி.

''ஆனால் பழைய விஷயம்தானே. இப்பொழுது அழுவானேன்?'' என்று மேலும் துருவினாள் நந்தினி.

மீண்டும் கண்களில் மழை இறங்க, ''நேற்று... நேற்று இரவு மின்னிக்கா தூங்கவே இல்லையாம். மாமா... மாமா அவளை... அவளை...'' விக்கினாள் செல்வி.

செல்வியின் உணர்ச்சிகள் நந்தினிக்குப் புரிந்தன.

அவளை மணக்கப் போவதாகக் கூறும் ஒருவன் அவள் இருக்கும் வீட்டிலேயே இன்னொருத்தியோடு இரவைக் கழிப்பது என்றால்...?

எந்தப் பெண்ணாலும் தாங்கிக் கொள்ள முடியாது தான். ஆனால்...

''இந்த விஷயம் உனக்கு எப்படித் தெரியும்?''

''மின்னிக்காதான் வந்து எழுப்பிச் சொல்லிவிட்டுப் போனாள். ரொம்ப அலுப்பாக இருப்பதால் மதியம் எழுப்ப வேண்டாம் என்று...'' என்று விசும்பினாள்.

இவ்வளவு அக்கறையாக இவளிடம் வந்து சொல்ல வேண்டுமா என்று ஆத்திரமாக நினைத்தாள் நந்தினி.

தூங்கிவிட்டாளா என்று பார்க்க வந்த பூனைத்தனம் என்ன? இப்போது விளக்கம் சொல்ல வந்த நாய்த்தனம் தான் என்ன?

செல்விக்குத் தெரிய வேண்டாம்; வருத்தப்படுவாள் என்று தன்னிடம் உருகியவள், தானே செல்வியை எழுப்பிச் சொல்வானேன்?

ஒன்றுக்கு ஒன்று ஒவ்வாத இந்த இரண்டில். ஒன்று வேடமாகத்தானே இருக்க வேண்டும்?

மனதை இந்த முரண்பாடு உறுத்த, ''மின்னிக்காவின் பண விவகாரம் எல்லாம் கவனிப்பது யார் செல்வி?'' என்று விசாரித்தாள்.

''மா...மாமாதான்.''

''பண வரவு செலவு பற்றிப் பேச...'' என்று அவன் கேலி போலச் சொன்னது மெய்தானோ?

ஆனால், பண வரவு செலவெல்லாம் பேச இரவு பதினோரு மணிதான் கிடைத்ததா?

சே! நல்ல ஏமாளி இதயம்! கத்தரிக்காயில் நெய் வடி கிறது என்று அவன் சொன்னால் நம்பத் துடிக்கிற இதயம்!

என்ன அடக்கியும் குறுகுறுப்புத் தாளாமல், ''ஏன் அவள் கணக்கை எல்லாம் உன் மாமா பார்க்க வேண்டும்?'' என்று மேலும் துருவினாள்.

''மின்னிக்காவின் குடும்பமும் மாமாவின் குடும் பமும் பல ஆண்டுகளாக நண்பர்கள். தூரத்து உறவும் கூட. மேனகாவின் தந்தைக்கு நெஞ்சு வலி வந்த பிறகு மாமாதான் எல்லாம். மின்னிக்காவை மணப்பதாகக் கூட இருந்ததாம். நெருங்கிப் பழகிவிட்டு, இப்போது பண ஆசையில் அங்கிள் அவளைத் தட்டிக் கழிக்கிறராம்,'' என்று விளக்கினாள் செல்வி.

''ராம் என்றால் இதெல்லாம் மற்றவர் சொல்லித்தான் உனக்குத் தெரியுமா? சொன்னதுகூட இதே மேனகாதானா?''



''அது... அது...''என்று தயங்கினாள் செல்வி.

''உன் சத்தியத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் செல்வி. உன்னிடம் வாக்குப் பெற்றுக் கொண்ட மேன காவே அதைக் காப்பாற்றவில்லையே! இதெல்லாம் எனக்குத் தெரிய வந்தது அவளால்தானே!'' என்று எடுத்துச் சொன் னாள் நந்தினி.

இதை அடிவரை பார்த்துவிட வேண்டும் என்ற வேகம் அவளுக்கு.

''இதெல்லாம் தான் சொன்னதாக வெளியே தெரிந் தால் மாமா அவளைக் கொன்று விடுவார் என்று அவளுக்கு ஒரே பயம்,'' என்று வெகுளித்தனமாக உண்மையை வெளியிட்டாள் செல்வி.

''வசிய மருந்து, விஷம் எல்லாம்?''

தலையாட்டினாள் செல்வி.

''இவ்வளவு தெரிந்தும் மேலே உன் அங்கிளின் அறைக்கு அவளாக ஏன் போகிறாளாம்?''

மின்னியின் பதில் அதற்கும் செல்வி முகம் காத்து இருந்தது. ''மின்னிக்காவுக்கும் வசிய மருந்து கொடுத்து விட்டார் என்று அவளுக்கே சந்தேகம். ஒதுங்கிப் போய் விட நினைத்தாலும் முடியவில்லையாம்!'' என்று விழிகளை விரித்துச் சொன்னாள் செல்வி. ''வசிய மருந்து உட்கொண் டிருந்தால் உன் மாமாவைப்பற்றிக் கெடுதல் எல்லாம் ஏன் சொல்கிறாளாம்? மயங்கியல்லவா விழுந்து கிடப்பாள்!'' என்றாள் நந்தினி விடாமல். ''உனக்கு இன்னமும் மின் னிக்கா மேல் சந்தேகம் இல்லையா? அவள் இயல்பாக நல்லவள் என்பதால் என்னை எச்சரிக்காமல் இருக்க முடியவில்லையாம். மருந்தின் சக்தியால் மாமாவை விட்டு விலகவும் முடியவில்லையாம். அவள் ரொம்பப் பாவம்! இல்லையா நந்தினி?''

செல்வி என்ன சொல்லியும் நந்தினியின் அடிமனம் பிடிவாதமாக மேனகாவை நம்ப மறுத்தது.

என்னவோ திட்டம் போட்டு வேலை நடக்கிறது.

விபத்தில் சிக்கிய பெண் சரியாகத் தேறுமுன் அவளைப் பட்டினி போட்டு, 'கொடுத்தேன்' என்றுபேர் பண்ணி, பயனற்ற பிஸ்கெட்டுகளைக் கொடுத்து ஏற்கெனவே பலவீன மான பெண்ணை உருக்குலைக்க ஏற்பாடு நடக்கிறது.

ஒரேயடியாக நோய்ப் படுக்கையில் தள்ளும் வழியா? அல்லது சக்தியிழப்பால் சாகடிக்க முயற்சியா?

ஆனால், அந்த அளவுக்குப்போகக் கீர்த்தி விட்டு விடுவாரா?

அல்லது கீர்த்தியும் இதற்கு உடந்தையா?

இதயம் ஒரு கணம் நின்று மூச்சு முட்டிப் போயிற்று நந்தினிக்கு.

சேச்சே, இராது என ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

அப்படி யெல்லாம் இருந்தால், செல்வியை உண்ண வைக்கும்படி எடுத்த எடுப்பிலேயே தன்னிடம் கேட்டு இருக்க மாட்டார், நிச்சயம் மாட்டார் என்று அழுத்த மனதோடு சொல்லிக் கொண்டாள்.

ஆக, செய்வதெல்லாம் மேனகாதான்.

அவள்தான் முழு வில்லி.

அவளது திட்டத்துக்கு இடையில் வந்ததால்தான் நந்தினியிடம் அவளுக்கு வெறுப்பு. ஆனால், இதை யெல்லாம் இப்போது செல்வியிடம் சொல்லிப் பயன் இல்லை. பல நாட்களாக இதில் பெற்றோரை இழந்து நிராதவராகத் துன்புற்று நின்ற காலத்தில் அன்பும் பரிவும் (நிஜமோ நடிப்போ) காட்டி மேனகா வளர்த்திருந்த நம்பிக்கையை உடைப்பது கடினம் என்பது அவளுக்குப் புரிந்தது. பேச்சை மாற்றி -

''சரி... சரி. வா, ஏதாவது சாப்பிடலாம். எனக்குப் பசி!'' என்று செல்வியை இழுத்துச் சென்றாள் நந்தினி.

மறுக்காமல் செல்வியும் உடன் சென்றாள். ஏனோ உணவு முடியும் வரை அதிகம் பேசாமல் இருந்தாள் செல்வி. பிறகு -



''நூலகத்துக்குப் போவோம், நந்தினி,'' என்று அழைத்துப் போனாள்.

அங்கே ''பொன்னியின் செல்வன்'' அத்தனை பகுதி களையும் அவள் எடுப்பதை வியப்புடன் கண்டாள் நந்தினி.

ஆனால், அதை விடவும் நூலகத்தின் அளவும் பரா மரிப்பும் பலவகைப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை யும் அவளைப் பிரமிக்க வைத்தன.

அவளைப் பார்த்துச் சிரித்தபடி, ''கிட்டத்தட்ட எல்லாப் புத்தகங்களையுமே கீர்த்தி அங்கிள் படித்திருக்கிறா ராக்கும்!'' என்றாள் செல்வி பெருமையாக. ''இது கூட!'' என்று ஒருபுறமாக நிறைய அடுக்கி வைத்திருந்த மில்ஸ் அன்ட் பூன் நாவல்களைக் காட்டி, ''இது எனக்காக வாங்கியது!'' என்று மேலும் பெருமையடித்தாள் செல்வி.

நந்தினியின் மனமும் சுற்றிச் சுற்றிக் கீர்த்தியிடமே வந்து நின்றது.

செல்வியின் பேச்சை மட்டும் வைத்துக் கீர்த்தியைப் பற்றி எந்த முடிவுக்கும் வரக் கூடாது என்று நினைத்தாள் நந்தினி.

யார் பேச்சும் அவனுடைய உண்மையான உருவத்தைக் காட்டக் காணோம்.

பானு, பவானி, செல்வி... கடைசியாக மேனகா.

அவளோ தலை முதல் கால்வரை பொய்யும் புனை சுருட்டும்.

வஞ்சகி.

அவள், தன் அண்ணியைக்கூட, இப்படி வெறுக்க வில்லை. இவளை ஏன்?

'பொன்னியின் செல்வனோடு' செல்வி அவளது அறைக்குச் சென்றுவிட, ஒரு 'மில்ஸ் அன்ட் பூன்' புத்தகத்துடன் தன் அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நந்தினி தீவிரமாய் யோசித்தாள்.

மேனகா மேல் ஏன் இந்த வெறுப்பு?

கீர்த்தியின் ஆசைக்கு உரியவள் என்பதால் ஏற்பட்ட பொறாமையோ என்று தோன்றவும் நந்தினி அதிர்ந்தாள்.

ஆனால் அவனைக் காதலித்தால்தானே அவன் வேறு பெண்களுடன் பழகுகையில் பொறாமை உண்டாகும்? நினைத்தாலே பற்றிக் கொண்டு எரியும்?

அப்படியானால்...?

நந்தினிக்குத் தலை சுழன்றது.



## 16

காதலாவது மண்ணாங்கட்டியாவது! ஒருவனைப் பார்த்த இரண்டே நாளுக்குள் அவன் மேல் காதல் வந்துவிடுமா?

அதிலும் அவனைப் பற்றி நல்லதாக ஒருவர் கூடச் சொல்லியிராதபோது?

வேடிக்கைதான்.

அண்ணி சொன்னது போல முட்டாளாகத்தான் வளர்ந்து விட்டேன் என்று நந்தினி நினைத்தாள்.

இல்லை யென்றால் இன்னொருத்தியை மணக்கப் போவதாக நேருக்கு நேரே கூறிய ஒருவன் மேல் இந்தக் காதல் கத்தரிக்காய் எப்படிக் காய்த்து விடுமாம்!

சிகரம் வைத்தாற்போல மேனகாவோடு சந்தேகத்துக்குரிய உறவு வேறு.

இருந்திருந்து அவனிடம் மயங்குவது என்றால்... சேச்சே.

அண்ணனைத் தவிர அடுத்த ஆண்களுடன் அதிகம் பழகி அறியாத காரணத்தால் கொஞ்சம் ஆண் அழகனாக ஒருவனைக் கண்டதும் புத்தி தடுமாறிவிட்டது.

இப்போதும் ஒன்றும் குடிமுழுகி விடவில்லை!

முடிந்த அளவு முகத்தைப் பாராமல் அவனோடு பேசாமல் அவனிடமிருந்து ஒதுங்கி இருந்து விட்டால் இந்தத் தடுமாற்றம், தானே மறைந்துவிடும்.



பிரச்சினையை ஆராய்ந்து ஒரு தீர்வையும் கண்டு கொண்டாள் நந்தினி.

முடிவுக்கு வந்த மறு நிமிடத்தில் இருந்தே அதைச் செயலாற்றவும் தொடங்கினாள்.

கீர்த்தியைச் சந்திக்கக் கூடிய இடங்களை, வாய்ப்புகளை அடியோடு தவிர்த்தாள்.

அவன், மலர்வனத்தில் இருந்து வெளியேறும்வரை, தோட்டத்தின் பக்கமே செல்வதில்லை.

காலை உணவைச் சமையல் அறையிலேயே எடுத்துக் கொள்வாள். மதியத்தைப் பற்றிக் கவலையில்லை.

வேறு வழியின்றி இரவு உணவை எல்லோருமாகச் சேர்ந்து உண்ண நேர்ந்தபோது அவள் தலை நிமிர்வதே இல்லை.

அவனும் அவளது வழியைக் கடைப்பிடித்தானோ என்னவோ, இருவரிடையிலும் பேச்சே நின்று போயிற்று.

மேலும் குடும்ப விஷயங்களையும், பழைய நினைவுகளையும் கிளறிய மேனகாவோடு பேசவே அவனுக்கு நேரம் போதவில்லையே.

ஆனால் இப்படி விரும்பி முயற்சி செய்து ஏற்படுத்திய ஒதுக்கம் நிம்மதிக்குப் பதிலாக நெருஞ்சியாக உறுத்துவது ஏன் என்பதுதான் அவளுக்குப் புரிபடாது போயிற்று. ஆனாலும், 'போகட்டும், போ...கட்டுமே!' என்று வீம்போடு எண்ணிக் கொண்டாள் அவள்.

வெகு சில சமயங்களில் அவனது பார்வை முதுகைக் குத்துவதையும் முகத்தைத் துளைப்பதையும் அவள் உணர்ந்தபோதும் அவள் திரும்பிப் பார்ப்பதும் இல்லை. நிமிர்வதும் கிடையாது.

வெகு சில சமயங்கள், சில சமயங்களாகிப், பின் பல சமயங்கள் ஆனபோதும் அப்படித்தான்.

இந்த ஒதுக்கம் சரியே என்று உறுதிப்படுத்துவது போல இன்னொன்று நடந்தது.

முதல் அனுபவத்திற்குப் பிறகு செல்வியும் மேனகாவும் தனித்துப் பேசும் வாய்ப்புகள் நேரா வண்ணம் நந்தினி கவனித்துக் கொண்டாள்.

மேனகா அவ்வப்போது குறிப்புக் காட்டியபோதெல்லாம் உணர மாட்டாத நல்மரமாகி நின்றாள்.

செல்வி வேறு, ''என்னதான் மின்னிக்கா பாவம் என்று தோன்றினாலும் அவள் என்னென்னவோ விசயம் எல்லாம் பேசி விடுகிறாளா, மனதுக்கு அசிங்கமாயும் கஷ்டமாயும் ஆகிவிடுவதால் அவள் வந்தால் பயமாகக் கூட இருக்கும். ஆனால் இப்போது நீ இருப்பதாலோ என்னவோ, அவள் அதெல்லாம் பேசுவது இல்லை!'' என்று குதூகலப்பட்டாள்.

அதன் பிறகு, ''நாம் தனியாகப் பேசி ரொம்ப நாளாயிற்று'', ''சில மட்டிகளுக்கு எப்போது ஒதுங்க வேண்டும் என்றே புரிவதில்லை'', ''வேலைக்காரர்களை வைத்துக் கொண்டு வீட்டு விஷயங்களை எப்படிப் பேசுவது?'' என்பன போன்ற மேனகாவின் ஜாடைப் பேச்சுக்களையும் உதாசீனப் பார்வைகளையும் பொறுத்தவரையில் நந்தினி சரியான கல்லுளிமங்கியாகிப் போனாள்.

கண்டு கொள்வதே கிடையாது.

யார் மூலம் சம்பளம் கிடைக்கிறதோ, அவனே இவள் இருப்பதை விரும்பும்போது, மற்றவர்களைப் பற்றி என்ன கவலை?

வெளிப்படையாக மரியாதை குறைவாகக் காட்டா விட்டாலும், 'போடி' என்பதுபோலத் திருப்பிக் கொண்டாள் நந்தினி.

செல்வி விழுந்து விழுந்து 'பொன்னியின் செல்வ'னைப் படித்தபோது இவ்வளவு கதை ஆசையா என்று ஆச்சரியப் பட்டாள் நந்தினி.



ஆனால் படித்து முடித்ததும், மேனகாவைப் பார்த்து, ''நீ பொன்னியின் செல்வனைச் சரியாகப் படிக்கவில்லை மின்னிக்கா. அதிலும் நந்தினி நல்லவள்தான்!'' என்ற போது திகைத்துப் போனாள்.

கூடவே மகிழ்ச்சியாகவும் இருந்தது.

''ஆனால் ஒன்று, அந்த நந்தினி போல இந்த நந்தினியும் பிரமாதமான அழகிதான்!'' என்று செல்வி தொடர்ந்து பெருமையடித்தபோது, கீர்த்தியின் பார்வை தன் மீது படிவதை உணர்ந்து உதட்டைக் கடித்துக் கொண்டாள் நந்தினி.

அதேநேரம் கீர்த்தியிடமிருந்து திரும்பிய மேனகாவின் கண்கள் குரோதத்தை உமிழ்வதைக் கண்டாள்.

கீர்த்தி பார்த்ததை இவளும் கண்டிருப்பாளோ?

யார் எப்படிப் பார்த்தாலும் எனக்கென்ன என்பது போல நிமிர்ந்து உண்ணலானாள்.

அவ்வளவு எளிதாக விட்டுவிட மனம் இல்லை மேனகாவுக்கு. 'ஆதித்த கரிகாலனுடைய மனதை அலைக்கழித்துக் கொன்றவளை நல்லவள் என்கிறாயே! நீதான் சரியாகப் படிக்கவில்லை,'' என்றாள் குரலை உயர்த்தி.

''இல்லையே, அவள்தான் வாளைக் கரிகாலரிடம் கொடுத்து விடுகிறாளே. கடைசி வரையில் நன்றாகப் படித்துப் பார் அக்கா. யார் கொலை செய்தது என்ற புதிரைக் கல்கி விடுவிக்கவே இல்லை. அப்படித்தானே நந்தினி?'' என்று தனக்குத் துணை தேடினாள் செல்வி.

''கரிகாலர் முடிவு சரித்திரம். அதை மனம் உருகும் கதையாக்கிச் சொல்கிறார் கல்கி, அவ்வளவுதான், செல்வி! நீ சிவகாமியின் சபதம் படித்திருக்கிறாயா? அதுவும் கல்கியுடையதுதான். சிவகாமி சபதம் செய்யும் கட்டத்தில் படிப்பவருக்கு மயிர் கூச்செறிந்து போகும்!'' என்று தன்னிடமிருந்து பேச்சை மாற்றினாள் நந்தினி.

''பாரதியாரின் பாஞ்சாலி சபதம் படிக்கும்போதும் கூட அதே உணர்ச்சிதான் உண்டாகும். படித்திருக் கிறாயா?'' என்று கீர்த்தியும் பேச்சில் கலந்துகொண்ட போது நந்தினிக்கு ஆச்சரியம் உண்டாயிற்று.

கவிதையைப் படிப்பதோடு ரசிக்கவும் செய்வானா?

பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் என்று பலருடைய கவிதைகளையும், கட்டுரை - கதைகளையும் அலசி ஆராய்ந்த போது, அவனுடைய ரசனையும் தன்னுடை யதும் வெகுவாக ஒன்றிப் போவதைக் கண்டு மேலும் வியந்தாள் நந்தினி.

நந்தினிக்குப் பிடித்தமான விஷயம் எழுத்துலகம்.

நுனிப்புல் மேனகா ஈடுகொடுக்க முடியாமல் ஒதுங்கி விட, செல்வி பார்த்து ரசிக்க, மற்ற இருவரிடையே பேச்சு தடையற்று ஓடியது.

வேறுபாடுகளும் இல்லாமல் இல்லை.

இன்றைய நாவல்களையும் 'மில்ஸ் அன்ட் பூன்' புத்தகங்களையும் வெகுவாகச் சாடினான் அவன்.

கீர்த்தியின் லைப்ரரியில் பார்த்த நினைவில், ''எக்கொனாமிக் டெவலப்மென்ட்டைப் படிப்பவருக்கு ரசனை பற்றி என்ன தெரியும்?'' என்று மட்டம் தட்டினாள்.

''அது தெரியாவிட்டால் வயிற்றில் ஈரத் துணிதான் கட்டிக் கொள்ள வேண்டும்!'' என்று கீர்த்தி கூற, கரண்டி யால் மேசைமேல் தட்டி, ''ஆர்டர் ஆர்டர்! இது சாப்பாடு மேடை, பட்டிமன்றம் அல்ல, சண்டை போடக்கூடாது!'' என்று நீதிபதி பாணியில் செல்வி அறிவிக்க, எல்லாம் சிரிப்பில் முடிந்தது.

நெருஞ்சிமுள்ளின் உறுத்தல் நீங்கி உள்ளூர உற்சாகம் பீறிடுவதை நந்தினி உணர்ந்தாள்.

கீர்த்தியுடன் வாதாடுவதுகூட மகிழ்ச்சியை அளிப் பதைப் புரிந்து கொண்டாள்.



அறைக்குத் திரும்புகையில் செல்வியும் உற்சாகமாக இருந்தாள். ''பழைய மாதிரி இன்று நன்றாயிருந்தது!'' என்றாள் திருப்தியுடன்.

செல்வியின் மருந்துகளைக் கொடுத்துவிட்டு, 'குட்நைட்' சொல்லி நந்தினி திரும்புகையில் மேனகா உள்ளே வந்தாள்.

செல்வியை அவளோடு தனியே விடத் தயங்கி, அவள் நிற்கையில், மேனகாவே, ''நீ நிறையப் படிப்பாய் போல் இருக்கிறதே!'' என்று அவளோடு பேசத் துவங்கினாள்.

நல்லதாயிற்று என்று செல்வியின் அருகே அமர்ந்து கொண்டாள் நந்தினி.

குறிப்பற்றுச் சற்று நேரம் இதையும் அதையுமாக அளந்துவிட்டு ஒருவாறு மேனகா கிளம்பினாள்.

உட்கார்ந்தபடியே, மேலிருந்த தனது கைப்பையை எடுக்கக் கையை நீட்டினாள் அவள்.

அதற்குள் அவசரமாகச் செல்வி அதை எடுத்து அவ ளிடம் கொடுத்த போது, எப்படியோ இருவர் கையிலும் நில்லாமல் பை தரையில் விழுந்தது.

மூடுகிற 'கிளிப்' கழன்று உள்ளிருந்ததெல்லாம் சிதறி விழுந்தன.

மேனகா அசையாமல் பார்த்திருக்க, செல்வியும் நந்தினி யும் குனிந்து சிதறிய பொருட்களை விரைவாகச் சேகரிக் கத் தொடங்கினார்கள்.

மேசையின் அடியில் கிடந்த பொருட்களை எடுக்கக் கையை நீட்டிய இருவரும் தீச்சுட்டாற் போலச் சட்டெனக் கைகளை இழுத்துக் கொண்டார்கள்.

முகம் ரத்தமெனச் சிவக்க இருவரும் நிமிர, சாவதான மாய் அதை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டாள் மேனகா - ''கொஞ்ச காலத்துக்குத் தப்பாய் எதுவும் ஆகி விடக்கூடாது என்றிருக்கிறார்,'' என்றபடி.

ஆம், அது கருத்தடை மாத்திரைகள் அடங்கியது. யாருக்கும் சந்தேகம் வந்துவிடக் கூடாது என்று கொட்டை

எழுத்தில் கருத்தடை மாத்திரை என்று தெரிய லேபிள் இணைக்கப்பட்டு இருந்தது.

அடிவயிற்றில் இருந்து குமட்டிக் கொண்டு வர, பேய் விரட்டினாற்போலத் தன் அறைக்குள் ஓடினாள் நந்தினி.

''மரியாதை இல்லாமல் பாதிப்பேச்சில் போகிறாளே, முட்டாள்!'' என்ற மேனகாவின் அர்ச்சனையைக் காதிலே வாங்கவில்லை.

என்ன அசிங்கம்! என்ன அசிங்கம்!

எவ்வளவு இழிந்தவர்கள்!

சீ... சீ... சீ...

இவனெல்லாம் ஒரு... மனிதன்!

இருந்திருந்து இவனைப் போய்... சே...

இந்த மாதிரி மனிதர்களின் முகத்தில் விழிப்பதுகூடப் பாவம்.

நாளை முதல் காரியமாக வேலையை ராஜினாமா செய்துவிட்டு வெளியேறி விடவேண்டும்.

பட்டினி கிடந்து செத்தாலும் பரவாயில்லை, இங்கிருந்து வெளியேறியே ஆக வேண்டும் என்று முடிவு செய்தாள் நந்தினி.

வெட்டிக் கொண்டு போய்விட நிச்சயித்த பிறகும் மனக் குமுறல் அடங்க மறுத்தது.

கூண்டில் அடைபட்ட புலியாய் அறையில் குறுக்கும் நெடுக்குமாக அலைந்தாள்.

அப்போது திடீர் என்று அறைக் கதவு தட்டப்பட்டது.

'யார்' என்று திறந்து பார்த்தபோது கீர்த்திவாசன் நின்றான்.

பேயைக் கண்டாற்போல வெளுத்த நந்தினியின் முகம் உடனே கன்றிச் சிவந்தது.

## 17

நந்தினியின் முகம் வெளுத்ததையோ, சிவந்ததையோ கவனிக்கும் நிலையில் கீர்த்திவாசன் இல்லை.



''செல்விக்கு உடம்பு சரியில்லை. உடனே வா,'' என்று முன்பே விரைந்தான்.

அவனோடு ஓடிச் சென்று பார்த்தபோது, படுக்கையில் கைகால் உதறல் எடுத்துக் கிடந்தாள் செல்வி.

அந்த விபத்தின் எதிரொலியாக இந்த உதறல் எப்போதேனும் ஏற்படக் கூடும் என்று டாக்டர் சசி கூறியிருந்தது நினைவு வந்தது நந்தினிக்கு.

அதற்குரிய சிகிச்சைக்காக மருந்து அலமாரியை நோக்கி ஓடினாள்.

கீர்த்தி அவளை நிறுத்தி, ''மருந்து இதோ இருக்கிறது. செல்வி மறுக்கிறாள்,'' என்றான்.

செல்வியின் பயம் திரும்பி விட்டதையும், எதையும் எடுத்துச் சொல்ல இது நேரம் இல்லை என்பதையும், உணர்ந்து, அவனைக் கையமர்த்தினாள் நந்தினி. வேறு ஒரு 'டோஸ்' ஊற்றி வந்து செல்வியை அருந்த வைத்தாள்.

தைலத்தை எடுத்து வந்து கை,கால்களில் சூடு பறக்கத் தேய்க்கலானாள்.

பார்வதி அம்மாளும் கீர்த்தியும் உதவி புரியவே, செல்வியின் உதறல் நின்றது.

மருந்தின் வேகத்தில் விழிகளில் உறக்கமும் படரலாயிற்று.

நந்தினியின் கையைப் பற்றி, ''நீ மட்டும் இரேன்,'' என்றாள் அயர்ந்த குரலில்.

கீர்த்தியின் ஆணைப்படி அந்த அறையில் நந்தினிக்கும் ஒரு படுக்கையை அமைத்துவிட்டு மற்றவர் அகன்றனர்.

இரு பெண்களையும் ஒரு பார்வையால் அளந்து விட்டுக் கீர்த்தியும் சென்றான்.

மற்றவர் சென்றுவிட்ட பிறகு, சம்பந்தமில்லாமல், ''மின்னிக்காவும் பொல்லாதவள்தான்,'' என்றாள் செல்வி.

''போகட்டும். நீ தூங்கு செல்வி,'' என்றாள் நந்தினி.

''உன்னை ஓட ஓட விரட்டிவிடுவேன் என்கிறாளே, இவர்களிடம் என்னை விட்டுவிட்டு நீ போய் விடமாட் டாயே!'' என்றாள் செல்வி கண்ணீர்க் குரலில்.

சற்று முன்பாகச் செய்த முடிவு அவளைப் பார்த்து எள்ளி நகையாட, செல்வியின் நெற்றியை மெல்ல வருடிய படி, ''போகமாட்டேன், நீ தூங்கு,'' என்றாள் நந்தினி.

மனதில் சஞ்சலம் தீர்ந்து விட்டதாலோ மருந்தின் சக்தியாலோ செல்வி உடனே உறங்கி விட்டாள்.

இந்தப் பெண்ணை விட்டு எப்படிப் போவது?

ஆனால், கீர்த்தியின் முகத்தைப் பார்த்துக் கொண்டு இருப்பது சகிக்கக் கூடிய விஷயம் இல்லை.

பாராமல் ஒதுங்கி விட்டால்?

கீர்த்திவாசனிடமிருந்து ஒதுங்கும் தீர்மானத்தை நூறு சதவீதம் அமலாக்கினாள் நந்தினி.

குளிரடித்தாலும் பரவாயில்லை என்று அவன் எழுமுன் பாக வெகுவான அதிகாலையிலேயே தோட்டத்தில் உலா வியது தவிர, அவன் இருக்கும் சமயங்களில் அறையை விட்டு வெளியேறுவதே இல்லை. மூன்று தினங்கள் இவ்வாறு வெறுமையாகக் கழிந்தன.

இரவு உணவைக் கூடத் தியாகம் செய்தாள்.

பிறகு, அவன் இன்னமும் வரவில்லை என்ற எண்ணத் தில் தோட்டத்தில் நடந்தபோது ஒரு மரத்தின் மறைவில் இருந்து வெளிப்பட்டு, ''ஒரு நிமிடம்,'' என்று அவளை நிறுத்தினான் கீர்த்திவாசன்.

நிமிராமல் தரையைப் பார்த்தபடி, ''என்ன விஷயம்?'' என்றாள் அவள்.

''ஏதோ இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன்,'' என்று ஓர் எட்டு அருகில் வந்தான் அவன்.

அவனைப் பார்வையால் வெட்டிவிட்டு, ''நீங்கள் ஆயிரம் நினைக்கலாம். நான் என்ன செய்ய முடியும்?'' என்றாள் அவள் வெடுக்கென.



''உண்மை சொல்ல முடியும்,'' என்றான் அவன் நிதானமாகவே.

''என்ன உண்மை?''

''உன்னைச் சஞ்சலப்படுத்துகிற உண்மை!'' என்றான் அவன் அதே குரலில்.

எப்படிச் சொல்வது? என்னவென்று சொல்வது?

வேதனையும் அவனது அருகாமை தந்த திகைப்புமாக அவள் விக்கித்து நிற்கையில், ''இந்தப் பட்டுத் தலைக் குள் இருந்து குடைகிற உண்மையைத்தான் கேட் கிறேன்,'' என்று முறுவல் செய்தான் அவன்.

சொல்லும்போதே அவன் கை உயர்ந்து, அவளது நெற்றி மீது புரண்ட ஒரு குழல் கற்றையை மிருதுவாக ஒதுக்கி விட்டது.

கூந்தலை ஒதுக்கிய கரம் மெல்ல இறங்கிக் கன்னக் கதுப்பை வருடியது.

சொல்லிழந்து, செயல் இழந்து, மீள முடியாமல் எங்கோ மூழ்கிக் கொண்டு இருந்த அவளைச் செல்வியின் அழைப்புக் குரல் சுயநினைவுக்குக் கொணர்ந்தது.

சட்டென்று அவன் கையை உதறித் தள்ளிவிட்டு ஓடினாள்.

ஆனால் மனது திகைத்துப் போயிற்று.

அவனது விரல்களுக்கு, மென் குரலுக்கு, கனிந்த பார்வைக்கு இவ்வளவு சக்தியா?

ஓர் ஆண் மகனால், தான் இவ்வளவு பாதிக்கப்படக் கூடும் என்று நந்தினி எண்ணியதே இல்லை.

பஸ்சில், தியேட்டரில் எத்தனையோ ரோமியோக் களை அதட்டி அரள வைத்தவள்.

இப்போது மகுடி கேட்டாற் போல மயங்கி நிற்பது வியப்பாக இருந்தது. பயமாகவும் இருந்தது.

மடத்தனமாக ஏதும் செய்து விடுமுன் ஓடிவிடுவது நல்லதோ?

தப்பி ஓடமுடியாத காடு என்றாளே பவானி.

அவளிடமும் இதேபோல... சீ!

கூடவே செல்வி.

நந்தினியை அறைக்குள் இழுத்துப் போய்க் கதவைச் சாத்தினாள் செல்வி.

''ஒரு முட்டாள் தனம் செய்து விட்டேன் நந்தினி,'' என்றாள் அச்சத்துடன்.

''ஒன்றுதானே?'' என்று கேலி செய்துவிட்டு, ''பயப் படாமல் சொல்லு. பார்த்துக் கொள்ளலாம்,'' என்றாள் நந்தினி.

''அன்றைக்கு... நினைவு இருக்கிறதா? நீ போன போது உன்னை வெறுப்பாய்ப் பார்த்துக் கண்டபடி திட்டி ஓட ஓட விரட்டி அடிப்பேன் என்றாள் மின்னிக்கா. அதை நினைத்த தும் மனம் விட்டுப்போக, தேறுதலும் தைரியமும் சொல்ல நீ இல்லாமல் நான் என்ன ஆவேன் என்று பயந்து...''

''அதற்கு அந்த அளவுக்கா கலங்குவது?''

''அது மட்டும் இல்லை. அந்த மா...மாத்திரை வேறு...''

''தெரிந்த பழைய விஷயம்தானே!'' என்றாள் தாழ்ந்த குரலில் நந்தினி.

''அது சரிதான் நந்தினி. ஆனால், இதுவரை எல்லாம் மின்னிக்காவாகச் சொன்னதுதான். லேசான சந்தேகத் துக்கு ஒரு வாய்ப்பு இருந்து கொண்டே வந்தது. இது ஒரேயடியாய் நிரூபித்து விட்டது போல.''

சட்டென ''செல்வி!'' என்று மகிழ்ச்சியுடன் கூவினாள் நந்தினி. ''இந்த மாத்திரையும் அவளாகத்தானே கொணர்ந் தாள். இது மட்டும் எப்படி நிரூபணம் ஆகும்? நன்றாக யோசித்துப் பார், உன் அறைக்கு வரக் கைப்பை எதற்கு?''

''அதானே! பை சும்மா விழுந்து விடுமா? அந்த மாதிரி 'கிளிப்' தானாகத் திறந்து கொள்ளவே செய்யாது. எல்லாம் பொய்!'' என்று தானும் மலர்ந்தாள் செல்வி.

சில கண்ணங்களிலேயே இருவரது முகங்களும் கூம்பின.



செல்வியை மணக்கப் போவதாகக் கீர்த்தியே அல்லவா சொன்னான்? இதற்கு என்ன சமாதானம் சொல்லிக் கொள்ள முடியும்?

ஒரு பெருமூச்சுடன், ''அது போகட்டும். இன்றைய விஷயத்துக்கு வா,'' என்றாள் நந்தினி.

''நம் கை காலே நம் சொல்படி கேட்காவிட்டால் அது எவ்வளவு பயங்கரம் தெரியுமா? அன்று எனக்குக் கை கால் உதறத் தொடங்கிய பிறகும் பார்த்துவிட்டுப் பேசாமல் போய்விட்டாள். அப்போது பார்வதியம்மா மட்டும் வரவில்லை என்றால் என்ன ஆகியிருப்பேனோ? அது வேறு வெறுப்பாக இருந்ததா? நீ தோட்டத்துக்குப் போன வுடனேயே வந்து உன்னைப் பற்றி உளறத் தொடங்கினாள். ஆத்திரத்தில், 'பார்க்கப் பிடிக்கவில்லை, வெளியே போ!' என்று அவமதிப்பாய்ப் பேசிவிட்டேன். அவ்வளவுதான். முகமூடி கழன்ற மாதிரி எப்படி மாறி விட்டாள்! 'மாமாவிடம் உன் காதலன் கதிர் பற்றிச் சொன்னால் என்ன செய்வாரோ?' என்று மிரட்டுவது போலச் சொல்லி விட்டுப் போனாள். சொல்லி விடுவாளா, நந்தினி? பயமாக இருக்கிறதே!'' என்று நடுங்கினாள் செல்வி.

சற்று யோசித்துவிட்டு, ''சொல்ல மாட்டாள்,'' என்றாள் நந்தினி.

''எப்படிச் சொல்கிறாய்?''

''சிம்பிள். நீ கதிரோடு விலகிப் போனால்தான் மேனகா உன் மாமாவை மணந்து கொள்ள முடியும். அதற்கு இடையூறாகக் கதிர் விஷயத்தை வெளியிட்டு அவரைத் தன்னிடம் இருந்து விலக்க வழி வகுப்பாளா?''

''அதுதானே!'' என்று நிம்மதியடைந்த செல்வி, ''நந்தினி, நீ மட்டும் வரவில்லை என்றால், நான் செத்தே போயிருப்பேன் தெரியுமா?'' என்றாள் நன்றியுடன்.

''பேத்தாம்பிகை!'' என்று சிரித்து, வேறு திசையில் பேச்சை மாற்றினாள் நந்தினி.

இரவு உணவு முடிகிற தறுவாயில், ''இன்று இரவு பேசலாம் என்று முடிவு செய்தோம்,'' என்றாள் மேனகா.

கீர்த்திவாசன் ஒருகணம் செல்வியையும், நந்தினியை யும் கூர்ந்துவிட்டு, ''இல்லையே, பேசலாமா என்று நீதான் கேட்டாய்,'' என்றான் நிதானமாக.

சற்றுத் திணறிவிட்டு, ''எப்படியும் விஷயம் அது தானே?'' என்றாள் மேனகா.

''இல்லை. ஆனால், இரவில் வேண்டாம். கணக்கு வழக்கு களைக் காலையிலேயே பார்க்கலாம்,'' என்றான் கீர்த்தி.

''காலையில் பத்து மணி ஆகும். நான் விழிக்க!'' என்றாள் மேனகா ஆத்திரத்துடன்.

''பரவாயில்லை. வேண்டியவைகளை எழுதி வைத்து விடுகிறேன்... அப்புறம் நீ வந்து பத்து நாளாகி விட்டதே! உன் பெற்றோர் மகளைக் காணவில்லையே என்று கவலைப்படுவார்கள். நாளை கிளம்பிவிடு. கார் அனுப்பு கிறேன். ஏதேனும் விட்டுப்போயிருந்தால் டெலிபோனில் சொல்லி விடுகிறேன்,'' என்று மேற்கொண்டு மறுக்க முடியாமல் முடித்து விட்டான் கீர்த்தி.

மேனகாவின் முகத்தைப் பார்த்துவிட்டு நந்தினியிடம் கண்ணடித்தாள் செல்வி.

முகம் மலர்ந்து விகசிப்பதை மறைக்க, நந்தினி வெகுவாகப் பாடுபட வேண்டியிருந்தது.

நாப்கினால் வாயைத் துடைப்பது போல முகத்தையே பாதி மறைத்துச் சமாளித்தாள்.

வெட்டும் பார்வையும் முணுமுணுப்புமாக மேனகா சென்றபின் மலர்வனத்தில் ஓர்அமைதி நிலவியது - சேறு அமர்ந்த குளம் போல.

குட்டை குழப்ப மேனகா இல்லாமையால் வந்த அமைதி.

மற்றப்படி எந்தவிதப் பிரச்சினையும் தீராமல் அப்படியே நின்றன.



செல்வி - கதிரின் காதல்

கீர்த்திவாசனின் மனநிலை

நந்தினியின் அசட்டு மயக்கம்

எல்லாமேதான்.

மேனகா சென்று மூன்று தினங்களுக்குப் பின், ஒரு நாள் அந்தி மயங்கும் நேரத்தில் கதிரேசனின் சங்கேதக் குரல் கேட்டது.

செல்வி, நந்தினி இருவருமே திடுக்கிட்டுப் போயினர்.

கீர்த்திவாசன் மலர்வனத்தில் இருக்கும் இந்த நேரத் தில் இவன் எப்படி, ஏன் வந்தான்?

மிரட்சியுடன் சுற்றிப் பார்த்துவிட்டு, கீர்த்தி வீட்டில் இருப்பதைக் குறிக்கும் வகையில் எச்சரிக்கைக் குரல் கொடுத்தாள் செல்வி.

ஆனால் கதிர் மீண்டும் மீண்டும் அழைக்கவே, என் னவோ ஏதோ என்று பயந்து போனாள் செல்வி.

''நான் போகிறேன் நந்தினி. மாமா அறியாமல் பார்த்துக் கொள்!'' என்றவள் தோட்டத்தினுள் ஒளிந்து மறைந்து ஓடிவிட்டாள்.

இங்கே தனியாகக் கீர்த்தியின் கண்ணில்பட்டால் நிச்சய மாகச் செல்வி எங்கே என்று கேட்பான்.

ஓசைப்படாமல் அவளது அறைக்குள் சென்று விட லாம் என்றால் செல்லும் வழியில் கீர்த்தியின் ஆபீஸ் அறை இருந்தது. எந்த நேரமும் அங்கிருந்து அவன் வெளி வரலாம்.

யோசித்துவிட்டுப் பக்கவாட்டில் இருந்த நூலகத்துள் பூனை போலப் பதுங்கி நுழைந்து மெல்லக் கதவைச் சாத்தினாள்.

செல்வி வரும்வரை இங்கேயே இருந்துவிட வேண் டியதுதான் என்று திரும்பிய நந்தினி திகைத்துப் போனாள்.

ஒற்றைப் புருவம் உயர, ஊடுருவும் பார்வையுடன் கீர்த்தி நின்றிருந்தான்.

இவன் இங்கே இருக்கக் கூடும் என்று அவள் எதிர் பார்க்கவில்லையே!

தன் பதுங்கலுக்கும் ஒளிவு மறைவுக்கும் என்ன காரணம் சொல்வது?

''பு... த்தகம் எடுக்க வ...ந்தேன்!'' என்று சமாளிக்க முயன்றாள் நந்தினி.

முதல் நாளையப் பொய் அநியாயமாக அவனுக்கு நினைவு வந்து தொலைத்தது.

'செல்வி எங்கே?' என்றான் அவன் சுருக்கமாக.

''தோ... தோட்டத்தில்...'' என்று தொடங்கிய நந்தினி கப்பென அடங்கினாள்.

''தனியாகவா?''

பேந்த விழித்தவளிடம் மீண்டும் ஒரு கூரிய பார் வையைச் செலுத்திவிட்டுக் கதவை நோக்கி நடக்கலா னான் கீர்த்தி.

அவனை நிறுத்த வழி தோன்றாமல், 'கீர்த்தி... நான் ...எனக்கு ஒரு மா...திரியாக...'' என்று மயக்கம் வந்தவள் போல நடித்துச் சரிந்தாள் நந்தினி.

ஓர் எட்டில் நெருங்கி, அவள் கீழே விழுந்து விடாமல் தாங்கிக் கொண்ட அவன் அத்தோடு நிற்கவில்லை.

அவனது வலிய கரங்கள் அவளது உடலோடு உடல் அழுந் துமாறு அவளை இறுக அணைக்கவும் அவள் திணறிப் போனாள்.

இயற்கையான கூச்ச உணர்ச்சியோடு அவள் விலக முயன்றபோது, மேலும் இறுகத் தழுவியபடி, ''ஏன்? இதற்காகத்தானே மயக்கம் வந்தது போல நடித்தாய்?'' என்றான் ஏளனக் குரலில்.

சாட்டையடி பட்டாற் போல உடல் விரைத்தாள் நந்தினி.

இவனது ஓர் அணைப்புக்காக மயக்கம் வந்தாற் போலெல்லாம் நடிப்பார்களாக்கும்!



திமிரைப்பார்! ஆத்திரம் கொடுத்த சக்தியுடன் அவள் மீண்டும் திமிற, தானாகவே அவளை விடுவித்தான் கீர்த்தி.

அவள் கண்களை ஊடுருவியபடி கேட்டான், ''அவன் வந்திருக்கிறானா?'' என்று.



18

சற்று முன் நந்தினி திகைத்தாள் என்றால், இப்போது திகைப்புக் கடலுக்குள் மூழ்கியே விட்டாள் எனலாம்.

செல்வியைப் பாதிக்காதபடி என்ன பதில் சொல்லலாம் என்று தீவிரமாக யோசிக்க முயன்ற போது மூளை மரத்துப் போய் வேலைசெய்ய மறுத்தது.

பேந்த விழித்தவாறு அவள் நிற்கவும், அவனே அவளது தோளைப் பற்றி லேசாகக் குலுக்கி, ''கதிரேசன் வந்திருக் கானா என்று கேட்டேன்,'' என்றான் தெளிவாக.

ஒருவாறு சுதாரித்துக் கொண்டு விலகி நின்றாள் நந்தினி.

எப்படித் தெரியும்? மேனகா சொல்லியே விட்டாளா? சொல்லமாட்டாள் என்று நினைத்தது தப்புக் கணக்காகி விட்டதே! ஆனாலும் ஒரு சின்னப் பெண் மேல் இவ்வளவு வன்மமா? ராட்சசி.

மேனகாவை எண்ணி மனம் கொதிக்க, ''யார் சொன் னது?'' என்று ஆத்திரமாக வினவினாள் நந்தினி.

முகத்தில் கண்டிப்பு ஏற, ''நீ சொல்லியிருக்க வேண் டும்,'' என்றான் கீர்த்தி.

உதட்டைக் கடித்துக் கொண்டு தலை குனிந்தாள் அவள்.

அவள் செல்வியின் காப்பாளன் என்ற நிலையில் சொல்லியிருக்க வேண்டும்தான்.

ஆனால் அவன் நல்லவன் என்று முழுமையாக நம்ப முடியாத நிலையில், தன்னை முழுமையாக நம்பும் ஓர் அனாதைச் சிறுமியின் முதுகில் எப்படிக் குத்தமுடியும்?

ஆனால் குத்துகிறவர்களும் இருக்கிறார்களே!

''மேனகா போல...'' என்று அவள் தொடங்குமுன் இடைமறித்து. ''எனக்கு மேனகா சொல்லவில்லை. யாரும் சொல்லத் தேவையும் இருக்கவில்லை,'' என்றவன் அவளது விரிந்த விழிகளைக் கண்டு, ''நேரமில்லாத நேரத்தில் கோட்டானும் குயிலும் கூவத் தொடங்கினால் கவனிக்கத் தெரியாமல் போய்விடுமா?'' என்று விளக்கினான்.

அவனுக்குத் தெரியாமல் இருப்பதற்காக அவர்கள் சங்கேதக் குரல் கொடுக்க, அந்த சங்கேதமே அவனது சந்தேகத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது.

''ஓ!'' என்றது தவிர, வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை அவளுக்கு.

''ஆமாம். 'ஓ'தான் என்றான் அவன் அசட்டையாக.''

உடனேயே குரலில் கடுமையைக் காட்டி, ''ஆனால் நீ ஏன் சொல்லவில்லை?'' என்று எஜமானனாக விசாரிக்க லானான்.

சற்றுத் தயங்கிவிட்டு, ''தவறான தொடர்பு கூடாது என்றுதானே சொன்னீர்கள்?'' என்றாள் நந்தினி.

''கதிர், செல்விக்கு ரொம்பவும் பொருத்தமான தொடர்பு என்பது உன் எண்ணமா?''

''இ... இல்லைதான். ஆனாலும் தவறு என்ற முத் திரை குத்தவும் காரணம் ஏதும் இல்லையே,'' என்று சற்றுத் துணிவுடனேயே சொன்னாள் அவள்.

''மிகப் பெரிய காரணம் ஒன்று இருக்கிறது நந்தினி. அதுதான் செல்வியின் பணம்.''

தன்னுடைய வாழ்க்கைப் பாட்டைப் பற்றிக்கூட அதிகம் எண்ணாத கதிரின் எளிய முகம் நந்தினியின் நினைவில் வந்தது. என்ன அநியாயமாய்ப் பழி சுமத்துகிறான்!

கீர்த்தியைப் பற்றிய செல்வியின் குற்றச்சாட்டும் மனதில் தோன்ற, ''இந்தக் குற்றச்சாட்டை உங்கள் மீதும்



தான் கூறலாம்,'' என்றாள் பொதுப்படையாகச் சொல்வது போல.

அவன் ஒரு பெருமூச்சு விட்டான். ''கூறலாம் என்ன? செல்வியின் மனதில் அந்த வித்தை ஊன்றியே விட் டார்கள் அவளது உறவினர்கள். ஒரேயடியாக நாசமாகி விடக் கூடாதே என்றுதான் இங்கே போக்குவரவு கூடக் கொஞ்சம் சிரமமான இந்த இடத்துக்குக் கூட்டி வந்தேன். இங்கும் இப்படி ஒரு தொல்லை!'' என்றான் சிறு வெறுப்புடன்.

''தொல்லை என்று நினைத்தால் தடுப்பதுதானே?'' என்றாள் நந்தினி.

சம்பளம் கொடுக்கும் ஒருவனிடம் மிகவும் அதிகப்படி யாகப் பேசுவது புரிந்தபோதும், வந்து விழுந்த வார்த்தை களை அவளால் நிறுத்த முடியவில்லை. நல்லவேளை யாக அவனும் தவறாக எண்ணியதாகத் தெரியவில்லை.

சமநிலையில் இருந்தே பேசினான். ''என்ன பிர யோசனம்? அவன் உள்ளே வர முடியாவிட்டால் இவள் வெளியே போகப் போகிறாள். இந்தப் பெரிய இடத்தில் அது கடினம் அல்லவே. அதோடு அவனுக்குப் பழக்கம் செய்து வைத்து விட்டாள் செல்வி. அடுத்தவன் கையைக் காலை ஒடித்து அனுப்ப நான் என்ன காட்டுமிராண்டியா, என்ன?'' அவள் வெளிப்படையாக அதிர்ந்ததைக் கண்டு காரணம் கேட்டான் அவன்.

செல்வி சொன்னதை இவனிடம் எப்படிச் சொல்வது?

''ஓ... ஒன்றுமில்லை,'' என்று சமாளிக்க முயன்றாள்.

''உன்னுடைய 'ஒன்றுமில்லை'யைப் போலப் பொய் யான வார்த்தை வேறு எதுவும் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் ஒளிவு மறைவு தேவையே இல்லை என்ற எண்ணம் எப்போது வரும் என்றுதான் தெரியவில்லை,'' என்று நிறுத்தினான் கீர்த்தி.

அவளுக்குத்தான் அது தெரியவில்லை.

அவனோடு பேசுகையில் அவன் கூறுவதெல்லாம் மெய்யாகத் தோன்றியது.

ஆனால் அவனுடைய அபிப்பிராயத்தை மட்டும் வைத்து எப்படி முடிவு செய்வது?

அண்ணியை எப்படி நம்பிக் கொண்டிருந்தாள்! கடைசியில் முழு ஏமாற்றமாகி விடவில்லையா?

அண்ணியிடம் பட்ட அடியில் யாரிடமும் நம்பிக்கை வரவில்லையே!

சும்மா சும்மா சந்தேகம்தான் மூக்கை நீட்டுகிறது.

தன்னுடைய பதிலுக்காக அவன் காத்திருப்பது தெரிந்தும், உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள் நந்தினி.

பொறுமை யிழந்த ஒரு வேக மூச்சுடன் அவனே தொடர்ந்தான். ''கொஞ்சமேனும் பயம் இருக்கட்டும் என்று தான் தூரத்திலேயே மணியடித்து என் வருகையைக் குறிப்பாக அறிவித்துவிட்டு வருகிறேன். அவன் இங்கே இருந்தால் நான் உள்ளே வருமுன் ஓடி விட அவனுக்குக் கொடுக்கும் அவகாசம் அது. பொதுவாக நான் வீட்டில் இருக்கும் வேளைகளில் கதிரேசன் வருவது இல்லை. அறியாமல் வந்தாலும் இவளது மறுப்புக் குரலில் திரும்பிப் போய் விடுவான். அதையும் மீறி இன்று பிடிவாதமாக வந்திருக்கிறான் என்றால்...

''ஏதோ நடந்திருக்க வேண்டும்... அவனால் சமாளிக்க முடியாத ஏதோ ஒன்று. இனியேனும் வழியை விடுகிறாயா? போய்ப் பார்க்கலாம். அவர்களால் சமாளிக்க முடியாததை நாமேனும் சீர் செய்ய முயற்சிக்கலாம்.''

'நாமேனும்' என்றால் அவளையும் இணைத்துக் கொள்கிறானே, அந்த மட்டும் நல்லது.



வழி விலகிய நந்தினி கீர்த்தியோடு கொடி வீட்டுக்கு விரைந்தாள்.

அவளுக்கு உள்ளூர இன்னொரு பயமும் வந்திருந்தது. கீர்த்திவாசன் சொல்வது போல, பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் செல்வி எந்த அளவுக்கு அதைத் தாங்குவாள்?

கைகால் உதற அவள் அன்று கிடந்த காட்சி நெஞ்சை நடுக்க, ''மருந்தை எடுத்துக் கொள்ளவா?'' என்றாள் பதட்டத்துடன்.

புரியாதது போலப் புருவத்தைச் சுருக்கிய கீர்த்தி சட்டெனத் தெளிந்து, ''அவசியமிராது. அன்று உட்கொண்டது ஒரு வாரம்... பத்து நாள் வரைகூடத் தாங்கும்,'' என்றான் நடந்தபடியே...

ஆனால் வாயில் அருகே வந்ததும், சற்றுத் தயங்கி, ''நீ முதலில் போ,'' என்று நந்தினியை அனுப்பிவிட்டு, ஆபீஸ் அறைக்குள் சென்றான்.

ஏன் என்ற கேள்வி மனதை உறுத்தியபோதும், நில்லாமல் தோட்டத்தின் பின்புறம் இருந்த கொடி வீட்டை நோக்கி ஓடினாள் நந்தினி.

அங்கே கண்ட காட்சி கலவரமூட்டுவதாக இருந்தது.

ஒரு காலில் இரத்தம் வழியக் களைப்புடன் ஒரு சோபாவில் கிடந்தான் கதிரேசன்.

கண்ணீர் ஆறாகப் பெருகக் காயத்தைத் துடைக்க முயன்று கொண்டிருந்தாள் செல்வி.

''ஷ்... அப்படி இல்லை செல்வி... இங்கே கொடு,'' என்று அவளிடமிருந்து பஞ்சை வாங்கி நீரில் நனைத்துப் பிழிந்து, கதிரேசனுக்கு முதல் உதவி செய்வதில் முனைந்தாள் நந்தினி.

வெளிப்புறமாக மீண்டும் அரவம் கேட்டுத் திரும்பிய செல்வியின் முகம் வெளுத்தது.

அவசரமாய் எழுந்தோடிச் சென்று வழியை மறைத்து நின்று கீர்த்திவாசனை நிறுத்த முயன்றாள்.

வெகு எளிதாக அவளை விலக்கி ஒதுக்கிவிட்டு உள்ளே வந்தான் கீர்த்தி.

அவனைக் கண்டதும் கலக்கத்துடன் எழ முயன்று, முடியாமல் சோர்ந்து போய் மீண்டும் சோபாவில் தொய்ந்தான் கதிரேசன்.

அவனை வெறித்து நோக்கிவிட்டு, ''போலீஸ் தேடி வரும் அளவுக்கு என்ன குற்றம் செய்தாய்?'' கடுமையான குரலில் வினவினான் கீர்த்தி.

கைவேலை நின்றுவிட, திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள் நந்தினி.

''போலீசா?'' என்று வியப்புடன் செல்வி கூற, ''இங்கேயும் வந்துவிட்டார்களா?'' என்று மேலும் தொய்ந்தான் கதிரேசன்.

கதிரேசனுடைய பேச்சின் பொருள் புரியவும் அச்சத்துடன் அவனையும் தன் மாமாவையும் மாறி மாறிப் பார்த்தாள் செல்வி.

எங்கோ தூரத்தில் ஜீப்பின் சத்தம், பூட்ஸ் ஒலி, நாய்களின் குரைப்பு எல்லாம் மங்கலாகக்கேட்டன.

சட்டென ஒருமுடிவுக்கு வந்தவளாகச் செல்வி கீர்த்தியின் அருகில் ஓடினாள்.

அவன் கையைப்பற்றி! ''மாமா! அவரைக் காப்பாற்றுங்கள் மாமா. போலீஸிடமிருந்து அவரைக் காப்பாற்றி விட்டால் நான் உங்களையே கல்யாணம் செய்து கொள்கிறேன் மாமா!'' என்று தணிந்த குரலில் ஒரு தீவிரத்துடன் கெஞ்சினாள்.

''செல்வீ!'' என்று அதட்டினான் கதிரேசன்.

கண்கள் இருளச் சற்று நேரம் செயலற்றுப் போனாள் நந்தினி. கடும் பிரயாசையுடன் சமாளித்துக் கொண்டு, செய்த வேலையை மீண்டும் தொடர்ந்தாள்.

வெகு சன்னமாகக் கேட்ட ஒலிகளை ஒருகணம் கவனித்து விட்டு, ''சத்தியமாய் மாமா!'' என்றாள் செல்வி உறுதியோடு.



கீர்த்தியின் கீழுதடு ஏளனம் போல லேசாகப் பிதுங்கியது.

''உன் மாமன் என்ன சர்வ வல்லமை படைத்த கடவுள் என்றா நினைத்தாய்? இவன் வேறு என்னென்ன தடயங்களை விட்டு வந்திருக்கிறானோ?''

பசையற்ற குரலில் பேசியவன், செல்வியின் விழிகள் மீண்டும் நீர் அருவிகளாக மாறக் கண்டு நிறுத்தினான்.

''சரி, சரி. முதலில் அழுகையை நிறுத்து, முடிந்தவரை பார்க்கலாம்,'' என்றவன் கதிரை ஏற இறங்கப் பார்த்தான்.

பிறகு நந்தினியை அழைத்து, ''இரத்தத்தில் நனைந்த பஞ்சுகளைச் சேர்த்து இடது பக்கக் கையிலும் ஒரு கட்டுப் போடு. காலைப் போலவே கையிலும் காயம் என்று தோன்ற வேண்டும்... அங்கில்லை... முழங்கையை ஒட்டி ...ம்...'' என்று இன்னொரு செந்நிறப் பஞ்சுத் துண்டை எடுத்து கதிரின் இடப்புறத் தோளிலும் கன்னத்திலும் புருவத்தின் மேலாகத் தலையிலும் கூட ஒற்றி இரத்தக் கறையாக்கினான்.

விலகி நின்று பார்த்து அவன் திருப்தி அடையவும், வெளியே பூட்சுகளின் ஓசை பலமாகக் கேட்கலாயிற்று.

''அய்யா!'' என்று முனியன் அழைக்க, ஓர் எச்சரிக்கைப் பார்வையுடன் வெளியேறினான் அவன்.

முனியனோடு வந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் கீர்த்தியிடம் வெகு மரியாதையாகவே பேசினார்.

''ஒரு குற்றவாளி தப்பி ஓடிவிட்டான் சார். உங்கள் எல்லை வரை அவன் வந்த தடையம் தெரிகிறது. இங்கே உள்ளேயும் தேடி விடலாம் என்று வந்தோம். அவன் பயங்கரக் குற்றம் செய்தவன் சார். இங்கே உள்ளே ஒளிந்து இருந்தால் உங்களுக்கும் ஆபத்துதானே சார். ஒரு 'சர்ச்' பார்த்து விடலாமா?'' என்று அனுமதி கேட்டார்.

''ஓ! தாராளமாய். முதலில் இந்தக் கொடி வீட்டிலேயே தொடங்குங்களேன்,'' என்று கீர்த்தியின் குரல் கூறவும் செல்வி மயக்கம் போடாத குறைதான்.

கதிர் ஓய்ந்தே போனான்.

காட்டிக் கொடுப்பதற்கு இவ்வளவு வேலை செய்வா னேன் என்று குழம்பிப் போனாள் நந்தினி.

ஆனால் எதையும் எண்ணிப் பார்க்க, தப்பி ஓட என்று எதற்கும் அவகாசம் தராமல் இன்ஸ்பெக்டரோடு உள்ளே வந்தான் கீர்த்திவாசன்.

உடம்பெல்லாம் இரத்தத்துடன் ஓய்ந்து கிடந்த கதிரைக் கண்டதும் இன்ஸ்பெக்டரின் கண்கள் பளிச்சிட்டன.

மீசையில் கைவைத்துத் தடவியபடி அவனை நெருங்க லானார்.

பொறியில் சிக்கிய முயலைக் கைப்பற்றும் வேட னாகக் காவல் அதிகாரி கதிரை நோக்கிச் சென்றார்.

கால் வலுவிழந்து சோர்ந்த செல்வியை ஆதரவாகப் பற்றியபடி, குற்றம் சாட்டும் விழிகளால் கீர்த்தியை உறுத் தாள் நந்தினி.

கீர்த்தியின் முகத்தில் சிறு ஏமாற்றம் தோன்றி, உடனே மறைந்தது.

இன்ஸ்பெக்டருடன் நடந்தபடி, ''நீங்கள் கொஞ்சம் சீக்கிரமாகப் பார்த்து முடிக்க வேண்டும் இன்ஸ்பெக்டர், இன்னும் இவனை டாக்டரிடம் அழைத்துப் போகும் வேலை வேறு எனக்கு இருக்கிறது!'' என்றான் அலுப்பும் எரிச்சலுமான குரலில் அவன்.

இன்ஸ்பெக்டரின் உறுதியான நடை சற்றே தேங்கியது.

கீர்த்திவாசன் டாக்டரிடம் அழைத்துப் போக ஆள் வேண்டுமானால் இவர் யாரைக் கைது செய்வது!

சந்தேகத்துடன், ''இவன்... இவர் யார் சார்? இங்கே... எப்போது இங்கே வந்தார்?'' என்றுவிசாரித்தார்.

நந்தினியின் வியந்த பார்வைக்குக் கீர்த்தியின் உயரம் அதிகமாகிவிட்டாற் போலவும், அவன் தோள்களின் அக லம் அதிகமாகி விட்டாற் போலவும் ஏனோ தோன்றியது.



புருவங்களை உயர்த்தியபடி, ''இங்கே, இந்தக் கொடி வீட்டுக்கு என்றால்... இங்கே வந்து சில மணி நேரங்களே ஆகியிருக்க வேண்டும். 'இங்கே என்பது மலர்வனம் என்றால் வந்து மூன்று தினங்கள் ஆகின்றன. ஊம், ஊரிலிருந்து வந்த பிள்ளை உருப்படியாகப் போய் வர வேண்டும் என்ற கவலையாக இருக்கிறது!'' என்று கோபத்தில் தொடங்கி வருத்தத்தில் முடித்தான் கீர்த்தி.

மீண்டும் கதிரின் கால் பார்வையைக் கவ்வி இழுக்க, ''இந்தக் காயம்... இது எப்படி ஏற்பட்டது சார்? இவ்வளவு ரத்தத்துக்கு டாக்டரை அழைக்காமல்... வேறே வேலையாட்களைக் கூட வரவழைக்காமல்...'' என்று இழுத்தார் இன்ஸ்பெக்டர்.

''வேறென்ன செய்வார்கள், பாவம்!'' என்று ஆத்திரச் சிரிப்புச் சிரித்தான் கீர்த்தி. ''கூடவே கூடாது என்று ஆயிரம் தடவை சொல்லியிருப்பேன் இன்ஸ்பெக்டர். என் சொல்லை மீறி என் கண் மறைவில் இந்தப் பெண்களுக்கு ஜீப் ஓட்டக் கற்றுக் கொடுக்கிறானாம். அதில் இடது பக்க டிரைவ் வேறு. எந்தப் பக்கம் எவ்வளவு ஒதுங்கிப் போவது என்ற அளவு புரியாமல் இவனையே இடித்துப் போட்டிருக்கிறார்கள்.

''இப்போதும் எனக்குத் தெரியாமலே வேலை செய் கிறார்களாம். அந்தப் பக்கம் ஜீப்பைக் கழுவித் துடைத் தாயிற்று. இங்கே காயம் கட்டுப் போட்டாகிறது. டாக் டரையோ வேலையாட்களையோ அழைத்தால் என் னிடம் சொல்லி விடுவார்கள் என்று தனியாகவே ஒளித்து மறைத்து வேலை நடக்கிறது.''

மாமன் சொல்லும் தடம் ஒருவாறு புரிய, விழிகளைக் கொட்டைப் பாக்காய் விரித்து நிமிர்ந்தாள் செல்வி.

ஆதரவாக அவளை அணைத்து நிற்கும் பாவனையில் அவள் தலையைச் சற்றே அழுத்தித் தலைகுனிந்து நிற்க வைத்தபடி நந்தினி தானும் தரையிலேயே பார்வையை நிறுத்தினாள்.

''காலில் சீழ்ப்பிடித்துக் காலையே எடுக்க நேர்ந்தால் என்ன ஆகும்? இந்தமாதிரி மூளை கெட்ட மட்டிகளோடு போராட வேண்டும் என்பது என் தலைவிதி. சொல்லத் தொடங்கினால் ஒன்றா இரண்டா! அன்றைக்குப் பாருங் கள். சே... என் கஷ்டம் என்னோடு. அதையெல்லாம் சொல்லி உங்களுடைய பொன்னான நேரத்தை வீணடிப் பது தவறு. அதை விடுங்கள்.. ஆமாம் உங்களுடைய ஆள் எப்படியிருப்பான்? சொன்னீர்களானால் நானும் ஆட்களை அனுப்பித் தேடச் சொல்வேன்,'' என்று முடித்தான் கீர்த்தி.

''ஆள் கிட்டத்தட்ட இந்த சைஸ்தான் சார்... நல்ல கருகருவென்று தாடியும் மீசையுமாய்.. அடேடே இவர் முகத்தில் இரண்டும் இல்லையே சார். காலம்போகிற போக்கு சார். வெள்ளாம்பியில் ஒரு மிராசைக் கொலை செய்து, ஒரு லகரம் தேறும் என்கிறார்கள், கொள்ளையும் அடித்துவிட்டு ஓடியிருக்கிறார்கள். மூன்று பேர் கூட்டு, அதில் ஒருத்தன் காலில் குண்டுக் காயத்தோடு ஓடிவிட் டான். அவனைத்தான் தொடர்ந்து வந்ததில்...'' மீண்டும் இன்ஸ்பெக்டரின் பார்வை கதிரின் காலில் ஓர் இரக்கத் துடன் படிந்தது.

'இங்கே வரை வந்ததாகச் சொல்லுகிறீர்கள். உள்ளே வந்தால் என் நாய்கள் குதறிவிடுமே. வர விட்டிருக் காதே...'

''ஆமாமாம் சார். பயங்கரமான வேட்டை நாய்கள்!'' என்று கண்களையும் தலையையும் உருட்டினார் அவர். ''முனியன் ஒருவனால் லேசில் சமாளிக்க முடியவில்லை சார். அவன் அவைகளைப் பிடித்துக் கட்டுமுன் ஜீப்பில் இருந்து இறங்க எல்லோருக்குமே யோசனைதான். ஒரு பத்து நிமிடம் அவைகளோடு போராடித்தான் கட்டினான். நல்ல வீரமான நாய்கள்!'' என்று சிலாகித்தார்.



காலையில் கீர்த்தியோடு வாக்கிங் சென்றபின், பகல் முழுவதும் கட்டிக் கிடக்கும் நாய்கள் போலீசை எப்படித் தடுத்தன?

அவைகளை அவிழ்த்து விடச் செய்வதற்குத்தான் கீர்த்தி தாமதித்தானா?

நந்தினியின் மதிப்பில் கீர்த்தி மடமடவென்று பல படிகள் ஏறினான்.

''ம். அன்னியர் வாடையை அரை கிலோ மீட்டர் தூரத்திலேயே கண்டு விடும்...'' என்று தன் முகவாயைத் தடவி இன்னும் இரண்டு படிகள் ஏறினான் கீர்த்தி.

''ஆமாம், ஆமாம். உங்கள் நாய்கள் இருக்கும் போது உள்ளே தேட வந்ததே அவசியம் இல்லைதான். ஆனால் உங்கள் எல்லை வரை அவன் வந்த அடையாளம் தெரிகிறதே...''

''இன்ஸ்பெக்டர், ஒரு யோசனை. வெளியே முழு வதும் காடு. வந்தவன் எப்படியோ சிரமப்பட்டு மரத்தில் ஏறி விட்டால் பிறகு தொத்தித் தொத்தி வெகுதூரம் போய் விடலாமே.. ஒரேயடியாகத் தப்பி ஓடிவிடுமுன் வெளியே போய்த் தேடினால் பிரயோசனமாய் இராதா?'' என்று கன அக்கறையோடு ஆலோசனை கூறினான் கீர்த்தி.

''ஆ...மாம், சார். நீங்க சொன்னதுபோல அவன் மரங் களில்தான் தாவி இருக்க வேண்டும். இங்கே வந்து உங் களைத் தொல்லை செய்ததற்கு மன்னியுங்கள் சார். நாங்கள் வருகிறோம். நீங்கள் உங்கள் கஷ்... வந்து வேலையைப் பாருங்கள்,'' என்று கதிரை மீண்டும் ஒரு தரம் பார்த்து விட்டுப் பரிவாரம் புடைசூழச் சென்றார் இன்ஸ்பெக்டர்.

ஜீப் ஓசை தேய்ந்து மறைந்தது. ''சே! என்ன போலீஸ் காரர்கள்! யாரோ தாடிக்காரனைத் துரத்தி வந்தவர்கள் அனாவசியமாய் இங்கே வந்து கலங்க அடித்து விட் டார்களே!'' என்று எரிச்சலோடு மொழிந்தாள் செல்வி.

அவளது பேச்சுக்குக் கதிர் பதிலே சொல்லவில்லை. கீர்த்தியும் அவள் பேச்சைக் காதில் வாங்கினாற் போலத் தெரியவில்லை.

அவனது ஈட்டிப் பார்வை கதிரின் பார்வையைக் கவ்வி நின்றது.

சில கணங்களுக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாமல் தலை குனிந்தான் கதிரேசன்.

''எங்கே?'' என்றான் கீர்த்தி சுருக்கமாக.

மேலும் சற்றுத் தயங்கிவிட்டு வலப்புறப் பாண்ட் பாக்கெட்டில் இருந்து எதையோ எடுத்து டீபாய் மேல் வைத்தான் கதிர்.

அவை ஒரு செட் ஒட்டு மீசை தாடி.

''முட்டாள்! இவைகளை உன்னிடமிருந்து அந்த இன்ஸ்பெக்டர் கைப்பற்றியிருந்தால் அந்த எமதர்மனே மனம் இரங்கினால் கூட உன்னைக் காப்பாற்றியிருக்க முடியாதே. இதை எறிந்து விடும் புத்திகூட இல்லையா?'' என்று சீறினான் கீர்த்தி.

''ஓடி வந்ததில் அதற்கு அவகாசமே கிடைக்கவில்லை,'' என்று முணுமுணுத்தான் கதிர்.

ஆனால் கீர்த்தியின் சீறலையோ, கதிரின் சமாளிப்பையோ செல்வி கவனிக்கவே இல்லை.

பிரமிப்புடன் மீசை தாடியை வெறித்தவள், ''அப்படியானால் கதிர், நீங்கள் கொலைகாரனா? கொள்ளை அடித்தீர்களா?'' என்றாள் விரும்பாத குரலில்.

''இல்லை செல்வி. இல்லை,'' என்று வன்மையாக மறுத்தான் கதிரேசன். ''நம்பு செல்வி, நான் கொலை செய்யவோ கொள்ளை அடிக்கவோ இல்லை. சத்தியமாக இல்லை.''

''சத்தியமாகவா? 'சத்தியம்' என்கிற பெரிய வார்த்தை எவ்வளவு சுலபமாக உங்கள் வாயில் விளையாடுகிறது!'' என்றான் கீர்த்தி அசட்டையாக.



அவனது ஏளனப் பார்வை கதிரிடமிருந்து செல்வியிடம் பாய்ந்தது.

வெளுத்திருந்த முகம் சிவக்க விரைப்புடன் நிமிர்ந்தாள் செல்வி... ''நான் ஒன்றும் பொய்யாகச் சத்தியம் செய்யவில்லை,'' என்றாள் ஆத்திரத்துடன். ''நீங்கள் சொல்கிற தினத்தில் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ள நான் தயார்!'' என்று உறுதியான குரலில் அறிவித்தாள்.



## 19

செல்வியின் அறிவிப்பு நந்தினியின் நெஞ்சில் அனலைக் கொட்டியது.

ஆனால், அவளைப் போலவே பாதிக்கப்பட்ட வேறு ஒருவனும் இருந்தான்.

''உளறாதே செல்வி!'' என்று செல்வியை அதட்டினான் அவன் - கதிரேசன்.

உதடுகளை அழுந்த மூடிச்சிலையாக நின்றாள் செல்வி.

''என்னைக் காப்பாற்றுவதற்காக இவ்வளவு பெரிய தியாகம் நீ செய்ய வேண்டியது இல்லை. இதைவிட நான் போலீசில் சரணடைந்து விடுவதே மேல்!'' என்றான் அவன் தொடர்ந்து.

இன்னமும் செல்வி இளகாமல் நிற்கவும், ''ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பார்கள். அவசரப்படாமல் யோசித்து நல்ல முடிவுக்கு வா செல்வி,'' என்றாள் நந்தினி.

ஓர் ஏளனப் பார்வையுடன் கவனித்துக்கொண்டு இருந்த கீர்த்தி, ''எல்லோருமாக என்னை மிகவும் உயர்த்திப் பேசி விட்டீர்கள், நன்றி!'' என்று கேலியாகத் தலையைத் தாழ்த்தினான்.

அவனை மணப்பது தியாகம், நல்ல முடிவு அல்ல என்றால், அவனை மட்டம் தட்டுவது போலத்தானே.

அவன் கேலி பேசவும் நந்தினிக்கு முகம் சிவந்து போயிற்று.

ஏதோ பேச வாய் திறந்த கதிரேசனை அலட்சியம் செய்து செல்வியிடம் திரும்பினான் கீர்த்தி. "செல்வி! ஒரு பெண்ணை, அவளுடைய காதலனின் கழுத்தில் கத்தியை வைத்துத்தான் மணந்தாக வேண்டும் என்ற கட்டாயம் எனக்கு இல்லை. ஆனால் உன் தேர்வு சரியானதுதானா என்று கணிக்கும் பொறுப்பும், அது சரியில்லை என்றால் விலக்கி வேறு வழி அமைத்துக் கொடுக்கும் கடமையும் எனக்கு இருக்கின்றன. அதன் குறுக்கே வர உனக்கு மட்டுமல்ல, எனக்கும்கூட நான் இடம் தரப் போவது இல்லை," என்றான் ஓர் அழுத்தத்துடன்.

திகைப்புடன் நிமிர்ந்த நந்தினியின் பார்வையை அவன் பார்வை சில கணங்கள் கவ்வி நின்றது.

அவனது பேச்சில் தனக்கும் ஏதோ சேதி இருந்தது நந்தினிக்கும் புரிந்தது.

என்னவென்று அவள் யோசிக்கையிலேயே அவன் கதிரிடம் திரும்பி விட்டான்.

கதிரின் கட்டுகளை அவிழ்த்துக் காயத்தை நன்கு பரிசோதித்தான். காலை அசைத்து, அசைக்கச் சொல்லிப் பார்த்தான். பிறகு மீண்டும் இரத்தக் கசிவை நிறுத்திக் கட்டுப் போட்டுவிட்டுச் சொன்னான். "இதோ பார். உன் கால் எலும்பு சேதம் இல்லாவிட்டாலும் குண்டு கால் சதைக்குள் இருக்கிறது. இங்கே சுற்று வட்டாரத்தில் உள்ள மூன்று டாக்டர்களில் யாரிடம் போனாலும் விஷயம் பரவி விடக்கூடும். இன்ஸ்பெக்டருக்கு ஏற்கனவே சந்தேகம் இருப்பதால் அது ஆபத்தாக முடியலாம். ஆனால் கொஞ்சம் வலியைச் சகித்துக் கொண்டு கோவை சென்றுவிட்டால் அங்கே மிகவும் வேண்டிய டாக்டர்கள் இருக்கிறார்கள். நம் வீட்டில் வைத்தே



சிகிச்சையை முடித்துக் கொள்ளலாம். போலீஸ் பயம் இராது. என்ன சொல்கிறாய்?" என்று கதிரிடம் கேட்டான்.

அப்போதைக்குக் காப்பாற்றியிருந்த போதும், கீர்த்தியிடம் நம்பிக்கை பிறக்காத நிலையில், ஆனால் வேறு விதமாய் எதுவும் செய்யவும் முடியாததால், கதிர் செல்வியின் முகத்தைப் பார்த்தான்.

"நீங்கள் சொல்கிற மாதிரி கோவைக்கே போய் விடலாம் மாமா," என்றாள் பளிச்சென்று. கூடவே, "ஆனால் அதுவரைக்கும் இந்தக் காயத்தால் ஆபத்து ஒன்றும் இல்லையே அங்கிள்?" என்று கவலையுடன் கேட்டாள்.

"இல்லை," என்றுகீர்த்தி சொன்ன ஒருவார்த்தையில் சமாதானம் ஆகியும் விட்டாள்.

"எல்லோரும் போகலாம். வேண்டியதை எடுத்து வையுங்கள்," என்று கீர்த்தி கூறவும், அவளுக்கு உற்சாகம் பிறந்து விட்டது.

"அங்கே ஷாப்பிங் செய்யலாம். சினிமா பார்க்கலாம் ...ம் அங்கிள், இப்போதுதானே அங்கே விளையாட்டுப் போட்டிகள் நடக்கும் சமயம்? நந்தினி! அதெல்லாம் கூட்டப் பார்க்கலாம்..." என்று திட்டமிடவும் தொடங்கி விட்டாள் செல்வி.

பதில் சொல்லாமல் நின்றாள் நந்தினி.

அவளுக்கு இந்த கோவைப் பயணம் அடியோடு பிடிக்கவில்லை.

கோவையில் மட்டும் கதிருக்கு ஆபத்து வராது என்று என்ன நிச்சயம்?

கோவை என்ன இருண்ட கண்டத்திலா இருக்கிறது?

இதெல்லாம் ஒருபுறம் இருக்க, ஊரில் மேனகா வேறு இருக்கிறாளே.

அவள் மலர் வனத்தில் இருந்தபோது அனுபவித்த மன வேதனை நினைவு வரவும், கோவை செல்லும் எண்ணமே வெறுப்பை அளித்தது.

எண்ணத்தைக் கண் காட்டி விட்டதா?

யோசனையாக நின்றவளைப் பார்த்துக் கேலியும் கேள்வியுமாக ஒற்றைப் புருவத்தை உயர்த்தினான் கீர்த்தி.

எஜமானனாக நின்று அவன் உத்தரவு இடுகையில், அதுபற்றிச் சிந்திப்பதற்குக் கூட அவள் யார்?

செல்விக்குத் துணையாக வேலை செய்ய வந்தவள், செல்வி செல்லும் இடத்திற்கெல்லாம் துணை செல்ல வேண்டியவள்தானே.

கீர்த்தியின் கேலிப் பார்வையைக் கவனியாதவள் போல, ''வா செல்வி. கொண்டு செல்ல வேண்டியவை களை எல்லாம் எடுத்து வைக்கலாம்,'' என்று வேகமாக அங்கிருந்து அகன்று சென்றாள்.

அலுங்காமல் நலுங்காமல், கீர்த்திவாசனே காரை ஓட்டிச் சென்றபோதும், பயணத்தில் கதிரேசன் வெகுவாகக் களைத்துத்தான் போனான்.

ஆனாலும் கோவையில் கீர்த்தியின் ஏற்பாட்டின்படி அவனது வீட்டில் தயாராகக் காத்திருந்த டாக்டர் உடனடியாகச் சிகிச்சையைத் தொடங்கி விடவே, எந்த விதமான ஆபத்தும் இல்லாது போயிற்று.

கதிர் விரைவாகக் குணமடையலானான்.

செல்வி சிட்டுக்குருவியெனப் பறந்தாள்.

ஆனால் நந்தினிக்குக் கொஞ்சம் யோசனைதான்.

''இன்னமும் மிஸ்டர் கதிரோடு உன் திருமணத்துக்கு உன் அங்கிள் சம்மதித்து விடவில்லை செல்வி,'' என்று அவளுக்கு நினைவுபடுத்தினாள்.

கலீரெனச் சிரித்தாள் செல்வி. ''கீர்த்தி அங்கிள் சொல்லாமல் சொல்கிறார் நந்தினி. இல்லாவிட்டால் கதிருக்கு இவ்வளவு பணம் செலவு செய்து ஸ்பெஷல் சிகிச்சை செய்வாரா? அதோடு என் தேர்வு சரியானதாக இருந்தால் மறுக்கப் போவது இல்லை என்று அன்றே அங்கிள் சொல்லவில்லையா? கதிரை விட உயர்ந்த மனிதர் உலகத்தில் எத்தனை பேர் இருக்கக் கூடும்?'' என்றாள் செல்வி பெருமிதமாக.



எத்தனை பேர் இருக்கக் கூடும் என்ற தன் கணக்கீட்டை மனதோடேயே வைத்துக் கொண்டாள்.

ஆனால் சிகிச்சை விஷயமாகச் செல்வி சொன்னது அவளையும் சிந்திக்க வைத்தது.

செல்வியைப் பொறுத்தவரையிலும் சந்தேகமும் இல்லை; சிந்தனையும் இல்லை.

முடிந்த அளவு நேரத்தைக் கதிரேசனின் அறையி லேயே கழித்தாள்.

உணவு வேளைகளில்கூட பெரும்பான்மை வேளை களில் உணவை டிரேயில் எடுத்துக் கொண்டு அங்கேயே போய்விடுவாள்.

இதுபோன்ற சமயங்களில் கீர்த்தியோடு நந்தினி தனித்தே உண்ணுமாறு நேர்ந்தது.

கீர்த்தியின் லேசான கேலி இழையோடும் பேச்சும் உலக அனுபவமும் இத்தகைய சமயங்களை அவள் ஆவலோடு எதிர்நோக்குமாறு செய்தன.

ஒருநாள், ''இன்னும் செல்வி வரவில்லையா? ம்... சில பேர் நிரம்பவும் கொடுத்து வைத்தவர்கள். இருக்கும் இடம் தேடி வசதிகள், பணிபுரிய அழகான பெண்... ஊம்...'' என்று பெருமூச்சு விட்டபடி அமர்ந்தான் அவன்.

''அதெல்லாம் கிடைக்க வேண்டுமானால் நீங்களும் குண்டடி பட்டுக் கொள்ள வேண்டுமாக்கும்!'' என்று சிரியாமல் சொன்னாள் நந்தினி.

''ஓ, செய்யலாமே! ஆனால் எனக்குப் பணிபுரியும் அழகான பெண்ணாக நீ வருவாயா?'' பழைய கேலிக் குரலிலேயே கேட்டான் கீர்த்தி.

''எனக்கு என்ன தலையெழுத்து, அப்படிப் பணி புரிய!'' என்றுகேலி போலவே அவளும் பதில் சொன்ன போதும், உள்ளூர மனது ஏங்கிப் போயிற்று நந்தினிக்கு.

அவனுக்குப் பணிபுரியக் கொடுத்தல்லவா வைத் திருக்க வேண்டும்?

சோகம் போல ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, ''அது தானே பார்த்தேன். நமக்கேது அந்த மாதிரி அதிர்ஷ்டம் எல்லாம்? நோயாளி இன்றைக்கு எப்படி இருக்கிறார்?'' என்று விசாரித்தான் கீர்த்தி.

வெளியே விசாரிப்பது தவிர, அவன் கதிர் அறைக்குள் அநேகமாகச் சென்றதே இல்லை என்பது அவளுக்கு நினைவு வந்தது.

''ரொம்ப முன்னேற்றம், காயம்பட்ட காலை ஊன்ற முடியவில்லையே தவிர மற்றப்படி எல்லாம் நார்மல். காய மும் விரைவிலேயே ஆறிவிடும் என்கிறார் டாக்டர். ஆனால், கதிருக்கு இவ்வளவு உதவி செய்வீர்கள் என்று நான் நினைக்கவேயில்லை,'' என்று தொடங்கினாள் நந்தினி.

''காயம்பட்டுச் சக்தியற்றுக் கிடப்பவனை விரட்டி அடிக் கும் கொடிய அரக்கன் என்று எண்ணியிருப்பாய்!'' என்று கிண்டலான பதில் வந்தது.

''சேச்சே, அப்படியில்லை,'' என்று அவசரமாக மறுத்து விட்டு, ''ஆனால், செல்விக்கு இணங்கிவிட்டீர்களே என்று தான் தோன்றிற்று,'' என்றாள் நந்தினி.

விட்டேற்றியாகப் பேச முயன்றாலும், அவளது ஆர்வம் புரிந்துவிட, லேசாக முறுவல் செய்தான் கீர்த்தி.

உடனே சீரியசாகி, ''அது எளிதல்ல நந்தினி. நிறைய விஷயங்களைப் பார்க்க வேண்டும். முக்கியமாக இவன் செல்வியின் பணத்துக்காக வந்தவன் இல்லை என்று என்ன நிச்சயம்?''என்று கேட்டான்.

''பணக்காரர்கள் எவ்வளவு பரிதாபத்துக்கு உரிய வர்கள் என்பது இப்போது தெரிகிறது. பாவம்! ஒருவரை யும் நம்ப முடியவில்லையே!'' என்றாள் நந்தினி துடுக்காக.



''அது கஷ்டம்தான்; ஆனால், பணத்தால் கிடைக்கக் கூடிய மற்ற வசதிகளைப் பார்க்கையில் வாழ்க்கைத் தரா சில் பணத்தட்டு தாழ்ந்து விடுகிறது.''

''ஆனால், யாரையும் நம்ப முடியாமல் அந்த வாழ்க்கை வாழ்வதில் என்ன பயன்?''

''அப்படி ஒரேயடியாகச் சொல்வதற்கு இல்லையே.''

''பின்னே கதிரேசனை நம்புங்களேன்!'' என்று மடக்கினாள் நந்தினி.

பதில் சொல்லாமல் உணவில் ஈடுபட்டான் கீர்த்தி.

பதில் பேச முடியாமல் அவனை மடக்கிவிட்ட கர்வம் ஏற்பட்ட போதும், கதிரேசனுக்கு அவன் ஒப்புதல் அளிக்க வில்லையே என்ற வருத்தமே அதிகமாக இருந்தது நந்தினிக்கு.

இதற்குச் சுயநலம் எத்தனை சதவிகிதம் காரணமாக இருக்கக் கூடும் என்ற கேள்வி மனதில் தோன்றவும், அவமானமாய் இருந்தது.

மேலே பேச முடியாமல் அவளும் மவுனமாகவே உணவு அருந்தினாள்.

உணவு முடிந்து முன்னறைக்குச் சென்றான். கீர்த்தியே தொடங்கினான். ''ஒருவரை நம்புவது அதுவும் முழுமை யாக நம்புவது அவ்வளவு எளிது அல்ல!'' என்று முன்பு விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

''அது உண்மைதான். ஆனால், கதிர்... மற்ற வகையில் உயர்வாகச் சொல்வதற்கு இல்லை என்றாலும், செல்வியை அவளுக்காகவே நேசிப்பவன் ஆயிற்றே.''

''காதல் என்று வந்த ஒருவன் பொய்த்துப் போனானே!'' என்றான் கீர்த்தி வெறுப்பாக.

''என்னது?''

''ஆமாம். அப்படித்தான் நடந்தது நந்தினி. என் சகோதரிக்கு வீடு நிறைய உறவினர்கள்.''

''உங்களுக்கும் அவர்கள் உறவுதானே!''

''இல்லை இல்லை. செல்வியுடைய தாயார் என் உடன் பிறந்தவள் அல்ல. ஒன்றுவிட்ட உறவுதான். ஆனால் சிறுவயதிலிருந்து அங்கேயே கிடப்பேன். பாசத்தின் மறு உரு அவளாயிற்றே. அவள் தன் வீட்டில் வைத்துச் சோறு போட்ட அத்தனை பேரும் அவளுக்காக உயிரை விடத் தயாராக இருப்பதுபோலத்தான் காட்டிக் கொண்டார்கள்.

''ஆனால் அந்த விபத்தில் யாரும் பிழைக்கப் போவது இல்லை என்ற சேதி கிடைத்ததும் எல்லாரும் எப்படி நடந்து கொண்டார்கள் தெரியுமா? அவர்கள் கடிகாரத்தைக் கூடப் பெட்டிக்குள் ஒளித்து வைக்க முயன்றார்கள். ஒரு கடிகாரத்துக்கே இந்தக் கதி என்றால் எத்தனை சாமான்கள்!''

''என் அக்கா புத்திசாலியும் கூட, நந்தினி. தன்னை வந்து பார்த்தவர்கள் அவர்கள் நடந்து கொண்ட விதம் எல்லாவற்றிலும் உண்மையை ஊகித்துக் கொண்டாள். ஆனால் அவளுடைய கவலை இதிலெல்லாம் இல்லை.

''விபத்தில் அத்தான் முதலிலேயே போய்விட, இவள் மட்டும் வதைத்துக் கொண்டே கிடந்தது, செல்வியைப் பற்றிய கவலையால் மட்டும்தான். அப்போதைக்கு நிச்சயிக்கப் பட்டிருந்த எதிர்காலமாகச் செல்வியின் எதிர்காலம் இருந்த போதிலும்கூட அதிலும் அக்காவுக்குச் சந்தேகம் தோன்றிவிட்டது.''

''நிச்சயிக்கப்பட்டதா?'' என்றாள் நந்தினி ஆச்சரியத்துடன்.

''ம். மில்லில் அத்தானுக்கு அடுத்த பங்குதாரரின் மகன். அவன் செல்வியிடம் பித்தாகி விட்டதாகவும் இவள் இல்லை என்று ஆனால் உயிரை விட்டு விடுவான் என்றும் கதை விட்டான். பையன் நன்றாக இருப்பான். செல்விக்கு உரிய வயது வந்ததும் அவனுக்கே திருமணம் செய்யலாம் என்று அத்தானும் சம்மதித்து விட்டார்...''

''செல்விக்குத் தெரியுமா?''



''நல்ல வேளையாக இல்லை. சின்னப் பெண், பதினெட்டு வயது ஆன பிறகு சொல்லிக் கொள்ளலாம் என்று இருந்து விட்டார்கள்.''

''அப்புறம்?''

''செல்வி இந்த அளவு மீளக்கூடும் என்ற நம்பிக்கை கூட அப்போது இல்லையே. அவளை ஆதரவாகப் பார்த்துக் கொள்ளும் ஒரு இடம் நிச்சயம் என்ற நம்பிக்கை யோடு சாக விரும்பினாள் அக்கா. அதை உறுதிப்படுத்திக் கொள்ள என்னை அனுப்பினாள்.''

அவனது கை முஷ்டிகள் இறுகி, உடல் விரைப்புடன் நிமிர்வதைச் சிறு அச்சத்துடன் கண்டாள் நந்தினி.

''பிறகு?'' என்றாள் மெல்லிய குரலில்.

''பிறகென்ன? அத்தானுடைய ஷேர்களை வாங்குவதில் பெரும் அக்கறை காட்டிய அந்தப் பெரிய மனிதருக்குச் செல்வி என்ற ஒரு பெண் இருந்ததே மறந்து போயிற்று. அதற்குள்ளாக மகனுக்கு இன்னொரு பணக் காரச் சம்பந்தம் பிடித்திருந்தாரே! மகனோ, அவன் தந்தையை நல்லவராக்கிக் காட்டினான். செல்வியை அவன் கைவிடப் போவது இல்லையாம். முதல் திருமணம் முடிந்து சில நாளில் இவளையும் ஏதாவது ஒரு வகையில் ஏற்று ஆதரிக்க நினைத்திருக்கிறானாம். என்ன வகை தெரியுமா? பிளாக்கார்ட், அவன் பல்லை உடைக்காமல் எப்படித் திரும்பினேன் என்று எனக்கே ஆச்சரியம்.''

''ஓ!'' பிரமித்துப் போனாள் நந்தினி.

இப்படிக்கூட மனிதர்கள் இருப்பார்களா?

''ஆனால் எனக்குப் புரியவில்லையே, செல்வியின் பணம் அப்படியேதானே இருந்தது. அவர்களுக்கு வேண்டியது பணம் என்றால் எப்போதும் செல்வியை நிராகரிக்க வேண்டியது இல்லையே...

''ஆனால் ஒரே மகளுக்கென்று மேலும் மேலும் லட்ச லட்சமாய்ச் சம்பாதித்துக் கொட்ட அவளுடைய அப்பா

இல்லையே. அப்படி இருக்கும் இன்னொரு இடம் கிடைக்கையில், எந்த அளவுக்கு ஆரோக்கியம் திரும்பக் கூடும் என்ற நிச்சயம் கூட இல்லாத நிலையில் உள்ள இவள் எதற்கு?'' என்று ஆத்திரத்துடன் நகைத்தான் அவன்.

மீண்டும் ஓர் ''ஓ'' தவிர வார்த்தை வரவில்லை நந்தினிக்கு.

அவன் தொடர்ந்தான். ''திரும்பி வந்து அக்காவிடம் என்ன சொல்வது? ஆனால் அவள்தான் புத்திசாலி ஆயிற்றே. சொல்லத் தேவையும் இருக்கவில்லை. என் முகத்திலிருந்தே ஊகித்துக் கொண்டாள். என்னிடம், 'அவருக்குப் பிறகு வாழ எனக்கு மனமும் இல்லையடா. உன் தலையில்தான் பெரிய பொறுப்பைச் சுமத்திவிட்டுப் போகிறேன். செல்வி பிழைத்தால் அவளை மகிழ்ச்சியோடு வாழ வைப்பது உன் பொறுப்பு!' என்றவள், வீடு சொத்து என்ற மற்ற பொறுப்புகளையும் ஒப்படைத்து விட்டு ...ச்... அவள் மறுநாளைக் காணவில்லை. எப்படியோ செல்வி பிழைத்துக் கொண்டாள். ஆனால், அக்காவுக்காக அழக்கூட நேரம் இல்லாமல் ஊரில் இருந்த அத்தனை உறவு ஓநாய்களுடன் போராடி, விரட்டியடித்து, சொத்து பத்துக்களைக் காப்பாற்றித் திரும்புமுன் ஒரு மாதம் பறந்து விட்டது... நரகமாயிருந்த ஒரு மாதம்...''

பார்வையில் தீவிரத்துடன் குறியற்று வெறித்தபடி அவன் சொல்லிவர, நந்தினி துணுக்குற்றாள்.

செல்வியை எட்டிக்கூடப் பாராமல் அவன் உல்லாசம் தேடி ஊர் சுற்றியதாகப் பானு கூறிய அந்த ஒரு மாதம்.

ஒருவரைத் தவறாக மதிப்பிடுவது எவ்வளவு எளிது! பாவம்!

அவனது கைகளைப்பற்றி நெஞ்சத்தோடு அணைத்து நெற்றியை வருடி ஆறுதல் சொல்ல வேண்டும் என்று தீவிரமாய் எழுந்த உந்துதலை வெகு சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.



பொன்னுக்குரிய இடத்தில் பூ வைப்பதுபோல், 'கீர்த்தி!' என்று மட்டும் பரிவாக அழைத்தாள்.

திடுக்கிட்டாற் போலத் திரும்பி அவளது விழிகளைச் சந்தித்த கீர்த்தி முரட்டுத்தனமாக அவளைப் பற்றி எழுப்பினான்.

திகைப்புடன் நிமிர்ந்த அவளை, எலும்பை உடைத்து விடுகிறவன்போல இறுக அணைத்துக் குனிந்து முத்தமிட்டு விட்டு அவள் மேலும் திகைத்த போதே, சட்டென அவளை விடுவித்து விலகி விரைந்து சென்று விட்டான்.

மறுநாள் கதிருடைய அறைக்கு விஜயம் செய்தான் கீர்த்தி.

செல்லும் முன்னதாகத் தன் அறையில் தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருந்த நந்தினியை அழைத்து வரச் செய்து தன்னோடு கூட்டிச் சென்றான்.

## 20

கீர்த்தியின் கண்ணீர் நந்தினியை வெகுவாக உலுக்கிவிட்டிருந்தது.

கேலியும் சிரிப்புமாய் அவன் பேச்சில் இறங்கியபோதெல்லாம் அண்ணியிடம் ஏமாந்தது, மற்றவர்களின் எச்சரிக்கை என்று எல்லாம் நினைவு கூர்ந்து மனதை ஒரு நிலைக்குக் கொண்டு வந்து விடுவாள்.

ஆனால், அவளது தோளை நனைத்த அணைப்பு எல்லா வாக்குவாதங்களையும் மறக்கடித்தது.

அவன் நல்லவன்தான் என்று எண்ண வைத்தது.

அதற்குரிய ஆதாரங்களைத் தேடச் செய்தது.

இதெல்லாம் எந்த அளவுக்குப் புத்திசாலித்தனம்!

நந்தினி தன் மனதைக் குழப்பிக் கொண்டு இருந்த போதுதான் பணியாள் வந்து கீர்த்தி அழைப்பதாக உரைத்தான்.

அவனை அனுப்பிவிட்டு வேகமாக முகத்தில் பவுடரை ஒற்றியபோது மனது அதிர்ந்தது.

இப்போது எதற்கு அலங்காரம்?

முகத்தை அழுந்தத் துடைத்துவிட்டுத் தயங்கியவாறே சென்றாள்.

ஆனால், அவனோ காலை நிகழ்ச்சியை அடியோடு மறந்தவன் போலக் கதிரேசனின் அறைக்கு அவளை அழைத்துச் சென்றான்.

காலைத் தாங்கலாக ஒரு டீப்பாயின் மேல் வைத்தபடி செல்வியோடு சீட்டு ஆடிக் கொண்டு இருந்தான் கதிரேசன்.

''ஊகூம். தப்பாட்டம்...'' என்றவனின் சிரிப்பு சட்டென நின்றது.

தயக்கத்துடன் எழ முயன்றவனைக் கையமர்த்தி விட்டு, நந்தினி அமர ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டான், கீர்த்தி.

தானும் மற்றொன்றில் அமர்ந்து கொண்டு, கதிரேசனை நலம் விசாரித்தான்.

''அடுத்த வாரம் மெல்ல மெல்லக் காலை ஊன்றத் தொடங்கி விடலாம் என்றார் டாக்டர்,'' என்று முந்திக் கொண்டு பதில் கூறினாள் செல்வி.

''நல்லது,'' என்றான் கீர்த்தி சுருக்கமாக.

பிறகு கதிரேசனின் முகத்தில் பார்வையை பதித்து, ''அன்று வெள்ளாம்பில் என்ன நடந்தது?'' என்று வினவினான்.

''வெள்ளாம்பி மிராசு சங்கரனை ஒரு மிரட்டு மிரட்...''

''ஏன்?''

''அவரிடம் வேலை பார்ப்பவர்களுக்கு அதிகமாய்க் கொடுக்க வைப்பதற்காக...''

''சட்டப்படி கொடுத்தார் அல்லவா?''



சட்டென முகம் சிவக்கச் சினத்துடன் பேசலானான் கதிர்.

''பெரிய சட்டம்! உழைப்பவரை விட அவர்எந்த வகையில் உயர்வு? இருப்பதைப் பங்கிட்டு...''

''இந்தக் கொள்கைக்கும் செல்விக்கும் சரிப்பட்டு வராதே!'' என்றான் கீர்த்தி ஒரு முடிவு போல.

''அங்கிள்...'' என்று ஏதோ சொல்ல முயன்றாள் செல்வி.

''அழையாமல் குறுக்கே பேசாதே!'' என்ற அவனது அதட்டலில் பள்ளிச் சிறுமி போல அடங்கியும் போனாள்.

எதையாவது சாக்கிட்டுக் கதிரேசனை விரட்டப் போகிறானோ என்ற சந்தேகம் நந்தினிக்கு எழுந்தது.

ஆனால், செல்வியைப் போல அதட்டி அடக்கப்பட விருப்பம் இல்லாமல் பேசாதிருந்தாள்.

''எதையுமே பங்கிட்டு வாழ்வதுதான் நல்லது,'' என்று அழுத்தம் கொடுத்துப் பேச முயன்றான் கதிர்.

''அதற்கு நீ யாரையாவது ஒரு தொழிலாளியை இணை சேர்த்திருக்க வேண்டும்,'' என்று இடைவெட்டினான் கீர்த்தி.

''தொழிலாளி என்றால் மட்டமில்லை!'' என்றான் கதிர் சூடாக.

''நிச்சயமாய், சொல்லப் போனால் எஸ்டேட்டில் கடைசிப் பணிபுரியும் பெண் கூட இந்த இருவரையும் விட உயர்ந்தவள்தான். ஆனால், அவர்களைப் போல வாழச் செல்வியால் முடியாது. அவள் அந்த மாதிரி வளர்க்கப்படவில்லை. அவ்வளவுதான் விஷயம்,'' என்று முடித்தான் கீர்த்தி.

''கதிருக்காக...'' என்று செல்வி மீண்டும் தொடங்கவும், ''பேசாமல் இருக்க முடியாது என்றால் வெளியே போய் விடு,'' என்ற கீர்த்தியின் அழுத்தத்தில் மீண்டும் வாயை மூடிக் கொண்டாள்.

''எனக்காக அவள் மாறுவாள்!'' என்றான் கதிர் தைரியமாக.

''நிச்சயமாக முயற்சி செய்வாள். ஆனால், அந்தச் சிரமத்தை அவள் அனுபவிக்க நான் அனுமதிக்க மாட்டேன். மேலும் அவள்தான் மாற வேண்டும் என்று என்னகட்டாயம்? அவளுக்காக நீ ஏன் மாறக்கூடாது?'' என்று கேட்டான் கீர்த்தி.

''நான் ஒரு பெண்ணுக்காகக் கொள்கையைக் கைவிட்டவன் என்று இகழ்ச்சியாகப் பேசுவார்களே...''

''யார் பேசுவார்கள்? உன்னோடு கொள்ளையடிக்க வந்தார்களே, அவர்களா?'' என்று ஏளனமாய்க் கேட்டான் கீர்த்தி.

''கொள்ளையடிக்கப் போகவில்லை. சும்மா மிரட்டத்தான்...'' என்று சினக் குரலில் பதிலுரைத்தான் கதிர்.

''மிரட்டிய வேகத்தில் கொலையும் செய்து விட்டீர்களாக்கும்! வீட்டில் இருந்த பணமும் மறைந்துவிட்டதாக்கும்!''

''இல்லை இல்லை. நான் உள்ளே போகவே இல்லை. அவர்கள் இருவரும்தான்...'' என்று தடுமாறினான் கதிர்.

''அவர்கள் மாட்டிக் கொண்டால் கதிரைக்காட்டிக் கொடுத்து விடுவார்களே கீர்த்தி சார்!'' என்று கவலைப் பட்டாள் நந்தினி.

கீர்த்தியை அழைப்பது இன்னமும் அவளுக்குச் சங்கடம் தான்.

சார் என்றால் அவனுக்குப் பிடிப்பதில்லை. அன்று காலை மட்டும்தான் அவன் பெயரை அவள் பயன்படுத்தியது.

அவளை வினோதமாகப் பார்த்துவிட்டு, ''மாட்டார்கள்!'' என்றான் கீர்த்தி.

''கொள்ளைப் பணத்தைப் பிரிக்கையில் வந்த சண்டையில் ஒருவன் அவுட். போலீஸ் துரத்தும் போது சுட்டு அடுத்தவனும் செத்தே விழுந்து விட்டான்.''



ஒரு பெருமூச்சு விட்டு, ''யாருடைய சாவிலும் சந்தோஷப்படுவது சரி இல்லைதான். ஆனால் இப்போது கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறது!'' என்றாள் நந்தினி.

''அப்படியா?'' என்றான் கீர்த்தி கிண்டலாக.

மறுபடி கதிரிடம் திரும்பி, ''நீ ஏன் மாறக்கூடாது என்று கேட்டேனே?'' என்றான் மீண்டும்.

''நீங்கள் இறங்கி வந்து பார்த்ததில்லை. காலம் காலமாய் மிதிபட்டு அழுந்திப் போய் அவர்கள்...''

''இதை ஏதாவது பொது மேடையில் சொன்னால் கை தட்டலேனும் கிடைக்கும்!'' என்று மட்டம் தட்டினான் கீர்த்திவாசன். ''நான் எதையோ பார்த்தது இல்லை என்றாயே, என் எஸ்டேட்டில் வேலை செய்கிறவர்களைப் பார்த்தால் அப்படியா தோன்றுகிறது? ஒரு சமுதாயத்தை உயர்த்துவது என்பது சும்மா ஒரு பணக்காரனை அழித்து விடுவதால் நடப்பது இல்லை தம்பி. உழைத்து நல்லநிலைமைக்கு வந்து நாலு பேரை நல்லபடியாக வாழ வையேன், யார் வேண்டாம் என்றார்கள்.''

கதிர் பேசாதிருக்கவும், ''என் பழைய கேள்விக்கு இன்னமும் நீ பதில் சொல்லவில்லையே,'' என்று நினைவுறுத்தினான்.

''ஒரு பெண்ணுக்காக எப்படிக் கொள்கையைக் கைவிடுவது?'' என்று இறங்கி விட்ட குரலில் வினவினான்.

''யாரோ ஒரு பெண்ணுக்காக அல்ல. இந்தச் செல்விக்காக. காதலுக்காக எதை எதையோ தியாகம் செய்கிறார்கள். நீ இடையில் வந்த, முற்றிலும் சரி என்று கூடச் சொல்ல முடியாத கொள்கையை விட முடியாது என்றால், உன் காதலை எப்படி நம்புவது?'' நன்றாக மடக்கி விட்டான் கீர்த்தி.

கை தட்டும் ஆவலை அடக்கிக் கொண்டாள் நந்தினி.

கதிரேசன் படிந்து விட்டான்.

கொஞ்ச நஞ்சம் மிச்சமிருந்த குறுகுறுப்பைச் செல்வியின் ஏக்கமும் ஆவலும் படிந்திருந்த முகம் துப்புரவாய்த் துடைத்தெறிந்தது.

''என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''அதுகூடத் தெரியாமலா காதலில் இறங்கிவிட்டாய்?'' என்று புருவங்களை உயர்த்தினான் கீர்த்தி.

''தெரிகிறது. அவளைப் போலப் பணக்காரன் ஆன பிறகு என்பீர்கள். எல்லாப் பணக்காரர்களும் சொல்வது தான். என்னவோ அவர்கள் பணத்துக்காகவே எல்லாரும் பறப்பது போல நினைப்பு. இந்த எண்ணத்தின் மூலம் செல்வியை எவ்வளவு அவமதிக்கிறீர்கள் தெரியுமா?'' என்று படபடத்தான் கதிர்.

''செல்வியின் பணத்தில் வாழலாம் என்ற எண்ணத்தில் இருந்தாயோ என்று இப்போதுதான் ஐயம் தோன்றுகிறது!'' என்று அமைதியாகக் கூறினான் கீர்த்தி.

''இல்லை என்று நிரூபிக்க என்ன செய்ய வேண்டும்?'' என்று முழுமையாகத் தன்னை அவனிடம் ஒப்புவித்தான் கதிர்.

அப்போது தன் சம்மதத்தை முழுமையாகச் சொல்லி விடவில்லை கீர்த்திவாசன்.

''செல்வியை மணப்பவனுக்குச் சொத்துக்களைப் பாது காக்கத் தெரிய வேண்டும்; பெருக்கத் தெரிய வேண்டும்; பணி புரிகிறவர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கத் தெரிய வேண்டும்; எல்லாவற்றிலும் நீ தேர்ந்தால் பிறகு பார்க்கலாம்,'' என்று மட்டுமே உரைத்தான்.

நந்தினிக்கு வெகுவாயும், கதிருக்கு கொஞ்சமாயும் ஐயம் தந்தபோதும் செல்வியை உல்லாசப் பறவையாக்க இந்தப் பதில் போதுமானதாக இருந்தது.



ஏனெனில், அவளுடைய கதிரேசனால் வெற்றி பெற முடியாத தேர்வே உலகத்தில் கிடையாது என்பதில் அவளுக்கு அவ்வளவு நிச்சயம்.

நந்தினிக்கு வேறு ஐயப்பாடும் இருந்தன.

அது பற்றிச் செல்வி அறியாமல் கீர்த்தியிடம் பேசினாள். ''அந்த இன்ஸ்பெக்டர் சொன்னது அவ்வப்போது மனதை உறுத்துகிறது. அது உண்மையாக இருந்தால்...? மிஸ்டர் கதிரும் மிராசுதாரின் வீட்டுக்குச் சென்றது, ஓடும்போது குண்டடிபட்டது எதையும் மறுக்கவில்லையே!'' என்றாள்.

''மறுத்துப் பயனும் இல்லையே. ஆனால் கொலை, கொள்ளை என்கிற அளவுக்குப் போக அவனுக்குத் துணிச்சல் போதாது!'' என்றான் கீர்த்தி திடமாக.

வியந்த பார்வையுடன், ''மிஸ்டர் கதிரேசன் விஷயத்தில் உங்களைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே. முன்பு, ஒரேயடியாக மறுத்தீர்கள். இப்போது கொலை, கொள்ளை என்று சம்பந்தப்பட்ட பிறகு ஆதரவு காட்டுவது விசித்திரமாக இருக்கிறது சார்...'' என்று தடுமாறினாள்.

லேசாக முறுவலித்துவிட்டு, 'முதலில் இந்த சாரை விட்டு விட்டுப் பேசப் பழகு. அப்புறம் கதிரேசன் விஷயத்தில் இன்னமும் தேர்வுகள் வைத்திருக்கிறேன் என்றேனே, அதில் தேர்ந்தால் பார்க்கலாம்,'' என்று மீண்டும் ஈரெட்டாகவே முடித்து விட்டான் கீர்த்தி.

என்ன தேர்வு என்று யோசித்து விட்டு, விடை காணாமல் விட்டாள் நந்தினி.

''சவுக்கியம்தானா செல்வியம்மா?'' என்று குசலம் விசாரித்து, செல்வியின் முழுப் புன்னகையைப் பதிலாகப் பெற்ற ஒருவரிடம் கதிரை ஒப்படைத்தான் கீர்த்தி.

''அவர்தான் பரமசிவம் சார். எங்கள் குரூப் மில்லுக்கெல்லாம் வாங்கல் விற்றல் பார்க்கிறவர்'' என்றான் நந்தினியிடம்.

கதிரின் பொழுது பெரும்பாலும் பரமசிவத்துடன் கழிந்ததால் செல்விக்கு 'ஷாப்பிங்' நினைவுக்கு வந்து விட்டது.

அன்று பெரிய கடைவீதியில் ஐஷாடா, லிப்பிரஷ் ஷானால் ஃபைப் என்று வாங்கிக் குவித்தாள்.

இருதரம் திரும்பிப் பார்த்துவிட்டு, ''உன்னைக் கண் டதும் கிழவன் குமரனாகி விட்டான் நந்தினி!'' என்றாள் நமுட்டுச் சிரிப்புடன்.

சில தினங்களாகவே வாலிபம் திரும்பிய மைனர் ஒருவன் அங்கங்கே கண்ணில் பட்டுக் கொண்டே இருந்ததால் யார் என்று கேட்கக்கூட இல்லை நந்தினி.

''கண்டவர்களைப் பற்றி கமெண்ட் அடிக்காதே செல்வி,'' என்று மேலே நடக்கலானாள்.

''இன்று பயங்கர 'டை' அடித்திருக்கிறான் நந்தினி. ஆனால் பாவம். சட்டை பட்டன் போடுகிற இடத்தில் உள்ள நரைமயிர் மட்டும் பல்லை இளிக்கிறது!'' என்று சிரித்தாள் செல்வி. ''உன் மேல் வைத்த கண், தட்டிக் கூடப் பிடிக்கவில்லை. விட்டால் நடுங்கி ஓடுவான்!'' என்றாள் மேலும்.

''சீச்சீ! பேசாமல் வா,'' என்று அவளை இழுத்துக் கொண்டு காருக்குச் சென்றாள் நந்தினி.

கோவையின் இதமான குளிர் நந்தினிக்கு மிகவும் பிடித்தமானது.

கீர்த்தியின் பங்களா நகரை விட்டுச் சற்று விலகினாற் போல உருவாகியிருந்த காலனியுள் இருந்தது.

மாலை வேளைகளில், நகர்ப்புறத்தின் தூசு, புகை இல் லாத காற்றை அனுபவித்தபடி காலனியின் மையத்தில் இருந்த பூங்கா வரை சென்று வருவது நந்தினியின் வழக்கம்.

எப்போதேனும் சீக்கிரமாகத் திரும்பி வரும் நாட்களில் கீர்த்தியும் வந்து இவளுடன் சேர்ந்து கொள்வான்.



அன்று பார்க்கில் சுற்றிவிட்டுத் திரும்புகையில் யாரோ பின் தொடர்வது போலத் தோன்றவும் ஓரக் கண்ணால் பார்த்தாள்.

அந்தக் கடை வீதிக் கிழவன்தான்.

இது என்ன தொல்லை என்று எண்ணியபடி வேகமாக நடக்கலானாள் நந்தினி.

அவனும் விரைந்து நெருங்க, கரணை கரணையாக வலுத்துத் தெரிந்த அவனது தோற்றம் உள்ளூர அச் சத்தைக் கிளப்பியது.

இனி ஓட வேண்டியதுதான் என்று அவள் முடிவு கட்டிய சமயம் எதிரே கீர்த்தி வருவது தெரிந்தது.

அனாவசியமான அலட்டல்கள் இல்லாத அவனது சீரான நடையை அப்போதும் மனது ரசிக்க, விரைவாக அவனை நெருங்கினாள்.

''எனக்காகத்தானே வந்தீர்கள்? இதோ நானே வந்து விட்டேன். சேர்ந்து போகலாமா?'' என்று அவனை ஒட்டி நின்றாள்.

''பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய வாசகம். காலையில் விழித்த முகம் நரிமுகமா?'' என்று சிரித்தான் அவன்.

ஒரு கணம் திகைத்துவிட்டு முகம் சிவந்தாள் நந்தினி.

''ஷ்... அதில்லை. என் பி... பின்னாலேயே ஒருவன்...''

முகம் கறுக்கத் திரும்பி அவனை வெறித்தான் கீர்த்தி.

அவன் உடல் இரும்பென இறுகுவதை உணர்ந்து, ''கீர்த்தி! வேண்டாம்!'' என்று அவன் கரத்தைப் பற்றி அவனைத் தடுத்தாள் நந்தினி.

அதற்குள்ளாகவே சற்றுத் தயங்கி நின்ற அந்தக் கிழவன் திரும்பி விரைந்து சென்று விட்டான்.

''ம்... வழியோடு போகிறவனைக் காட்டிச் சொன் னதை இல்லையென்று ஆக்கிவிட்டாயாக்கும்! நமக்கேது இந்த அதிர்ஷ்டம் என்று அப்போதே நினைத்தேன்,'' என்று சிரித்தவன், ''ஏதோ, இதுவேனும் கிட்டியதே!''

என்று கனிவான குரலில் கூறித் தன் கரத்தின் மேல் இருந்த அவளது கையைப் பற்றி அழுத்தினான்.

கன்னங்களில் ஜிவ்வென்று சிவப்பேறக் கையை உருவி கொண்டாள் நந்தினி.

ரசனையுடன் சிரித்தபோது, "இனிமேல் தனியாக வர வேண்டாம்," என்ற உத்தரவும் அவனிடமிருந்து பிறந்தது.

மறுநாள் கீர்த்தி அலுவலகம் சென்று சிறிது நேரத்தில் யாரோ அவளைப் பார்க்க வந்திருப்பதாகத் தகவல் வரவும் நந்தினிக்கு ஆச்சரியமாக இருந்தது.

அஞ்ஞான வாசம் புரியும் இந்த இடத்தில் அவளைத் தேடி யார் வரக்கூடும்?

வியந்தபடியே வரவேற்பு அறைக்குள் சென்று பார்த்தால் அதே சாயத் தலைக் கிழவன்.

எடுத்த எடுப்பில், "உன் அண்ணன் படுத்த படுக்கையாக இருக்கிறான். முகமுழிக்காக உன்னை அழைத்துப் போக வந்தேன். நான்தான் பகதூர் பாண்டியன்!" என்றான் அவன்.

## 21

அண்ணனுக்கு உடம்பு சரியில்லை என்ற ஒரு வாக்கியத்தில் பதறிப் போன நந்தினி மேலே அவன் பேசியதைக் கவனிக்கவே இல்லை.

"என் அண்ணனுக்கு என்ன?" என்றாள் பதட்டத்துடன்.

"ம்... கதையா கேட்கிறாய்? வயதுப்பெண் திடீரென்று காணாமல் போனால் பெற்றவன் போல வளர்த்தவன் என்ன ஆவான்? உன்னைப் பார்த்தால்தான் பிழைப்பான் என்கிறார் டாக்டர். உடனே கிளம்பு!" - என்று அவசரப் படுத்தினான் வந்தவன்.

"உன் பிரிவால் உன் அண்ணனுக்கு ஒன்றும் ஆகி விடாமல் நான் பார்த்துக் கொள்வேன். அது இது என்று அளந்தாள் அண்ணி."



இதுதான் பார்த்துக் கொள்கிற அழகாக்கும்.

சேச்சே... அவளை நம்பியிருக்கக் கூடாது. அண்ணன் அலுவலக முகவரிக்காவது கடிதம் எழுதியிருக்க வேண்டும்.

போவது என்றுதான் முடிவு செய்து விட்டோமே. இதற்கு மேல் கணவன் மனைவிக்கு இடையில் தகராறு கிளம்புவானேன் என்று சும்மா இருந்தது தப்பாகிப் போயிற்று.

இப்போது உயிருக்கு ஆபத்து என்கிறானே, அண்ண னிடம் எப்படிப் போவது? இங்கே கீர்த்தியிடம் என்ன சொல்வது...?

"என்ன மசமசக்கிறாய்?" என்று அவளது எண்ண ஓட்டத்தை இடைமறித்தது வந்தவனின் கட்டைக் குரல். "சின்னப் பெண்ணுக்குரிய சுறுசுறுப்பே இல்லாமல் கட்டை போல நிற்கிறாயே, கிளம்பு கிளம்பு!" என்று அவசரப்படுத்தினான் அவன்.

அண்ணனிடம் எப்படிப் பறந்து போய்ச் சேர்வது என்பதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்த நந்தினிக்கு இன்னமும் வந்தவன் பேசியவிதம் மனதில் பதியவில்லை. "இங்கே வேலை செய்வதால் சொல்லி விட்டுத்தான் வரவேண்டும்..." என்றாள் குழப்பத்துடன்.

'அடச்சீ... வேலையாவது மண்ணாங்கட்டியாவது! உதறி எறி. இந்நேரம் அங்கே என்ன ஆயிற்றோ? கிளம் புடி என்றால் இங்கே தாயமாடிக் கொண்டு நிற்கிறாயே! துணிமணி கூட எடுக்க வேண்டாம். நேரம் இல்லை. அவசரம் என்பதால் அல்லு அசலை அனுப்பாமல் காரோடு நானே வந்திருக்கிறேன், அப்படியே கிளம்பு. போதும்."

வரவர அவன் பேச்சில் உரிமையும், அதிகாரமும், அதிகமாவது அப்போதுதான் மூளையில் உறைக்க,

''அய்யா! நீங்கள் யார் என்றே எனக்குத் தெரியாது. உங்களை நான் இதற்கு முன் பார்த்தது கூடக் கிடையாது!'' என்றாள் கோபமாக.

''நீ சிறுபிள்ளைத்தனமாக வீட்டை விட்டு ஓடாமல் இருந்திருந்தால் இரவு பகல் பார்த்துக் கொண்டே இருந் திருப்போம் - எவ்வளவோ நெருக்கமாக!'' என்று வயதுக் குப் பொருந்தாத வகையில் கண்ணடித்தான் அவன்.

கொதிப்புடன் நிமிர்ந்தபோதுதான் அவன் பெயர் சுரீரென மனதில் உறைத்தது.

பகதூர் பாண்டியன்!

வலைப் பனியனும் மஸ்லின் ஜிப்பாவும் பளப்பள லுங்கியுமாக வழியில் போகிற பெண்களை வெறித்த அரைக் கிழவன்.

மனைவியின் சொல் வன்மையில் மயங்கி நந்தினிக்குப் பொருத்தமானவன் என்று அண்ணன் தேர்ந்தெடுத்திருந்த அருமை மாப்பிள்ளை!

வந்த இடத்துக்கு ஒப்பவென்று அவன் போட்டிருந்த வேடம் பழைய உடையே மேல் என்று எண்ண வைத்தது.

இறுக்கமான டீ ஷர்ட்டும், பிடிப்பான பான்ட்டும் காலை விரித்து அமர்ந்து ஆட்டிக் கொண்டிருந்த விதமும் நந்தினிக்குக் குமட்டிக் கொண்டு வர, ''சீ!'' என்று உரக்கவே சொல்லி விட்டாள்.

அவன் எதையும் துடைத்துப் போட்டு விடுகிற ரகம் போலும்.

இவளது வெறுப்பை உணர்ந்த போதும், அதை அலட் சியம் செய்து, ''போகட்டும், அதை அப்புறம் பார்ப் போம். இப்போது கிளம்பு,'' என்று அவசரப்படுத்தினான்.

அவன் வெறுப்புக்கு உரியவன் என்று ஆகவும் அவனது பேச்சில் இருந்த ஓட்டைகள் எல்லாம் இப்போது விளங்கலாயின.



நந்தினியை அவன் பார்ப்பது இது முதல் தடவை இல்லை.

கடைத் தெருவில்.

பார்க்கில்.

அங்கெல்லாம் அநாகரீகப் பார்வையால் விழுங்கிய வன்தான்.

அண்ணனுக்கு நோய் என்றால் - அதுவும் ஆபத்தான நோய் என்றால் அப்போதெல்லாம் ஏன் சொல்லவில்லை?

இப்போது கீர்த்தி இல்லாத நேரத்தில் வந்து இவ்வளவு அவசரப்படுத்துவானேன்?

ஏதேனும் தில்லுமுல்லு இருக்குமோ?

''சொல்லிவிட்டுத்தான் வரணும் என்றால் யாராவது வேலைக்காரியிடம் ஒரு வார்த்தைச் சொல்லிவிட்டுச் சீக்கிரம் கிளம்பு. அவனுக்கு இருக்கிற பாசத்தில் பத்தில் ஒரு பங்கு உனக்கு இராது போல் தெரிகிறதே. சரி, ஏதேனும் லட்டர் எழுதி வைத்து விட்டாவது கிளம்பித் தொலையேன்...''

அவன் அவசரப் படுத்த, அவசரப் படுத்த, என்ன ஆனாலும் இவனோடு கிளம்பக் கூடாது என்ற எண்ணம் வலுப்பெற்றது நந்தினிக்கு.

''இங்கே நான் பார்க்கிற வேலைக்குப் பதில் ஆள் வைக்காமல் கிளம்ப முடியாது. அதனால்...''

''அட என்ன பொண்ணு நீ! சாகக் கிடக்கிற அண்ணனைப் பற்றிக் கவலையே இல்லையே!'' என்று இடையில் புகுந்தான் பகதூர்.

சுருசுரு என்று கோபம் ஏறியது அவளுக்கு.

ஆட்களை அழைத்து இவனை வெளியேற்றி விடலாம் தான். அவ்வளவு அதிகாரம் அவளுக்கு அங்கே இருக்கவே செய்தது.

ஆனால் அது கீர்த்தியின் காதுவரை எட்டிவிடும். இன்றைய நிலையில் அது வேண்டாம் என்று நினைத்தாள் நந்தினி.

அமைதியாக அவளாகவே - இந்தத் தொல்லையிலிருந்து மீள்வதுதான் நல்லது.

கோபத்தை வெளிக்காட்டாமல், ''இங்கே நான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இருக்கிறேன். இடையிலே சென்றால் இவர்கள் போலீசுக்குப் போய்விடுவார்கள்!'' என்றாள்.

போலீஸ் என்ற பதத்துக்கு அவனிடம் அவ்வளவு பிரதிபலிப்பு இருக்கும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

''அடேடே! அது வேற கஷ்டமா?'' என்று அவசரமாக எழுந்த பகதூர், ''சரி சரி, ஒரு வாரம் கழித்து வருகிறேன். அதற்குள் நீ விஷயத்தை முடித்துவிட்டு எப்படியாவது ரெடியாகி விடு!'' என்று சொல்லிவிட்டுச் சரசரவென்று வெளியேறிப் போய்விட்டான்.

''அப்பாடி!'' என்று அமர்ந்தாள் நந்தினி.

ஆனால் உடனேயே அண்ணனைப் பற்றிய கலக்கம் எழுந்தது.

உடனடியாக ஆபத்து என்று இராவிட்டாலும் ஒன்றுமே இல்லாமல் ஒரேயடியாகப் பொய்யைச் சொல்ல முடியுமா?''

ஒருவேளை அவன் சொன்னது மெய்யாகவே இருந்தால்?

அந்த ஆள் சொன்னது போலவே பெற்றவனைப் போல வளர்த்த அண்ணன்!

சுமார் நாலு மாத முன்பு வரை யாரை உயிர் மையமாகக் கொண்டு சுழன்று கொண்டிருந்தாளோ, அந்த அண்ணன்! அதன் பிறகும் பல நாட்கள் தலையணை நனையும் அளவு ஏங்கிக் கண்ணீர் வடிக்க வைத்த அண்ணன்.



இப்போது பல தினங்களாகத் தன் வாழ்வின் பிரச்சினைகளில் அவனை நினையாது இருந்தது பெருங்குற்றமாகத் தோன்றியது அவளுக்கு.

என்னதான் மனைவி சொல்படி ஆடினாலும், தங்கையிடம் பாசம் மிகவும் உள்ளவன்தானே அண்ணன்.

திடீரென்று அவள் மறைந்தபோது எவ்வளவுதான் மனைவி தேற்றினாலும், மாற்றிச் சொன்னாலும், அவனும் கலங்கித்தானே போயிருப்பான்.

சிறுகச் சிறுக அந்த ஏக்கத்தில் ஏதேனும் நோய் பிடித்திருந்தால்... அது இப்போது முற்றியிருந்தால்...

மனம் மீண்டும் கலங்கலாயிற்று.

அவசியப்பட்டால் டெலிபோன் செய்வதற்கு என்று அவள் மதுரையில் படிக்கும்போதே தன் அலுவலக டெலிபோன் எண்ணைத் தங்கைக்குத் தந்திருந்தான் மனோகரன்.

சிறு தயக்கத்திற்குப் பின் மனோகரனின் அலுவலகத்துக்கு டெலிபோன் செய்து அவனைப் பற்றி விசாரித்தாள்.

ஒரு வார லீவில் இருந்தாலும் உடம்புக்கு ஒன்றும் இல்லையென்று அறிந்து அமைதியானாள்.

என்றுமே கீர்த்தி சோர்வுடன் வீடு திரும்பி நந்தினி பார்த்தது இல்லை. எனினும் அன்று மாலை அவனிடம் ஒரு பரபரப்பு தெரிந்தது.

இப்போதெல்லாம் அவனது ஒவ்வொரு அசைவுகளுக்கும் அர்த்தங்கள், அனர்த்தங்களைக் கற்பிப்பதிலேயே பெரும் பொழுதைச் செலவு செய்து கொண்டிருந்த நந்தினி, இப்போதும் புத்தக அறையினுள் அமர்ந்து அவனுடைய பரபரப்புக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டு இருந்தாள்.

திடுமெனக் கதவு திறந்து அவளது எண்ணத்தின் நாயகனே எதிரில் வரவும் அவசரமாக எழுந்தாள்.

அவன் முறுவலித்துவிட்டு, ''இங்கே இருப்பாய் என்று தான் தேடி வந்தேன், உட்கார்!'' என்று அமரச் சொன்ன வன், ''நாளை கதிரேசனுக்கு முதல் டெஸ்ட்!' என்றான்.

''என்ன மாதிரி?''

''அவனிடம் இருபத்தையாயிரம் ரூபாய் கொடுத்து இருக்கிறேன். கொள் முதலுக்காக.''

''அவ்வளவு பணமா?''

''கால் லட்சம்தான் நந்தினி. செல்வியிடம் மெய்யன்பு உடையவன் என்றால் பெருக்கட்டும் அல்லது இன்னொரு சந்தர்ப்பவாதியிடமிருந்து செல்வி மீளட்டும்.''

சற்று யோசித்து விட்டு, ''மெய்யாக முயன்று தோற்று விட்டால்? ஒரு மாதப் பயிற்சி கொடுத்து இருந்த போதும் கதிரேசனுக்கு இது புதிய துறை!'' என்று இழுத்தாள் நந்தினி.

''முயற்சி மெய்யானதாக இருந்தால் தூக்கி விடத் திரை மறைவில் ஆள் வைத்திருக்கிறேன். ஓட முயன்றால் ஒதுங்கிக் கொள்வார்கள். ஓடாமல் வென்று வர வேண்டும் என்று சந்தன மாரியை வேண்டிக் கொண்டிருக்கிறேன்!'' என்றான் அவன்.

பழைய நினைவு வர ஓரக் கண்ணால், ''திரும்பி வராமல் இருக்க அல்லவா நீங்கள் வேண்டியிருக்க வேண்டும்!'' என்றாள் அவள்.

''ஏனோ?''

''அவர் திரும்பி வந்தால் செல்வியை நீங்கள் மணப்பது இயலாதது ஆகிவிடுமே.''

கோபம் போல் ஒரு நீளப் பார்வை பார்த்தான் அவன். பிறகு சொன்னான். ''மூளை என்று ஒரு சாம்பல் நிறப் பொருள் உண்டு தெரியுமா? அது கொஞ்சமேனும் உன் தலைக்குள் இருந்தால் இந்தக் கேள்வி கேட்க மாட்டாய்!''



அதை மேலும் அலசத் துணிவற்றுப் பேச்சை மாற்றினாள் அவள்.

''நீங்... நீங்கள் அம்மன் பக்தரா?''

தோளைக் குலுக்கிவிட்டு, ''கோவில் கண்ட இடம் மனதால் வணங்குகின்ற ரகம் நான். ஆனால், இப்போ தெல்லாம் ஓர் அம்பிகையின் அருள் பற்றித்தான் அடிக்கடி நினைக்கிறேன்!'' என்றான் குறும்பாக.

வினாடிக்குள் நெஞ்சில் மணந்த ரோஜாக்களையும் கூவிய பூங்குயில்களையும் ஒதுக்கிவிட்டு, மிகவும் முயன்று வெகு சாதாரணமான குரலில். ''நான் முருக பக்தை!'' என்றாள் அவள்.

கிண்டலாகப் பார்த்துவிட்டு, ''பாவம், முருகன்!'' என்று பரிதாபப்பட்டான் அவன்.

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு செல்வியை நாடிப் போனாள் நந்தினி.

உணவுக்குப் பின் தூக்கம் என்று செல்வி சென்று விட, நந்தினியைச் சற்று தாமதிக்கச் சொன்னான் கீர்த்தி.

உணவு வேளையில் போலவே, எதையோ எதிர்பார்ப் பது போன்ற பார்வையை மீண்டும் உணர்ந்தாள் நந்தினி.

சட்டென நினைவு வந்தவளாக, ''இன்று சென்னைக்கு ஒரு ''டிரங்க் கால் செய்தேன். அதற்குச் செலவு எவ்வளவு என்று சொன்னீர்களானால் தந்து விடுகிறேன்,'' என்றாள்.

''நீ எனக்குப் பணம் தருகிறாயா?'' என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில். ''பரவாயில்லை. அந்தப் பணம் இல்லாமலே என்னால் காலம் தள்ள முடியும். ஆனால்... வேறு ஒன்றும் இல்லையா?''

உள்ளத்தை முழுமையாகத் திறந்து காட்டும் நம்பிக் கையும் வராமல் அரைகுறையாகச் சொல்லவும் மனம் இல்லாமல் பேசாதிருந்தாள் நந்தினி.

இரண்டு மூன்று நிமிஷங்கள் அவன் சற்று ஒதுங்கி இருந்தது போலத் தோன்றியது நந்தினிக்கு. வேதனையை

வெளிக்காட்டாமல் நடமாடியபோது மீண்டும் அவளை அழைத்து அவன் சொன்னான்.

''கதிரேசன் முதல் பரீட்சையில் வென்று விட்டான். அடுத்து இந்த வெள்ளியன்று நூல் விற்பனையை ஒப்படைத்திருக்கிறேன். அது முடியவும் பணத்துடன் மலைக் கோவிலுக்கு வரச் சொல்லியிருக்கிறேன், முதல் லாபத்தை உண்டியலில் போட்டுவிட. நானும் நாளை வெளியூர் போய்விட்டு அநேகமாக அன்று மாலைக்குத் தான் வருவேன்,'' என்றான்.

கீர்த்தி இல்லாமல் ஒளியிழந்த கோவையை மேலும் இருட்டாக்குவது போல மேனகா வந்தாள்.

''நன்றாகி விட்டாயா செல்வி? நீயும் கதிரும் இங்கே வந்திருப்பதாகக் கீர்த்தி சொன்னதிலிருந்து முயற்சி பண்ணி இன்றுதான் வர முடிந்தது. எங்கள் அப்பா, அம்மா இரண்டு பேருக்கும் சுகமில்லையா, வெளியே கிளம்பவே முடிவது இல்லை. நல்லவேளை, கீர்த்தி தினமும் வந்ததால் அவசியம் ஒவ்வொரு நாளும் உன் விஷயம் கேட்டுத் தெரிந்து கொண்டேன்,'' என்று முறுவல் செய்தாள்.

மற்ற இரு பெண்களும் பொட்டில் அறை விழுந்தாற் போலத் திகைத்துப் போயினர்.

அப்படியானால் கீர்த்தி மேனகாவைத் தினமும் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறானா?

முதலில் சுதாரித்துக் கொண்ட செல்வி ஓரக்கண்களில் மரண காயம் பட்ட வேதனையைக் கண்டு உணர்ந்து ஆத்திரம் கொண்டாள்.

சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பது போல மேனகாவிடம், ''மின்னிக்கா, நீ வசிய மருந்து என்று...'' என்று தாக்குதலாகப் பேசத் தொடங்கினாள்.



அவள் பேச்சை இடைமறித்து, ''அதைத்தான் அப்போதே நிறுத்தி விட்டேனே. மலர் வனத்துக்கு வந்திருந்த போது உன் மாமாவிடம், உனக்கு ஏதாவது செய்தால் தற்கொலை செய்து கொள்வேன் என்று சத்தியம் செய்ததால் வசிய மருந்து வைக்கும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டாரே. ஆனால் ஒரேயடியாகப் பிரிந்திருக்க முடியாமல் இங்கேயே வந்து விட்டார் பார்த்தாயா?'' சொல்லிப் பெருமை தொனிக்கச் சிரித்தாள்.

மெய்யாகவே இருக்குமோ என்று மருகியது நந்தினியின் காதல் நோயுற்ற மனம்.

ஆனால் செல்வி விடாமல், ''நீ அதை அங்கேயே ஏன் சொல்லவில்லை?'' என்று வினவினாள்.

''சொல்லியிருப்பேன். ஆனால் கீர்த்தியைப் பற்றி மீண்டும் குறைவாகப் பேச நேருமே என்று யோசித்த போது நீயே சாப்பிடத் தொடங்கி விட்டாயே. அவசியமில்லை என்று விட்டு விட்டேன்... ஆனால் வீட்டு விஷயங்களை வேலைக்காரர்கள் முன்னால் பேசக் கூடாது செல்வி. இதெல்லாம் அண்ணி உனக்குக் கற்றுத் தரவில்லையா? பாவம் நீ...'' என்று பரிதாபப்பட்டாள் மேனகா.

''நந்தினி என் தோழி!'' என்றாள் செல்வி ஆத்திரத்துடன்.

''சம்பளம் வாங்கும் தோழி!'' என்றாள் மேனகா கிண்டலாக... இனம் இனத்தோடு என்பார்கள், அவளும் அனாதை என்பதால் உன் மனம் அவளிடம் ஒட்டி விட்டது போலும்!'' என்று தானாகவே விளக்கம் கூறினாள் மேனகா.

இந்தக் குத்தலில் எல்லாம் நந்தினியின் மனம் செல்லவில்லை.

கீர்த்தி தினமும் மேனகாவைச் சந்தித்தான் என்றால் அவளிடமும் குலவிவிட்டுத் தன்னிடமும் சரசம் ஆடினானா?

அண்ணி சொன்னது போல நந்தினி ஏமாளிதானா? ஆனால் மேனகாவை முழுதாக நம்பவும் அவளால் முடியவில்லை.

''இதெல்லாம் எப்படியும் போகட்டும் செல்வி. நான் வந்த விஷயமே வேறே!'' என்ற மேனகா குரலைத் தணித்து, ''கதிருக்குப் பயங்கர ஆபத்து வரப் போகிறது!'' என்றாள்.

இப்போது செல்வியின் உயிர் நிலையில் அம்பு பாய்ந்தது.

''என்ன ஆபத்து?'' என்று பதறிப் போனாள்.

''இன்று நூல் விற்பனை முடிந்து பணத்துடன் அவர் திரும்பி வரும்போது அவரை அடித்துப் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு, அவரே பணத்தை அமுக்கி விட்டதாகப் போலீசிடம் ஒப்படைத்து விடுவதாகவும் ஏற்பாடு.''

''அய்யய்யோ!'' என்று கதறிவிட்டாள் செல்வி.

பிரச்சினையை நந்தினியிடம் சொல்லவும் மூளை சற்று வேலை செய்ய, ''சும்மா பயப்படாதே செல்வி. இந்த மாதிரி எல்லாம் திட்டம் போட யார் இருக்கிறார்களாம்?'' என்று தனது நம்பிக்கையின்மையை வெளிப்படையாகக் காட்டினாள் நந்தினி.

''கீர்த்தி!'' என்று அறிவித்தாள் மேனகா.

''பொய்!'' என்று மறுத்த நந்தினி, மலைத்துப் போய் நின்ற செல்வியிடம், ''நம்பாதே செல்வி. அப்படி அழிக்க விரும்புகிறவர் வைத்தியம் பார்த்து, தொழில் கற்றுக் கொடுத்து என்று இதெல்லாம் செய்வாரா? மேலும் எப்படிப்பட்ட ஆபத்திலிருந்து கதிரை அவர் காப்பாற்றி னார் என்பதை எண்ணிப் பார்,'' என்று வாதம் செய்தாள்.

''அதெல்லாம் செய்யா விட்டால் செல்வி அவரை எப்படி நம்புவாள்? காப்பாற்றகிற மாதிரி காப்பாற்றி விட்டுப் பிறகு திருடனாக்கி விட்டால் செல்வி கதிரை வெறுத்துத் தன்னை மணப்பாள் என்பது கீர்த்தியின் திட்டம்!'' என்றாள் மேனகா.



''சதி செய்கிறவர் உன்... ஊரெல்லாம் தம்பட்டம் அடித்து விட்டா செய்வார்?'' என்றாள் நந்தினி ஆத்திரத்துடன்.

''நான் அவருடைய ஒரே ஒருத்தி, ஊரெல்லாம் அல்ல. நாங்கள் சேர்ந்திருக்கும் சமயங்களில் அவர் எதையும் என்னிடம் மறைக்க மாட்டார். மேலும் இன்று கதிர் பணம் கொண்டு வரப் போனது வேறு எப்படி எனக்குத் தெரிய முடியும்?'' என்று மேனகா அடித்துப் பேச, நந்தினி வாயடைத்துப் போனாள்.

இந்த அம்பு, வீட்டுப் புறாக்கள் இருவரையும் வீழ்த்தி விட்டது.

''பெரிதாகக் கோயிலுக்கு வரச் சொல்லிக் கதிரையும் இழுத்தாரே!'' என்று பொருமினாள் செல்வி.

''கோவிலுக்குச் செல்லும் வழியில் அதிகம் ஆள் நடமாட்டம் கிடையாதல்லவா? அடிப்பது எளிது என்று திட்டமிட்டிருப்பார்!'' என்று விளக்கினாள் மேனகா.

போலீசுக்குப் போவது கதிரேசனுக்கு ஆபத்தாக முடியக் கூடுமோ என்று எண்ணி அந்தப் பேச்சையே எடுக்கவில்லை.

நல்ல வேளையாக மேனகாவும் போலீசை நினைத்தது போல் தெரியவில்லை.

''டெலிபோன் செய்து கதிரிடம் எச்சரித்து விடலாம்!'' என்றாள் நந்தினி.

டெலிஃபோனை எடுத்தால் அது உயிரற்றுக் கிடந்தது.

வெளியே எங்கேனும் சென்று டெலிபோன் செய்ய லாம் என்று நந்தினி நினைத்தபோது யோசனையில் ஆழ்ந்தாள்.

''என்ன?'' என்றாள் செல்வி பொறுமையிழந்து.

''இல்லை... வழக்கமான 'ஆக்ஷன் ஹால்' என்றால் எனக்குத் தெரியும். இது கீர்த்தியே 'செட்டப்' செய்த இடமாயிற்றே, எங்கே என்று தெரியாதே...'' என்று கைகளை விரித்தாள் மேனகா.

''செட்டப் செய்த இடத்தை உங்களுக்குக் கூடவா சொல்லவில்லை?'' என்றாள் நந்தினி குத்தலாக.

''கேட்டிருந்தால் சொல்லியிருப்பார்,'' என்று அயராது வந்த பதிலடியில் சுருண்டு போனாள்.

முடிவாக, கோயிலுக்குச் செல்லும் வழியின் தொடக்கத்தில் காத்திருந்து கதிரேசன் வரும்போது நந்தினி அவனை எச்சரிக்கலாம் என்ற மேனகாவின் யோசனைக்கு மற்ற இருவரும் தலையாட்ட நேர்ந்தது.

மூவருமாக மேனகாவின் காரில் கிளம்பினர்.

குறுக்கு வழி என்று மேனகா காரை ஓட்டிச் சென்ற வழி, முன்னே பின்னே சென்று வந்த கார்கள் எதுவும் நந்தினியின் கருத்தில் பதியவில்லை.

செல்வியின் உடல்நலம் தேறிவிட்டது. கதிரேசனைக் காப்பாற்றி விட்டால் பிறகு அவர்கள் வாழ்வு அவர்களுடைய பொறுப்பு என்று ஒதுங்கிவிட வேண்டும் என்று உறுதி செய்து கொண்ட போதும் கீர்த்தியின் வேடத்தை எண்ணி அவள் மனம் உடைந்து கொண்டே இருந்தது.

திடுமென ஒரு குலுங்கலுடன் காரை நிறுத்தினாள் மேனகா.

''கார் ரிப்பேர், டயர் போயிற்று என்று நினைக்கிறேன் இறங்கிப் பார்க்கலாம்,'' என்றாள்.

டயரைக் குனிந்து பார்க்கையில், ''நந்தினி!'' என்ற செல்வியின் கூச்சலைக் கேட்டு அவள் நிமிர்ந்தபோது காலம் கடந்து விட்டது.

பக்கவாட்டில் நிறுத்தப்பட்டிருந்த காரில் இருந்து வெளிப்பட்ட ஒருவன் நந்தினியின் பின்னந்தலையில் ஒரு தட்டுத் தட்ட அவள் மயங்கி விழுந்தாள்.



மின்னல் விரைவுடன் அவன் நந்தினியை அந்தக் காரில் தூக்கிப் போட அது பறந்தது. ''ஐயோ, மின்னிக்கா! நந்தினியை அந்தக் காரில்...'' என்று பதறிய வண்ணம் திரும்பிய செல்வி, மேனகாவின் சிரிப்பில் திகைத்தாள்.

''இனி உன் தோழி நந்தினியைப் பார்க்க வேண்டுமானால் பகதூர் பாண்டியனின் இரவு நேர இன்ப விடுதியில் போய்ப் பார். ஆனால் நீ பார்க்கும்போது அவள் எந்த நிலையில்... எத்தனை பேர் கைபட்ட எச்சிலையாக இருப்பாளோ, எனக்குத் தெரியாதம்மா? குறைந்த பட்சம் பகதூர் பாண்டியனின்...'' என்று தோளை நாசூக்காகக் குலுக்கினாள் மேனகா.

சொல்லொணாத பயங்கரத்தில் கட்டுக்கடங்காமல் துடித்த நெஞ்சை அழுத்தியபடி, ''பாவீ, பாவீ! நீ சொன்னதெல்லாம் பொய். அய்யோ! கடவுளே, மின்னிக்கா! போனதெல்லாம் போகட்டும். ஒரு நல்ல பெண்ணை அழித்து விடாதே. உன் காலில் விழுகிறேன் அக்கா. நந்தினியைக் காப்பாற்று!'' என்று மன்றாடினாள்.

''அவள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? ஏன் உனக்கும்தான் என்ன? நான் சொல்வதைக் கேள். ஐம்பதாயிரம் ரூபாய் தருகிறேன். கதிருடன் நீ மறைந்து வாழ இடவசதியும் செய்கிறேன். உனக்குப் பதினெட்டு முடிய இன்னமும் ஒரு மாதம்தான் இருக்கிறது. அதன் பிறகு வெளிப்பட்டு நீ கதிருடன் வாழ்ந்தும் விட்டதாகச் சொன்னால் கீர்த்தியால் ஒன்றும் செய்ய முடியாது. உன் மனம் போல...''

''சீ!'' என்றாள் செல்வி அருவருப்பாக.

''நீ என்ன வேண்டுமானாலும் உளறிக் கொண்டு இரு. நான் மாமாவிடம் போய்...'' என்று ஓட முயன்றவளைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளினாள் மேனகா.

''அதுவரை நீ உயிரோடு இருந்தால்தானேடி அவரிடம் சொல்ல முடியும்!'' என்று ஆங்காரத்துடன் ஒரு பெரிய கல்லைத் தூக்கினாள்.

அதற்குள்ளாகச் செல்வியின் முகம் கோணி, கை கால்கள் எல்லாம் தன் போக்கில் கண்டபடி வெட்டிக் கொள்ளவும், கல்லைக் கீழே எறிந்துவிட்டு உரக்க நகைத்தாள்.

''பரவாயில்லை. இது இன்னமும் மேலான முடிவு. என் கையால் கொலை செய்ததாக வராதில்லையா?'' என்று காலால் அவளைப் புரட்டி ஓர் ஓரமாகத் தள்ளி விட்டுக் காரை ஓட்டிச் சென்று விட்டாள்.

கண்டபடி உதறும் உடம்பில் ஓர் உறுப்பைக்கூடக் கட்டுப்படுத்த இயலாமல் நிராசையுற்று மெல்ல உணர்வை இழக்கலானாள் செல்வி.



22

மெல்லக் கண் விழித்தபோது நந்தினிக்குக் கை கால்களை அசைக்க முடியவில்லை.

கட்டிலோடு சேர்த்துக் கட்டப்பட்டு இருப்பதை உணர்ந்து ஒரு கணம் பிரமித்தாள்.

மறுகணம் எல்லாம் நினைவு வர விழிகளை மெல்லச் சுழற்றினாள்.

பார்வையில் விழுந்தவன் பகதூர் பாண்டியன்!

ஆனால் மேனகாவுக்கும் இவனுக்கும் என்ன தொடர்பு?

தொடர்பை உண்டாக்கிக் கொண்டவன் பகதூர் பாண்டியன்தான்.

போலீஸ் என்ற சொல்லில் மிரண்டு வெளியேறி விட்ட போதும் அவன் சும்மா இருக்கவில்லை.

நாயாய் அலைந்து திரிந்து உளவு பார்த்து விவரம் சேகரித்து மேனகாவைச் சந்தித்தான்.

''கீர்த்தி அவளுக்கு'' என்ற மந்திரத்தில் படிய வைத்தான். நினைத்ததை நடத்தி முடித்தான்.



நந்தினி விழித்ததை உணர்ந்து அருகில் வந்து, ''கட்டிப் போட்டிருக்கிறதே என்று பார்க்கிறாயா, கண்ணு! நீ கராத்தே படித்தவள் ஆயிற்றே. ஆனால் உனக்குப் போதை மருந்து ஏற்றப் போகிறேன். ஒரே வாரத்தில் ஒரு போதை மருந்து ஊசிக்காக நீ எனக்கு மட்டும் அல்லாமல் எத்தனை பேருக்கானாலும் இணங்குவாய்!'' என்று அவளது பட்டுக் கன்னத்தை ரசனையுடன் வருடினான்.

அவனுடைய மனைவியின் தற்கொலையின் காரணம் அப்போது புரிந்தது நந்தினிக்கு.

சினத்துடன் தலையைத் திருப்பி வருடிய கையை வலுவாகக் கடித்து விட்டாள்.

''கடிக்கிறாயா, கழுதை!''

கையை உதறி விடுவித்துக் கொண்டு ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தான் அவன்.

கண்கள் இருண்டு மயங்கும்போது கையில் ஓர் ஊசி குத்தப்படுவதை லேசாக உணர்ந்தாள் நந்தினி.

மேனகா அறியாதது விதியின் செயல்முறை.

அது அன்றைய ஏலத்தை விரைவாகவும் லாபமாகவும் முடித்துக் கதிரேசனையும் பரமசிவத்தையும் நேரே கோவிலுக்கு வருமாறு செய்தது.

சாலை ஓரமாகக் கைகால் உதறலுடன் கிடந்த பெண்ணைப் பார்த்துக் காரை நிறுத்திய கதிரேசன் அது செல்வி எனக் கண்டு பதறிப் போனான்.

அவளது நோய் அறிந்தவன் ஆதலால் நேரத்தை விரயம் செய்யாமல் வேகமாக வீட்டுக்குக் கொண்டு சென்று மருந்தைக் கொடுத்தான்.

கொஞ்சம் உடம்பு சுவாதீனத்துக்கு வந்ததும், நந்தினி - பகதூர் பற்றி மேனகா சொன்னதை எல்லாம் கண்ணைச் செருகிய தூக்கத்துடன் போராடியபடி சொல்லி முடித்தாள் செல்வி.

கீர்த்தியின் செல்வாக்கும், உயர் அதிகாரிகளின் நட்பும், அவனை விரைந்து செயல்பட வைத்தாலும், அந்தப் பெரிய கோவை மாநகரில் பகதூர் பாண்டியனின் இருப்பிடத்தை எப்படிக் கண்டு பிடிப்பது?

மேனகாவைப் பிடித்து உலுக்கியதில் அவளுக்கு மெய்யாகவே தெரியவில்லை என்று புரிந்து திகைத்தனர்.

கடைசியில் எதிர்பாராத இடத்தில் இருந்து அந்த உதவி கிடைத்தது.

பகதூரின் வீட்டில் கை கால் கட்டப்பட்டு மயங்கிக் கிடந்த நந்தினியைக் காணவும் பகதூரைத் துவைத்து எடுத்து விட்டான் கீர்த்தி.

''அவனைச் சட்டம் பார்த்துக் கொள்ளும். விடுங்கள் கீர்த்தி. சேலத்து விபசார விடுதி வழக்கில் போலீஸ் ஏற்கெனவே இவனைத் தேடிக் கொண்டு இருக்கிறது. இங்கே போதை மருந்து வேறு. நன்றாகத் தீட்டி விடலாம். இப்போது விட்டு விடுங்கள்!'' நாலு பேராகச் சேர்ந்து கீர்த்தியிடம் இருந்து பகதூரை விடுவித்தனர்.

ஒரே ஒரு ஊசியால் நந்தினி அதிகம் பாதிக்கப்பட வில்லை. அடித்துப் போட்டாற் போல ஒரு நாள் முழுவதும் தூங்கி எழுந்தபோது தலையில் சிறு வீக்கமும் லேசான பலவீனமும் தவிர வேறு ஒன்றும் இல்லை.

இப்போது செல்வி தனக்குப் பணிவிடை செய்வதைக் கண்டு சிரித்தாள்.

நடந்ததைச் சொல்லிவிட்டுக் கண்களில் குறும்பு கூத்தாட, ''இரு இரு. இப்போது மாமா வந்து உனக்குச் சரியான மண்டகப்படி நடத்தப் போகிறார்!'' என்று சுட்டு விரலைக் காட்டி மிரட்டி விட்டுப் போனாள் செல்வி.

அவசரமாக உடையையும் முகத்தையும் சீர் செய்து கொண்டு கீர்த்தியின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

கீர்த்தி வந்தபோதே அவன் முகத்தில் கடுமையைக் கண்டு பேச்சிழந்து போனாள்.



அவனாகப் பேச்சைத் தொடங்குவதாகவும் இல்லை.

அந்த மவுனத்தைத் தாங்க முடியாமல், 'என்னை மன்னித்து விடுங்கள்!' என்றாள் மெல்லிய குரலில் நந்தினி.

''எதற்கு?'' என்றான் அவன் யாரோ போல.

சற்றுத் தயங்கிவிட்டு, ''வந்து என்னால் உங்களுக்கு நிரம்பத் தொந்தரவு...'' என்றவளை மேலே பேச விட வில்லை அவன்.

அவளை இழுத்து இறுக அணைத்து, ''தொந்தரவா? முட்டாள், முழு முட்டாள், கடைசியில் என்ன மாதிரி ஆபத்தில் சிக்கிக் கொள்ள இருந்தாய்?'' என்று குமுறினான்.

சட்டென அவளை விடுவித்து, விலகி நின்று, ''ஆனால் கடைசி வரை என் மேல் நம்பிக்கை வரவில்லை அல்லவா?'' என்றான் கசந்த குரலில்.

''அது... நான் என்ன நினைப்பது என்றே தெரிய வில்லை,'' என்று தடுமாறினாள் நந்தினி.

''ஏன் தெரியவில்லை? நீ பொய் சொல்லியே வந்து சேர்ந்தபோதும் நான் உன்னிடம் நம்பிக்கை வைக்க வில்லையா? உள்ளத்தில் அன்பு இருந்திருந்தால் உனக்கும் நம்பிக்கை வந்திருக்கும். அது இருந்தால்தானே!'' என்றான் அதே கசப்புடனேயே அவன்.

''அப்படி இல்லை... எனக்கிருந்த சூழ்நிலை சந்தர்ப்பம்...''

''என்ன சூழ்நிலை? என்ன சந்தர்ப்பம்?'' என்றான் அவன் கோபமாகவே.

ஒரேயடியாக விரட்டுகிறானே, இவனே சொல்ல வில்லையா?

''நான் ஒன்றும் இன்னொருவரை மணக்கப் போவதாக உங்களிடம் சொல்லவில்லையே!'' என்றாள் எரிச்சலோடு.

''அதன் காரணம்தான் முழுமையாக உன்னிடம் சொன்னேனே. அக்காவுக்குக் கொடுத்த வாக்குறுதி

எல்லாம் சொன்னேனே, அன்று செல்வியைப் பார்த்தாய் அல்லவா? அந்த உதறல் அவள் அளவு மீறி மனதை அலட்டிக் கொள்ளும் எந்த நேரத்திலும் வரக் கூடிய நோய். கட்டாயம் வரும் என்றில்லாவிட்டாலும், வராது என்ற நிச்சயம் ஒரு நாளும் இல்லை.

''திருமணம் என்றால் முதல் நாளில் இருந்து மனதை அலட்டிக் கொள்ள எத்தனை வாய்ப்புகள். புதியவன் அனுசரணையாக நடந்து கொள்ளக் கூடும் என்று எப்படி நம்புவது? அறிந்தவர்களே பொய்த்து விடவில்லையா?''

''அதற்காக அவளுக்கு விருப்பம் இல்லை என்று தெரிந்த பிறகுமா அந்தப் பிடிவாதம்?''

''உலகம் தெரியாத சின்னப் பெண். பொறுமையாக அன்பு காட்டினால் நாளாவட்டத்தில் புரிந்து கொள்வாள், எல்லாம் சரியாகி விடும் என்று நம்பினேன். ஆனால் உன்னைப் பார்க்கப் பார்க்க - ஏன், கதிரைப் பற்றி நம்பிக்கை சொன்னேனே, அவனே அவ்வளவு தயார். ஆனால் மூளை என்று ஒன்று இருந்தால்தான் ஏறுவதற்கு? மற்றதை விடு. அன்று மனம் விட்டுப் பேசிய பிறகு கதிரின் அறைக்குள் செல்லும்போது உன்னையும் அழைத்துச் சென்றேன். ஏன்? அவனிடம் பயந்து போய்த் துணைக்கு உன்னை அழைத்துச் சென்றேன் என்று நினைத்தாய் போலும்,'' அவன் கோபத்தில் மேலும் மட்டம் தட்டினான்.

அவன் பேசப் பேசத் தான் நடந்து கொண்ட விதம் படுட்டாள் தனமாகத் தெரிந்தது நந்தினிக்கு. ஆனாலும் -

''மே... மேனகா வேறு...'' என்றாள் மெதுவாக.

அவன் முகம் கறுத்தது. ''செல்வி சொன்னாள், வசிய மருந்து, விஷம் என்று. என்ன பைத்தியக்காரத்தனம்! அதையெல்லாம் நம்புவது என்றால் எவ்வளவு வடி கட்டின முட்டாள்தனம்!''

''நான் நம்பவில்...'' எனும்போதே நந்தினியின் குரல் தேய்ந்து விட்டது.



கடைசியில் அவளும் தானே மேனகாவின் வலையில் விழுந்து விட்டாள்.

''மெய்யாகவே வருத்தப்படுகிறேன், கீர்த்தி!'' என்றாள் தணிவாக.

''பட வேண்டியவள்தான்!'' என்றான் அவன் கோபம் தணியாமலேயே.

நந்தினிக்கு அழுகை வரப்பார்த்தது, ஆத்திரமும்தான். மன்னிப்புக் கேட்டாயிற்று.

கஷ்டப்பட்டவளும் அவள்தான்.

தலையில் அடி, மயக்க ஊசி, அந்தக் கிராதகன், ச்சு..! எத்தனை துன்பம்!

''இன்னும் என்னதான் செய்ய வேண்டும்? காலில் வேண்டுமானால் விழட்டுமா?'' என்றாள் விழிநீரையும் சினத்தையும் அடக்க முயன்றபடி.

ஒரு கணம் அவளைக் கூர்ந்து நோக்கிவிட்டு, ''இங்கே வா,'' என்றான் அவன்.

அவள் அருகில் வந்ததும், ''காலில் விழ வேண்டாம். ஆனால்...'' என்று கைகளை விரித்து லேசாக முறுவலித்தான்.

கன்னங்கள் சிவந்தபோதும் அந்தக் கைகளுள் சிறைப்பட அவள் சற்றும் தயங்கவில்லை.

ஆனால் உள்ளூர நெருடிய விஷயத்தைக் கேளாமலும் அவளால் இருக்க முடியவில்லை.

''கதிர் நூல் விற்பனைக்குச் சென்றது மேனகாவுக்கு எப்படித் தெரியும்?'' என்று மெல்லக் கேட்டாள்.

''ஏன் அதில் என்ன மர்மம்? மில்லின் நிர்வாகப் பயிற்சியை ரகசியமாகவா கொடுக்க முடியும்? மேலும் பரமசிவம் அவளுடைய மில்லுக்குத்தானே ஏஜண்ட். இவளே கேட்டுக் கூட அறிந்து இருக்கலாம். இதில் ஒளிவு மறைவு என்ன?'' என்று அவன் சர்வ சாதாரணமாகச் சொல்ல, அவள் அதிர்ந்து போனாள்.

''ஓ...ஓ! ஆனால் அதில்தான் நானும், செல்வியும் ஏமாந்து விட்டோம்!'' என்று விவரம் சொன்னாள் நந்தினி.

''இதற்காகத்தான் நாலு விஷயங்களைப் பெண்களும் அறிந்திருக்க வேண்டும் என்பது. சும்மா கதைப் புத்தகமும், வம்பளப்புமாக இருக்கிறீர்களே தவிர உருப்படியாக ஏது?'' என்றான் ஏளனமாக.

அவள் பேசாமல் தலை குனிந்து நிற்கவும் சற்று இளகினான்.

அவள் முகத்தை நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டு, மேனகா பற்றிச் சொன்னான்.

''மின்னியின் அப்பா பற்றி உனக்குத் தெரியாது நந்தினி. அவர் அப்படி ஒரு பெரிய மனிதர். அவரிடம் தான் நான் தொழில் படித்ததே. மின்னி பற்றி அவருக்கு ஒரே கவலை. நான் பார்த்துக் கொள்வதாகச் சொன்ன பிறகு கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறார். ஆனால், இவள்தான்...'' என்று தோளைக் குலுக்கினான்.

குறும்பு மிளிரும் விழிகளைத் தாழ்த்தி, ''ஆச்சரியமாயில்லை! எல்லோரும் அவரவர் பிள்ளைகளை முக்கியமாகப் பெண்களை உங்களிடம் ஒப்படைப்பது?'' என்று வியந்தாள் நந்தினி.

சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''நல்ல மனிதர்களைக் கண்டால் பொறுப்பை ஒப்படைப்பது இயல்புதானே!'' என்று சீண்டினான் அவன்.

''நல்ல மனிதரா? யாரது?'' என்று அவள் விழிகளைச் சுழற்ற, 'சில பேருக்குக் கண் முன்னே இருப்பவர்களைக் கூடக் கண்டு கொள்ளத் தெரிவதில்லை!'' என்று வருத்தப் பட்டான் அவன்.

''நல்...ல மனிதர் என்கிறீர்களே, அப்படி யாரையும் என் கண் முன்னே காணோமே...''

''உன் கண்களை ஒரு நல்ல டாக்டரிடம் பரிசோதித்து விட்டால் பிறகு தெரியும்.''

''ரொம்ப பெரிய டாக்டர்தான் நல்லது கெட்டதைக் கூடக் கண்ணால் பார்க்க வைப்பார் போலிருக்கிறது. அது யார் அந்த டாக்டர்?'' என்று கேலியாகக் கேட்டாள் நந்தினி.



''நானேதான். இந்த டாக்டருக்குப் பிடித்த பொன்மொழி என்ன தெரியுமா? அடி உதவுகிற மாதிரி அண்ணன் தம்பி உதவ மாட்டான்.''

''நோயாளிகளுக்குப் பஞ்சமே இராது!'' என்று சிரித்தாள் அவள்.

''அந்தந்த நோய்க்கு உரிய மருந்து!'' என்று இணைந்து சிரித்தவன் சட்டென முகம் மாறினான்.

''என்னை அவ்வளவு பொல்லாதவன் என்று எண்ணினாயே, உனக்கு உதைதான் சரியான மருந்து. ஆனால், ஒரு பெண்ணை அதிலும் மனைவியாகப் போகிறவளை அடிப்பது அசிங்கம் என்றுதான் விடுகிறேன்!'' என்றான் கொஞ்சம் கோபமாகவே.

மற்றதெல்லாம் மறக்க, ''நிஜமாகவா?'' என்று கண்கள் ஒளிர வினவினாள் நந்தினி.

வேண்டுமென்றே, ''எது? அடிக்கக் கை துடிப்பதா? நூற்றுக்கு நூறு நிஜம்!'' என்றான் அவன்.

''ஷ்... அதில்லை ம... மனைவியாகப் போகிறவள் என்றது...''

''இப்போது இரு மடங்கு உதை வாங்க வேண்டியவள் ஆகிவிட்டாய். கல்யாணம் பண்ணிக் கொள்ள எண்ணாமலா இப்படி அணைப்பேன் என்று நினைத்தாய்?'' என்று அதட்டியவன் விளையாட்டை விட்டுச் சொன்னான்.

''இரண்டு நாள் வெளியூர் சென்றது எங்கே என்று நினைத்தாய். சென்னைக்குத்தான். அங்கே சசியைப் பிடித்து, உன் அண்ணனிடம் நம் திருமணம் பற்றிப் பேசிவிட்டு வந்தேன். வந்து பார்த்தால்...''

சட்டென எலும்பு நொறுங்கி விடும் போல அவனது அணைப்பு இறுகிப் போயிற்று.

''உன் அண்ணி மட்டும் சரியான நேரத்தில் உதவவில்லை என்றால்...''

''அண்ணியா?''

"உன்னை எங்கு தேடுவது என்று தெரியாமல் மலைத்த போது, அவள் மூலம்தான் பகதூரின் முகவரி தெரிய வந்தது."

நந்தினி... கீர்த்தி வாசன் திருமணத்தின் போது பெரிய வயிற்றைப் பொருட்படுத்தாமல் ஓடியாடி வேலை செய்த மாலினியைப் பார்த்தாள் நந்தினி.

அவள் சொன்னாள், "சேலம் விபசார விடுதி வழக்கில் பகதூர் சித்தப்பா பற்றி செய்தி வந்ததும் உன் அண்ணன் இடிந்து போனார். அந்த ஆளுக்கு நந்தினியைக் கொடுத் திருந்தால் தற்கொலை செய்திருப்பேன் என்று அவர் சொல் லவும், நான் ஆடிப்போய் விட்டேன். அவர் இல்லாமல் எனக்கு என்று என்ன இருக்கிறது? போதும். உடனேயே என்னிடம் பெரிய வரவேற்பை எதிர்பார்க்காதே ஆனால் உன் அண்ணனின் மகிழ்ச்சிக்காக உன்னிடம் அன்பா யிருக்க முயற்சி செய்யப் போகிறேன்."

"நந்தும்மா... நந்தும்மா...!" என்று குழைந்த அண்ணனை முகத்தில் முறுவலுடனேயே மாலினி நோக்குவதைக் காணவும், அவள் பேச்சு உண்மையென உணர்ந்து மனம் பூரித்துப் போயிற்று நந்தினிக்கு.

அன்று இரவில் கண்கள் பளபளக்க, கணவனிடம் இதைச் சொல்லி அவள் வியந்தபோது, அன்பின் சக்தியை அவனும் ஒத்துக் கொண்டான்.

"அன்புக்கு மகத்தான சக்தி இல்லாவிட்டால் என் ஆயிரம் திட்டங்களையும் தவிடு பொடியாக்கி உன்னைப் போய் மணக்க வைத்திருக்க முடியுமா?" என்று வருத்தம் போலச் சொன்னான்.

அவனோடு இணைந்து அதே குரலில், "ஆமாமாம். பாவம்தான். ஆனால், இனி என்ன செய்வதாம்?" என்று கூறிவிட்டு, அடக்க மாட்டாமல் நகைத்த மனைவியின் செவ்விதழ்களில் ஆசையுடன் முத்தமிட்டு "இதைத் தான்!" என்று கிசுகிசுத்தான் கீர்த்திவாசன்.